இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 82 – ஒலி: 64 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – புரட்டாசி 26 – வெள்ளிக்கிழமை 13 அக்டோபர் 2023 – கோவை ★★ 12 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 82 - Issue 64: Thiruvalluvar Year - 2054 - Purattasi 26 - Friday 13 October 2023 - Kovai ★★ 12 Pages ₹ 5.00


## ‘பசுமைப் புரட்சியின் தந்தை’ - வேளாண் விஞ்ஞானி எம்.எஸ்.சுவாமிநாதன் பெயரில் விருதுகள்!

# தஞ்சை வேளாண் கல்லூரிக்கு - எம்.எஸ்.சுவாமிநாதன் பெயர்!

## சட்டப் பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, அக். 13-**

**வேளாண் விஞ்ஞானி டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களின் அளப்பரிய பணிகளை நினைவுகூரும் வகையில், சட்டப் பேரவையில், நேற்று முன்தினம் விதி எண். 110ன்கீழ் சில அறிவிப்புகளை வெளியிட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரையில்,**

**“தஞ்சை வேளாண் கல்லூரிக்கு - ‘பசுமைப் புரட்சியின் தந்தை’ எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்களின் பெயர் சூட்டப்படும்” என்றும், “தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் இளம் வேளாண் அறிவியலில் பயிர்ப்பெருக்கம் மற்றும் மரபியல் பாடங்களில் அதிக மதிப்பெண் பெற்று முன்னிலை பெறும் மாணவருக்கு ‘டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன்’ பெயரில் ஆண்டுதோறும் விருது வழங்கப்படும்” என்றும் அறிவித்தார்.**

**சட்டப்பேரவையில் நேற்று முன்தினம் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், பேரவை விதி 110ன்கீழ் ஆற்றிய உரை வருமாறு: -**

இந்திய ஒன்றியம் உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெறுவதற்கும், இந்திய மக்களின் பட்டினிச் சாவைத் தடுப்பதற்கும் 1960களில் பசுமைப் புரட்சித் திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்தியவரான மறைந்த வேளாண் விஞ்ஞானி டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்களின் அளப்பரிய பணிகளை நினைவுகூரும் வகையில் விதி எண். 110இன்கீழ் அறிவிப்பை வெளியிடுவதில் நான் பெருமைப் படுகிறேன்.

**வேளாண் அறிவியலில் உலகளவில் புகழ் பெற்றவர்!**

வேட்டைச் சமூகமாக இருந்த மனித இனம், வேளாண் தொழிலைத் தேர்ந்தெடுத்தது என்பது மனித இனத்தின் பரிணாம வளர்ச்சி என்பதுடன் அறிவியல் வளர்ச்சியின் அடையாளமும் ஆகும்.

வேளாண் அறிவியலை இருபதாம் நூற்றாண்டில் இந்தியாவுக்கு ஏற்றவாறு பயன்படுத்தும் பல்வேறு ஆராய்ச்சிகளை வெற்றிகரமாக நிகழ்த்திக் காட்டி உலகளவில் புகழ் பெற்றவர் டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்கள்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.10.2023) சட்டமன்றப் பேரவையில், பசுமைப் புரட்சியின் தந்தை என்று போற்றப்படும் மறைந்த வேளாண் அறிவியலாளர் எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்களின் அளப்பரிய பணிகளை நினைவுகூரும் வகையில், தஞ்சாவூர் மாவட்டம், ஈச்சங்கோட்டையில் உள்ள வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திற்கு டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் என்று பெயர் சூட்டப்படும் என்றும், வேளாண் அறிவியல் மாணவர்களுக்கு டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களின் பெயரில் விருதுகள் வழங்கப்படும் என்றும் சட்டப்பேரவை விதி 110–ன்கீழ் அறிவிப்பு வெளியிட்டார்.

தமிழ்நாட்டில் முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சியில் வேளாண் பல்கலைக்கழகம் நிறுவப்பட்டு, வேளாண் ஆராய்ச்சி மையங்கள் அதிகளவில் உருவாக்கப்பட்டு, உணவு உற்பத்தியில் புரட்சியும், அதனை அனைவருக்கும் பகிர்ந்தளிப்பதற்கான செயல்முறைத் திட்டமும் மேற்கொள்ளப்பட்டது. இன்றளவிலும் இந்தியாவின் வெற்றிகரமான மாடலாக இருப்பது முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சிக் காலத்து மாடல்தான். இந்தப் பங்களிப்பில் அறிவியலாளர் டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்களின் ஆலோசனைகளும் இணைந்திருக்கின்றன.

இன்று காலநிலை மாற்றம்தான் பெரிய பிரச்சினையாக மாறிக் கொண்டு இருக்கிறது. இதனை முன்கூட்டியே உணர்ந்து, காலநிலை மாற்றம் குறித்து 1969ஆம் ஆண்டிலேயே இந்திய அறிவியல் மாநாட்டில் பேசி இருக்கிறார். உலகம் அதிகமாக வெப்பமாவதால் கடல் மட்டம் உயரும் என்பதையும் 1989ஆம் ஆண்டு டோக்கியோ மாநாட்டில் எச்சரிக்கை விடுத்தார்.

**கலைஞர் மறைவின்போது - உருக்கமான இரங்கற்குறிப்பு பதிவு செய்தவர்!**

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மீது அளப்பரிய அன்பு கொண்டவரான திரு. எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்கள், தலைவர் கலைஞர் மறைவின்போது மிக உருக்கமான இரங்கற்குறிப்பையும் பதிவு செய்திருந்தார். தன்னுடைய பெயரிலான எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி அறக்கட்டளைக்கு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் நிலம் தந்து உதவியதையும், ஜே.ஆர்.டி. டாடா பெயரிலான சுற்றுச்சூழல் தொழில்நுட்ப மையத்தை இந்தியாவின் குடியரசுத் தலைவராக இருந்த கே.ஆர். நாராயணன் அவர்களுடன் இணைந்து முத்தமிழறிஞர் கலைஞர் திறந்து வைத்ததையும் நன்றிப் பெருக்குடன் பதிவு செய்துள்ளார்.

> **“தமிழ்நாட்டில் முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சியில் வேளாண் பல்கலைக்கழகம் நிறுவப்பட்டு, வேளாண் ஆராய்ச்சி மையங்கள் அதிகளவில் உருவாக்கப்பட்டு, உணவு உற்பத்தியில் புரட்சியும், அதனை அனைவருக்கும் பகிர்ந்தளிப்பதற்கான செயல்முறைத் திட்டமும் மேற்கொள்ளப்பட்டது. இன்றளவிலும் இந்தியாவின் வெற்றிகரமான மாடலாக இருப்பது முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சிக் காலத்து மாடல்தான். இந்தப் பங்களிப்பில் அறிவியலாளர் டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்களின் ஆலோசனைகளும் இணைந்திருக்கின்றன.”**

**‘விஞ்ஞானிகளின் விஞ்ஞானி’ என முத்தமிழறிஞர் கலைஞரைப் பாராட்டியவர்!**

தமிழ்நாட்டிற்கான உயிரி தொழில்நுட்பக் கொள்கையை உருவாக்கியவரும் முத்தமிழறிஞர் கலைஞர்தான் என்பதைக் குறிப்பிட்டுள்ள எம்.எஸ். சுவாமிநாதன் அவர்கள், கலைஞரின் ஆட்சி எப்போதும் உழவர்கள் நலன் நாடும் ஆட்சியாகவே இருந்தது என்பதையும், விஞ்ஞானிகளின் விஞ்ஞானியாக முத்தமிழறிஞர் கலைஞர் திகழ்ந்தார் என்றும் பாராட்டியுள்ளார்.

2021இல் எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி அறக்கட்டளை சார்பில் நடந்த பன்னாட்டுக் கருத்தரங்கைத் தொடங்கி வைக்கும் வாய்ப்பு எனக்கு அமைந்த போது, அவருடைய பணிகளைப் பாராட்டிப் பேசினேன். தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு இன்றைய அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளையும், இந்த அரசை வழி நடத்தும் பொறுப்பை ஏற்றுள்ள முதலமைச்சராகிய என்னையும் அவர் பாராட்டி, வளர்ச்சிக்கான ஆலோசனைகளை வழங்கினார்.

‘பசுமைப் புரட்சியின் தந்தை’ எனப் போற்றப்படும் டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்கள் 28.9.2023 அன்று மறைவெய்தியபோது அவரது உடலுக்கு நேரில் அஞ்சலி செலுத்தியதுடன், அரசின் சார்பில் அவருக்கு இறுதி மரியாதை செலுத்தப்பட்டது.



தமிழ்நாட்டைச் சேர்ந்த வேளாண் விஞ்ஞானியான டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன், இந்திய அளவில் முத்திரை பதித்து, உலகளவில் புகழ் பெற்றவர். பத்மவிபூஷன், ரமோன் மகசசே உள்ளிட்ட உயரிய விருதுகளைப் பெற்றுள்ள அவரது நினைவைப் போற்றுகிற வண்ணம் தமிழ்நாடு அரசின் சார்பில் அறிவிப்பை வெளியிடுகிறேன்.

**எம்.எஸ்.சுவாமிநாதன் பெயரில் கல்லூரி - ஆராய்ச்சி நிலையம் - விருது!**

தஞ்சாவூர் மாவட்டம் ஈச்சங்கோட்டையிலுள்ள வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் இனி, ‘டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்’ என்று அழைக்கப்படும்.

அதேபோல், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் இளம் வேளாண் அறிவியலில் பயிர்ப்பெருக்கம் மற்றும் மரபியல் பாடங்களில் அதிக மதிப்பெண் பெற்று முன்னிலை பெறும் மாணவருக்கு டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்கள் பெயரில் ஆண்டுதோறும் விருது வழங்கப்படும் என்பதை அறிவிப்பதில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறேன் என்பதைத் தெரிவித்து அமைகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

### கர்நாடகாவிடமிருந்து காவிரி நீரைப் பெற்றுத் தராத ஒன்றிய அரசைக் கண்டித்து

# டெல்டா மாவட்ட விவசாயிகள் கடையடைப்பு - பேரணி!

## பல ஆயிரம் பேர் பங்கேற்பு!

*தஞ்சை, அக்.13-*

காவிரியில் தண்ணீர் திறந்து விட மறுக்கும் கர்நாடகா, நடவடிக்கை எடுக்க மறுக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசுகளைக் கண்டித்து டெல்டா மாவட்டங்களில் நேற்று முன்தினம் கடையடைப்பு போராட்டம் நடைபெற்றது.

தஞ்சையில் எல்.ஐ.சி. அலுவலகத்தை முற்றுகையிட்டு காவிரி படுகை பாதுகாப்பு கூட்டியக்கம் சார்பில் ஆயிரக்கணக்கானோர் போராட்டத்தில் ஈடுபட்டனர். தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநிலத் தலைவர் சண்முகம் தலைமையில் பழைய பேருந்து நிலையம் அருகில் இருந்து புறப்பட்ட பிரமாண்ட பேரணி, ஆற்றுப்பாலம் வழியாகச் சென்று காந்திஜி சாலையில் உள்ள எல்.ஐ.சி. அலுவலகத்தை சென்றடைந்தது. அங்கு சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட ஏராளமானோர் தொடர் முழக்கங்களை எழுப்பினர்.

இப்போராட்டத்தில் தி.மு.க., காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, திராவிடர் கழகம் உள்ளிட்ட பல்வேறு அமைப்பினர் கலந்துகொண்டனர்.

இப்பிரச்சினையில் தீர்வு இல்லை என்றால் அடுத்தக்கட்டமாக மாநில அளவில் போராட்டம் நடத்தப்படும் எனவும் விவசாயிகள் தெரிவித்தனர்.

இதேபோல் திருச்சி பி.எஸ்.என்.எல். அலுவலகம் முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. தி.மு.க. உள்ளிட்ட கூட்டணி கட்சிகள் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்று ஒன்றிய மற்றும் கர்நாடக அரசுகளைக் கண்டித்து கண்டன முழக்கங்களை எழுப்பினர்.

நாகை மாவட்டத்தில் 65 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கடைகளை அடைத்து வர்த்தகர்கள் முழு கடையடைப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். நாகை, நாகூர், வேளாங்கண்ணி, வேதாரண்யம், கீழ்வேளூர், கீழையூர், திருமருகல், திட்டச்சேரி உள்ளிட்ட பகுதிகளில் அனைத்து கடைகளும் அங்கு அடைக்கப்பட்டுள்ளதால், அப்பகுதி முழுவதும் வெறிச்சோடி காணப்பட்டது.

நாகப்பட்டினம் மாவட்டம் வேதாரண்யம் தலைமை தபால் அலுவலகம் முன்பு நகர மன்றத் தலைவர் புகழேந்தி தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் தி.மு.க. கூட்டணி கட்சியினர் மற்றும் விவசாயிகள் என ஏராளமானோர் பங்கேற்றனர்.

வேளாங்கண்ணி தபால் நிலையம் முன்பு கீழையூர் கிழக்கு ஒன்றிய தி.மு.க. செயலாளர் தாமஸ் ஆல்வா எடிசன் தலைமையிலும், வேளாங்கண்ணி பேரூர் தி.மு.க. செயலாளர் மரிய சார்லஸ் முன்னிலையிலும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

கடலூர் மாவட்டம் காட்டு மன்னார்கோயில் தாலுகாவில் கர்நாடக அரசைக் கண்டித்தும், காவிரியில் தண்ணீர் திறந்து விட வலியுறுத்தியும் போராட்டம் நடைபெற்றது.

விவசாயிகளுக்கு ஆதரவாக சுமார் 2 ஆயிரத்து 500 கடைகள் அடைக்கப்பட்டிருந்தன. காட்டு மன்னார்கோயில் தி.மு.க. மேற்கு ஒன்றியச் செயலாளர் முத்துசாமி தலைமையில் கம்யூனிஸ்ட், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியினர் மற்றும் விவசாய சங்கத்தினர் பேரணியாகச் சென்று காட்டுமன்னார் கோயில் தபால் நிலையம் முன்பு முழக்கங்களை எழுப்பினர்.

திருவாரூர் மாவட்டம் கொரடாச்சேரியில் காவிரியில் உரிய தண்ணீரை திறந்து விட மறுக்கும் கர்நாடக அரசைக் கண்டித்தும், தண்ணீர் திறந்துவிட ஒன்றிய பா.ஜ.க. அரசை வலியுறுத்தியும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. கொரடாச்சேரி வெட்டாற்று பாலத்தில் இருந்து தபால் நிலையம் வரை ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பேரணியாகச் சென்று கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

**அமைச்சர் துரைமுருகன் பேட்டி!**

இதனிடையே நேற்று முன்தினம் செய்தியாளர்களைச் சந்தித்த நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் காவிரி விவகாரத்தில் தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்தவே டெல்டா மாவட்டங்களில் விவசாயிகள் போராட்டம் நடத்தி வருவதாக தெரிவித்துள்ளார்.



இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 13-10-2023

# பழனிசாமியின் காவிரி துரோகங்கள் 1

'காவிரிப் பிரச்சினைக்காக துணிச்சலாகச் செயல்பட்டது அ.தி.மு.க. அந்தத் துணிச்சல் உங்களுக்கு எங்கே போனது?' என்று கேட்கிறார் பழனிசாமி. நாடாளுமன்றத்தையே 22 நாட்கள் நடுங்க வைத்ததாம் அ.தி.மு.க. புதிய புளுகு மூட்டையை அவிழ்த்திருக்கிறார் பழனிசாமி!

**நாடாளுமன்றத்தை இவர்கள் காவிரிப் பிரச்சினைக்காக முடக்கவில்லை. நாடாளுமன்றத்தை முடக்கியது பா.ஜ.க.வுக்கு எதிரான எதிர்க்கட்சிகள்தான். 2018 ஆம் ஆண்டு ரஃபேல் ஊழல் அம்பலம் ஆனது. அதற்கு பதில் சொல்ல பிரதமரை வலியுறுத்தினார்கள் எதிர்க்கட்சிகள். அவர் பதில் சொல்லவில்லை. ஆந்திராவைச் சேர்ந்த எம்.பி.களும் பா.ஜ.க. அரசு மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்தார்கள். அப்போது பா.ஜ.க.வின் தொங்கு சதையாக இருந்த அ.தி.மு.க.வை அந்தக் கட்சி பயன்படுத்தியது.**

**'காவிரிப் பிரச்சினையைச் சொல்லி திசை திருப்புங்கள்' என்று சொன்னார்கள். எனவே அ.தி.மு.க.வும் அதைப் பேசியதே தவிர, இவர்களால் நாடாளுமன்றம் முடக்கப்படவில்லை.**

'காவிரி ஆணையத்தை அமைக்காவிட்டால் பா.ஜ.க.வுக்கு எதிராக நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தில் வாக்களிப்போம் என்று அ.தி.மு.க. சொல்ல வேண்டும்' என்று சொன்னதற்காக கே.சி.பழனிசாமியை நீக்கியவர்தான் எடப்பாடி பழனிசாமி. இந்த துரோக வரலாறு அவருடையது.

காவிரியில் இருந்த உரிமையை ஒன்றிய பா.ஜ.க. அரசிடம் அடகு வைத்த அரசுதான் பழனிசாமி தலைமையிலான அ.தி.மு.க. அரசு. இன்றைக்கு ஒன்றிய அரசிடம் கோரிக்கை வைக்கக் கூடாது என்று பழனிசாமி சொல்கிறார். ஒன்றிய அரசிடம் கோரிக்கை வைக்கும் நிலையை உருவாக்கியதே பழனிசாமிதான்.

**2021 ஆம் ஆண்டு செப்டம்பர் இறுதியில்தான் காவிரி மேலாண்மை ஆணையத்துக்கு முழுநேரத் தலைவர் நியமிக்கப்பட்டார். 2018ஆம் ஆண்டு முதல் மூன்று ஆண்டுகளாக முழுநேரத் தலைவர் நியமிக்கவே இல்லை. நியமிக்காமல் ஒன்றிய பா.ஜ.க. அரசு அடம்பிடித்தது. அதனைத் தட்டிக் கேட்காமல் பழனிசாமியின் அரசு தலையாட்டிக் கொண்டுதான் இருந்தது.**

"காவிரி மேலாண்மை வாரியத்தை அமைக்க மாட்டோம்" என்று உச்சநீதிமன்றத்தில் சொன்ன அரசுதான் பா.ஜ.க. அரசு. உச்சநீதிமன்றம் அதில் உறுதியாக இருந்ததால் அதை வேறு வழியில்லாமல் ஏற்றுக் கொண்டார்கள். அப்படி ஏற்றுக் கொண்டாலும் அதனை தனித்த அதிகாரம் பொருந்திய அமைப்பாக உருவாக்கி விடாமல் தட்டிக் கழித்து வந்தார்கள். ஒன்றிய அரசின் ஜல்சக்தித் துறையின் கிளை அமைப்பாக மாற்றினார்கள். அத்தகைய காவிரி மேலாண்மை ஆணையத்துக்கு ஒரு நிரந்தர, முழுநேரத் தலைவரைக் கூட நியமிக்காமல் மூன்றாண்டு காலமாக காலம் கடத்தி வந்தது பா.ஜ.க. அரசு. தமிழ்நாட்டில் ஆட்சி மாற்றம் நடந்து, முதன் முதலாக டெல்லி சென்ற தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், பிரதரிடம் 25 கோரிக்கைகள் அடங்கிய மனுவைக் கொடுத்தார்.

ஒன்றிய நீர்வளத்துறை ஆணையரையே, காவிரி மேலாண்மை ஆணையத் தலைவராக கூடுதல் பொறுப்பு கொடுத்திருந்ததை மாற்றி, காவிரி மேலாண்மை ஆணையத்துக்கு நிரந்தர, முழுநேர, முழுமையான தலைவரை நியமிக்க பிரதமரை வலியுறுத்தினார் முதலமைச்சர். இதைத் தொடர்ந்து 2021ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 28ஆம் தேதியன்று சவுமித்ரா குமார் ஹல்தார் இதன் முழுநேரத் தலைவராக நியமிக்கப்பட்டார்.

"தமிழ்நாடு, கர்நாடகா, கேரளா, புதுச்சேரி ஆகிய நான்கு மாநிலங்களும் காவிரி மேலாண்மை வாரியத்தில் பங்கேற்கும் தங்களது பிரதிநிதிகளின் பெயரை நாளை மாலைக்குள் மத்திய அரசுக்குத் தெரியப்படுத்த வேண்டும். மத்திய அரசு நான்கு நாட்களுக்குள் ( 4.10.2016) காவிரி மேலாண்மை வாரியத்தை அமைக்க வேண்டும்" என்று உச்சநீதிமன்றம் உத்தரவு போட்டது. இதனை உச்சநீதிமன்றத்தில் ஏற்றுக் கொண்டு போன ஒன்றிய அரசின் வழக்கறிஞர், ஒரு வார காலத்தில் தலைகீழாக ஒரு மனுவைத் தாக்கல் செய்தார்.

"காவிரி மேலாண்மை வாரியம் அமைப்பது உள்ளிட்ட நடுவர் மன்றத்தின் உத்தரவுக்கு நாடாளுமன்றத்தின் இரு அவைகளின் ஒப்புதல் வேண்டும். மாநிலங்களுக்கு இடையிலான நதிநீர் தகராறு சட்டத்தில் இதற்கான பல்வேறு விதிகள் இருக்கிறது. எனவே இதுகுறித்து உத்தரவிட உச்சநீதிமன்றத்துக்கே அதிகாரம் இல்லை. எனவே உச்சநீதிமன்றம் இந்த உத்தரவை திரும்பப் பெற வேண்டும்" என்று அந்த மனுவில் குறிப்பிடப்பட்டது. "ஒரு வாரத்துக்கு முன் ஏற்றுக் கொண்டு, இன்று மாற்றி ஏன் மனு போடுகிறீர்கள்?" என்று நீதிபதிகள் கேட்டார்கள். 'தவறாக ஒப்புதல் தெரிவித்து விட்டதாக' பா.ஜ.க. அரசின் வழக்கறிஞர் சொன்னார்.

'இந்த விவகாரத்தில் நீங்கள் தலையிட வேண்டாம், நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்' என்று, ஒன்றிய அரசின் வழக்கறிஞர் உச்சநீதிமன்றத்தில் 18.10.2016 அன்றும் சொன்னார். நான்கு மாநில அரசுகளும் பா.ஜ.க. அரசின் நிலைப்பாட்டை கடுமையாக எதிர்த்தார்கள். மேல்முறையீட்டு மனுக்களை விசாரிக்க உச்சநீதிமன்றத்துக்கு அதிகாரம் உண்டு என்று 9.11.2016 அன்று உச்சநீதிமன்றம் மகத்தான தீர்ப்பை அளித்தது. இதைத் தொடர்ந்து காவிரிப் பிரச்சினையை 2017 ஆம் ஆண்டு ஜூலை 11 முதல் செப்டம்பர் 20 வரையில் மொத்தம் 27 நாட்கள் விசாரணை நடத்தியது உச்சநீதிமன்றம்.

இதனிடையே ஜெயலலிதா மரணம் அடைந்து பழனிசாமி முதலமைச்சர் ஆக்கப்பட்டு விட்டார். (2017 பிப்ரவரி 14) ஓராண்டு கழித்து 2018 பிப்ரவரி 16 தான் உச்சநீதிமன்றத்தின் இறுதித் தீர்ப்பு வெளியானது. அப்போது தமிழகத்தின் தரப்பு வாதங்களை முறையாக, சரியாக வைக்க பழனிசாமியின் அரசாங்கம் தவறி விட்டது.

**- தொடரும்**

## கணித் தமிழ் 24 பன்னாட்டுக் கணித்தமிழ் மாநாடு!

# தமிழ்நாடு அரசின் சார்பில் 2024 பிப்ரவரியில் நடைபெறும்!

## முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை,அக்.13 -**

**தமிழ்நாடு அரசின் 2023-2024 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில், 'தமிழ்க் கணினி பன்னாட்டு மாநாடு' நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அந்த அறிவிப்பினைத் தொடர்ந்து 2024 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் தமிழ்நாடு அரசின் சார்பில் தமிழ் இணையக் கல்விக்கழகம் மூலம் 'கணித்தமிழ்24' மாநாடு நடத்தப்படும் என தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.**

வளர்ந்துவரும் தொழில்நுட்பங்களில் தமிழின் நிலை குறித்து ஆராய்தல், விவாதித்தல், புதிய சிந்தனைகளை உருவாக்குதல், இளம் திறமைகளை அடையாளம் காணுதல் உள்ளிட்ட இலக்குகளோடு பன்னாட்டுக் கணித்தமிழ் மாநாடு நடத்திட தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் தலைமையில் 1999-இல் 'தமிழ்இணையம்99' மாநாடு வெற்றிகரமாக நடத்திமுடிக்கப்பட்டு 25 ஆண்டுகளுக்குப் பிறகு இப்போது மீண்டும் தமிழ்நாடு அரசு இந்த மாநாட்டை முன்னெடுக்கிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

'தமிழ் இணையம் 99' மாநாட்டின் விளைவாக உருவானதுதான் தமிழ் இணையக் கல்விக்கழகம். உலகெங்கும் வாழும் தமிழர்களுக்கு இணைய வழியில் தமிழ் கற்றுக்கொடுத்தல், தமிழ் நூல்களையும் இதழ்களையும் அரிய ஆவணங்களையும் மின்னுருவாக்கம் செய்தல், கணினித் தமிழை மேம்படுத்துதல் ஆகியவை தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் முதன்மையான பணிகளாகும். மேலும், மாநாட்டில் பங்குபெற்ற வல்லுநர்களின் வழிகாட்டுதலோடு 'தமிழ்99 விசைப்பலகை' உருவாக்கப்பட்டு, அரசால் அங்கீகரிக்கப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டது. தமிழில் மென்பொருட்களை உருவாக்குவது தொடர்பான செயல்களைத் தமிழ்நாடு அரசு தொடர்ந்து ஊக்குவித்து வருகிறது.

இந்நிலையில், 'தமிழ் இணையம் 99' மாநாட்டுக்குப் பிறகான காலகட்டத்தில் தொழில்நுட்பம் அடைந்திருக்கும் வளர்ச்சி அபரிமிதமானது. செயற்கை நுண்ணறிவு குறித்து கடந்த நூற்றாண்டின் இறுதியிலேயே நாம் பேசத் தொடங்கிவிட்டாலும் அண்மைக் காலத்தில்தான் அது முழுவீச்சில் களம் கண்டிருக்கிறது. எனவே, வளர்ந்துவரும் இந்தத் தொழில்நுட்ப யுகத்தில் தமிழுக்கான இடத்தினை வலுப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் இம்மாநாடு திட்டமிடப்பட்டுள்ளது. இந்த மாநாட்டின் வழியாக, தொழில்நுட்பத் துறையில் தமிழ் மொழியின் பயன்பாடு அதிகரிப்பதற்கான சூழலை ஏற்படுத்த இயலும். புதிய தலைமுறையை இதன் பக்கம் திருப்ப இயலும்.

தொழில்நுட்பத் துறையில் தமிழைப் பயன்படுத்த பல்வேறு முயற்சிகளை எடுத்துவரும் தமிழ் இணையக் கல்விக்கழகம், இந்தப் பன்னாட்டுக் கணித்தமிழ் மாநாட்டை ஒருங்கிணைக்கும். புது யுகத்திற்கு ஏற்றாற்போல் தமிழ் மொழியும் புத்தொளி பெற்று வளர வேண்டும் என்ற நோக்கத்தில் இந்த மாநாடு நடத்தப்படவுள்ளது. ஆங்கிலத் தொழில்நுட்பத்தில் உருவாக்கப்பட்டு வரும் Natural Language Pro cessing Tools (NLPT), செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence), இயந்திர வழிக் கற்றல் (Machine Learning), Machine Translation (MT), Sentimental Analysis (SA), Large Language Model (LLM), Automatic Speech Recognition (ASR) போன்றவற்றைத் தமிழில் உருவாக்கும் முயற்சியும் இந்த மாநாட்டின் இலக்காக இருக்கும்.

இந்தப் பன்னாட்டுக் கணித்தமிழ் மாநாடு 2024 பிப்ரவரி 8, 9, 10 ஆகிய நாட்களில் சென்னை, நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் நடத்திய 'தமிழ்இணையம்99' மாநாடு நடைபெற்ற அதே நாளில் பன்னாட்டுக் கணித்தமிழ் மாநாடு (கணித்தமிழ்24) கலைஞர் நூற்றாண்டில் நடைபெறவிருப்பது சிறப்பான ஒன்றாகும். தமிழ்நாட்டிலும், இந்திய அளவிலும், சர்வதேச அளவிலும் தமிழுக்காகப் பங்களித்துவரும் அறிஞர்களும் தொழில்நுட்ப வல்லுநர்களும் தமிழ் ஆர்வலர்களும் இந்த மாநாட்டில் கலந்துகொள்வார்கள். மேலும் மாநாடு தொடர்பான கூடுதல் விவரங்களை https://www.kanitamil.in என்ற இணையதளத்தில் அறியலாம்.

இந்தப் பன்னாட்டுக் கணித்தமிழ் மாநாடு கீழ்க்காணும் அம்சங்களுடன் திட்டமிடப்பட்டுள்ளது:

உரைகள் மற்றும் குழு விவாதங்கள்: தமிழறிஞர்கள், மொழித் தொழில்நுட்ப வல்லுநர்கள், மொழித் தொழில்நுட்பத்தை உருவாக்கும் மற்றும் பயன்படுத்தும் நிறுவனங்களைச் சேர்ந்த ஆளுமைகள் ஆகியோர் வெவ்வேறு தலைப்புகளில் விரிவுரை வழங்குவார்கள். ஆளுமைகளுக்கு இடையேயான குழு விவாதங்களும் நடத்தப்படும். செயற்கை நுண்ணறிவு, இயந்திர வழிக்கற்றல், இயற்கை மொழிச் செயலாக்கம், மொழி மாதிரிகள், நவீன மொழித் தொழில்நுட்பங்கள் உள்ளிட்ட தலைப்புகளில் உரைகளும் குழு விவாதங்களும் நடைபெறும்.

**ஆய்வுக் கட்டுரைகள்**: உலகெங்கிலும் கணினித்தமிழ் தொடர்பான ஆய்வில் ஈடுபட்டுவருபவர்களிடமிருந்தும், தமிழ் மொழி மட்டுமல்லாமல் பிற மொழிகளிலும் மொழி சார்ந்த மென்பொருள் உருவாக்குவோரிடமிருந்தும் தொழில்நுட்பம் சார்ந்த ஆய்வுக் கட்டுரைகள் பெறப்பட்டு, புத்தகமாகத் தொகுக்கப்படும். இயற்கை மொழிச் செயலாக்கம், இயந்திர மொழிபெயர்ப்பு, பேச்சுகளைப் புரிந்துகொள்ளல், உணர்வுப் பகுப்பாய்வு உள்ளிட்ட தலைப்புகளில் ஆய்வுக் கட்டுரைகள் இடம்பெறும்.

**நிரலாக்கப் போட்டி**: இந்திய அளவிலும் பன்னாட்டு அளவிலும் என இரண்டு விதமாக நிரலாக்கப் போட்டி நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தப் போட்டியின் வழியாக இளம் தொழில்நுட்ப வல்லுநர்கள் அடையாளம் காணப்பட்டு, அவர்களுக்கு வேண்டிய வழிகாட்டுதல் வழங்கப்படுவதோடு, சிறந்த முயற்சி களுக்கான அங்கீகாரமும் வழங்கப்படும்.

**கண்காட்சி:** மொழித் தொழில்நுட்பங்கள் தொடர்பான அதிநவீனத் தயாரிப்புகள், திட்டங்கள், புதிய சிந்தனைகள் போன்றவற்றைப் பிரதிபலிக்கும் விதமாகக் கண்காட்சி அமையும். தொழில் துறையைச் சேர்ந்தவர்கள், புத்தொழில் (Startup) நிறுவனத்தினர் ஆகியோர் இதில் பங்கேற்பார்கள்.

தொழில்நுட்பத்தில் மொழியின் முக்கியத்துவம் அதிகரிக்கத் தொடங்கியிருக்கும் காலம் இது. அதன் பல்வேறு பரிமாணங்களை வெளிக்கொண்டுவரும் நிகழ்வாக இந்த மாநாடு நடைபெறும். செயற்கை நுண்ணறிவு (AI), அதிகளவில் மொழி மாதிரிகளை உருவாக்குதல் (LLM), டிஜிட்டல் உள்ளடக்க உருவாக்கம், கற்றல் கற்பித்தல் தொழில்நுட்பம், மின் ஆளுமை உள்ளிட்ட தளங்களில் நடைபெறவிருக்கும் இந்தப் பன்னாட்டு மாநாடு அடுத்துவரும் சவாலான தொழில்நுட்ப யுகத்தை எதிர்கொள்வதற்கான அடித்தளங்களை அமைத்துத்தரும். மேலும், இந்த இருபத்தைந்து ஆண்டுகளில் கணித்தமிழ் தொடர்பாக நடந்திருக்கும் விவாதங்கள், முயற்சிகள், முன்னெடுப்புகள் முதலிய வற்றை உள்ளடக்கிய சிறப்பு மலர் ஒன்றும் இந்தப் பன்னாட்டு மாநாட்டில் வெளியிடப்படும். இம்மாநாட்டுக்கென பிரத்யேக இலச்சினை ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு முன்னெடுத்துள்ள இந்த மாபெரும் பன்னாட்டுக் கணித்தமிழ் மாநாடு தமிழ் மொழியைக் காப்பதற்கும் அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்வதற்கும் ஒரு மிகப் பெரிய வாய்ப்பாக அமையும். இந்தியாவில் வேறெந்த மாநிலமும் மொழிக்காக முன்னெடுக்காத ஒரு திட்டத்தை முன்னோடியாக தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

## எதிர்க்கட்சித் தலைவர் சொல்வது உண்மையல்ல; முக்கொம்பு சம்பவத்தில்

# குற்றம் இழைத்த காவலர்கள் மீது கடும் நடவடிக்கை - சிறையில் அடைப்பு!

## சட்டப்பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் விளக்கம்!

**சென்னை, அக். 13-**

**திருச்சி மாவட்டம், முக்கொம்பு சுற்றுலாத் தலத்தில் பெண் ஒருவரிடம் அத்துமீறி நடந்து கொண்ட காவலர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட, நடவடிக்கை தொடர்பான கவன ஈர்ப்புக்கு பதிலளித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உரையாற்றுகையில், குற்றம் இழைத்த காவலர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர் எனக் குறிப்பிட்டார்.**

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கூறியதாவது:-

பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 04.10.2023 அன்று மாலை சுமார் 4.00 மணியளவில், திருச்சி மாவட்டம், ஜீயபுரம் காவல் நிலைய சரகம், முக்கொம்பு சுற்றுலாத் தலத்திற்கு ஜீயபுரம் காவல் நிலைய உதவி ஆய்வாளர் சசிகுமார், நவல்பட்டு காவல் நிலைய காவலர் பிரசாத், திருவெறும்பூர் பகுதி நெடுஞ்சாலை ரோந்து பணியில் பணிபுரிந்து வரும் சங்கர் ராஜபாண்டியன் ஆகியோர் அனுமதியோ, விடுப்போ பெறாமலும், உயரதிகாரிகளுக்கு எவ்வித தகவலும் தெரிவிக்காமலும், ஜீயபுரம் போக்குவரத்து காவல் நிலையத்தில் பணிபுரிந்து, பல நாட்களாகப் பணிக்கு வராமல் இருந்த காவலர் சித்தார்த்தன் என்பவருடன் இணைந்து சென்று, சுற்றுலாத் தலத்திற்கு வருகை தந்திருந்த இளைஞர் மற்றும் 17 வயது பெண்ணை மிரட்டி, அந்த இளைஞரைத் தாக்கி விரட்டி அனுப்பிவிட்டு, உடனிருந்த பெண்ணை அந்தக் காவலர்கள் தாங்கள் வந்திருந்த தனியார் காரில் ஏற்றி, அவரிடம் தவறான முறையில் நடந்திருக்கிறார்கள். பின்னர், அந்தப் பெண் சத்தம் போட்டதால், அவரைக் காரிலிருந்து இறக்கிவிட்டிருக்கிறார்கள்.

### புகாரைப் பெற்று காவல்துறை நேரில் சென்று விசாரணை!

இதனையடுத்து அந்தப் பெண் மற்றும் அவருடன் வந்த இளைஞர் இருவரும் முக்கொம்பு புறக்காவல் நிலையத்திற்குச் சென்று புகார் அளித்ததின் பேரில், அங்கு பணியிலிருந்த காவல்துறையினர் உடனடியாக அவ்விடத்திற்குச் சென்று, அந்தக் காவலர்களை விசாரித்த போது, அவர்கள் முறையாக பதிலளிக்கவில்லை.

### புகாரின் பேரில் மூன்று காவலர்கள் பணிஇடை நீக்கம்!

இங்கே எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகிறபோது, காவல் நிலையத்தில் புகார் தெரிவித்து நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று சொன்னார். அது உண்மையல்ல. அந்தக் காவல் நிலையத்தில் புகார் அளித்தவுடன், அந்தக் காவல் நிலைய உதவி ஆய்வாளர், உடனடியாக எஸ்.பி. அவர்களைத் தொடர்பு கொண்டு, அவருடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதுதான் உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி)

உடனடியாக மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் அளவில் விசாரணை மேற்கொள்ளப்பட்டு, சம்பந்தப்பட்ட உதவி ஆய்வாளர் மற்றும் மூன்று காவலர்கள் பணி யிடை நீக்கம் செய்யப்பட்டனர். மேலும் அந்தப் பெண் அளித்த புகாரின் பேரில் ஜீயபுரம் காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, உதவி ஆய்வாளர் மற்றும் மூன்று காவலர்கள் அன்றே கைது செய்யப்பட்டு, நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

மேலும், குற்றம் இழைத்த காவலர்கள் மீது கடுமையான தண்டனை வழங்கக்கூடிய பிரிவுகளின் கீழ், துறை ரீதியான நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. விரைவில் இதில் விசாரணை முடிக்கப்பட்டு, இறுதி உத்தரவு பிறப்பிக்கப்படும்.

### பாலியல் வன்முறையில் ஈடுபடுவோர் மீது கடும் நடவடிக்கை!

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றச் செயல்களில், குறிப்பாக பாலியல் வன்முறையில் ஈடுபடுவோர் யாராக இருந்தாலும், அவர்கள் மீது பாரபட்சமின்றி, இந்த அரசு கடுமையான நடவடிக்கை எடுக்கும் என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்.




தலைமைச் செயலகத்தில், நேற்று முன்தினம் (11.10.2023) தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், கலை பண்பாடு மற்றும் அருங்காட்சியகங்கள் துறைகளின் அறிவிப்புகள் மற்றும் வளர்ச்சித் திட்டங்கள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். உடன், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் அருங்காட்சியங்கள் ஆணையர் (மு.கூ.பொ) மா.அரவிந்த், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத் தலைவர் வாகை.சந்திரசேகர், இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர் முனைவர் எஸ்.சவுமியா, தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் உறுப்பினர் செயலாளர் விஜயா தாயன்பன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## பசிப்பிணியைப் போக்கும் முதல்வராகத் திகழ்கிறார் நமது முதல்வர்!

# தமிழ்நாட்டின் நிதி - ஆண்டுக்காண்டு வளர்ச்சி அடைந்து வருகிறது!

## பேரவையில் துணை நிதி நிலை அறிக்கை பதிலுரையில் - அமைச்சர் தங்கம் தென்னரசு பெருமிதம்!

## மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் செயல்படும் ஒன்றிய பா.ஜ.க. அரசு!

சென்னை, அக்.13-

**பசிப்பிணியைப் போக்கும் முதல்வராக நமது முதல்வர் திகழ்கிறார் என்றும் தமிழ்நாட்டின் நிதி ஆண்டுக்காண்டு வளர்ச்சி ஏற்பட்டு வருகிறது என்று சட்டப்பேரவையில் துணை நிதிநிலை அறிக்கை மீதான பதிலுரையில் அமைச்சர் தங்கம் தென்னரசு பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**

நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு பதிலுரை வருமாறு :-

2023-2024 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவுக்கான மானியக் கோரிக்கையை (முதல்) இந்த மாமன்றத்தில் வைப்பதற்கும், அதன் மீதான விவாதங்களுக்கு பதிலுரை அளிப்பதற்கும் வாய்ப்பினை நல்கியுள்ள தாயிற் சிறந்த தயாபரனாக தமிழ்நாட்டு மக்களினுடைய நலன் காக்கும் தனிப்பெரும் கருணைமிக்க தனிப்பெரும் தலைவர் அந்தக் கருணை உள்ளத்திற்கு சொந்தக்காரர் நம்முடைய முதல்வர் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினை முதற்கண் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த வாய்ப்பை நல்கியிருக்கக்கூடிய தங்களுக்கும், இந்த விவாதத்தின்மீது பங்கேற்று உரையாற்றிருக்கக்கூடிய உறுப்பினர்களுக்கும் என்னுடைய நன்றியினை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக, தமிழ் நிலத்திலே தோன்றிய பிசிராந்தையார் என்கின்ற புலவர் புறநானூற்றிலே நாட்டு மக்களுக்கான நல்லாட்சி எப்படி இருக்க வேண்டும் என்பதற்கான ஒரு இலக்கணத்தை வகுத்துத் தந்திருக்கிறார். ‘காய் நெல் அறுத்துக் கவளம் கொளினே’ என்று தொடங்கும் அந்த நெடிய பாடலின் ஊடே அவர் சொல்கிற போது,

‘அறிவுடை வேந்தன் நெறி அறிந்து கொளினே,

கோடி யாத்து, நாடு பெரிது நந்தும்’

என்று தெரிவிக்கிறார். அதனுடைய கருத்து என்னவென்றால், அறிவுடை வேந்தன் ஒருவன் அறநெறியினை அறிந்து, தன்னுடைய குடிமக்களிடத்திலே வரிப் பெறுவானேயானால், அவனது அரசு கோடிக்கணக்கான வருவாயையும், செல்வத்தையும் ஒருங்கே ஈட்டி, அவனது அரசும், ஆட்சியும் செழித்தோங்கும் என்பதாகும். பிசிராந்தையார் காட்டி சென்ற அந்த அரசின் இலக்கணத்திற்கு எடுத்துக்காட்டான இலக்கியமாக, தமிழ்நாட்டு அரசினுடைய நிர்வாகத்தை நடத்தி, நல்லாட்சி செய்யக்கூடிய நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதித் துறையினை செவ்வனே செழுமைப்படுத்தி, வழி நடத்திட உலகினுடைய தலைச்சிறந்த பொருளாதார வல்லுநர்கள் அடங்கிய ஒரு குழுவினை அமைத்து, அறங்கூறும் அவையினரான அவர்களது ஆலோசனைகளைப் பெற்று, இத்துறையினைச் சிறப்பாக வழி நடத்துவதால், தமிழ்நாடு ஒரு சிறப்பான நிதி நிர்வாகத்திற்கு எடுத்துக்காட்டான ஒரு மாநிலமாக திகழ்கிறது என்பதை நான் பெருமையோடு இந்த அவையிலே எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

### நிதி நிர்வாகத்திற்கு எடுத்துக்காட்டாகத் திகழும் மாநிலம்!

இந்த துணை மதிப்பீடுகளில், 2,893.15 கோடி ரூபாய்க்கான கூடுதல் நிதி ஒதுக்கக் கோரப்பட்டிருக்கிறது. இது இந்த ஆண்டிற்கான வரவுசெலவு திட்ட மதிப்பீடுகளின் மொத்த செலவினத்தில் சுமார் .70 சதவிகிதம் மட்டுமே என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இது அரசினுடைய முறையான நிதி மேலாண்மையை பிரதிபலிப்பதாகவும், அதற்கு எடுத்துக்காட்டாகவும் இன்றைக்கு அமைந்திருக்கிறது.

அய்யன் வள்ளுவர் குறிப்பிட்ட தைப் போல,

“இயற்றலும் ஈட்டலுங் காத்தலுங் காத்த

வகுத்தலும் வல்ல தரசு”

என்கின்ற பொய்யாமொழிப் புலவருடைய வாக்குக்கிணங்க, அரசினுடைய வருவாயைப் பெருக்கிடுவதற்கும், அதை ஈட்டுவதற்கும் உரிய பல்வேறு நடவடிக்கைகளை நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலின்பேரில், இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது. அதிலும் குறிப்பாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நேற்று 110 வது விதியிலே ஒரு மகத்தான திட்டத்தை அறிவித்திருக்கிறார். வணிக வரித் துறையிலே பழைய நிலுவைகளை தீர்வு காண்பதற்குரிய சமாதானத் திட்டம். இன்றைக்கு பத்திரிகையிலே பார்த்தோமென்று சொன்னால், ஏடுகளாக இருந்தாலும், நாட்டிலிருக்கக்கூடிய வணிக பெருமக்களாக இருந்தாலும், பெருமளவிலே அனைவரும் பாராட்டியிருக்கக்கூடிய அந்த சமாதானத் திட்டம், மிக ஒரு முக்கியமான முன்னெடுப்பாக நான் இந்த அவையிலே குறிப்பிட விரும்புகிறேன். அதைப்போல, வருவாயைப் பெருக்கக்கூடிய நோக்கிலே, கனிமங்களுக்கான அரசுரிமைக் கட்டணங்களை அதிகரித்தல், மோட்டார் வாகன வரிகள் மற்றும் அதற்கான அபராதங்களை அதிகரித்தல், Artificial Intelligence நுண்ணறிவுப் பயன்பாடு மற்றும் கணினி மயமாக்கல் endtoend computerization மூலம் வரி நடைமுறைகளிலே புதிய தொழில்நுட்பங்களை நாம் உருவாக்குவதன் மூலமாக வரி வருவாயினை அதிகரித்தல், சரக்கு மற்றும் சேவை வரியை வசூலித்தல், மதுபான விற்பனை, பத்திரப் பதிவு மற்றும் சுரங்கத் தொழில் ஆகியவற்றில் தரவுகளைப் பயன்படுத்துவதன் வாயிலாக, வரி வசூல் திறனை மேம்படுத்துவதன் மூலமாக நம்முடைய அரசினுடைய வருவாயினைப் பெருக்குவதற்கான நடவடிக்கைகளை நிதித் துறை இன்றைக்கு மேற்கொண்டிருக்கிறது.

இத்தகைய தொடர் நடவடிக்கைகளின் மூலமாக, முயற்சிகளின் விளைவாக, இந்த நிதியாண்டில் ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் முறையே 10.6 சதவீதம் மற்றும் 13.78 சதவீதம் என ஆண்டுக்காண்டு வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் இந்த மாமன்றத்தில் மிகுந்த மகிழ்ச்சியோடு பதிவு செய்ய விரும்புகிறேன். 30-6-2022 முதல் சரக்கு மற்றும் சேவை வரி இழப்பீட்டு முறை முடிவுற்றதன் விளைவாக, தமிழ்நாடு அரசுக்கு பெருமளவிற்கான வருவாய் இழப்பு ஏற்பட்டிருக்கிறது. கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் வரையில், சரக்கு மற்றும் சேவை வரி இழப்பீடாக 9,603 கோடி ரூபாயை ஒன்றிய அரசிடமிருந்து, தமிழ்நாடு அரசு பெற்றிருக்கக்கூடிய நிலையில், நடப்பாண்டில் 3,533 கோடி ரூபாய் மட்டும்தான் இப்போது நாம் பெற்றிருக்கிறோம். இதன்விளைவாக, ஒன்றிய அரசின் உதவி மானியங்கள், 36.59 சதவீத அளவிற்கு நமக்கு குறைந்திருக்கிறது. சரக்கு மற்றும் சேவை வரி இழப்பீடாக, மேலும், ஆயிரம் கோடி ரூபாய் பெறப்படும் என எதிர்பார்க்கக்கூடிய நிலையில், 2022-23 ஆம் நிதியாண்டில் தணிக்கை செய்யப்பட்ட கணக்குகளை அளித்த பிறகு, இறுதி தொகைக்கான தீர்வு எய்தப்பட்டு விடுமென்று நாங்கள் நம்புகிறோம்.

இழப்பீட்டுத் தொகையை ஒன்றிய அரசிடமிருந்து விரைவாகக் கோருவதற்கு ஏதுவாக, அந்த முதல் காலாண்டிற்குள் வருவாய்களுக்கென தனியாகவே ஒரு தணிக்கையினை ஏற்படுத்தி, அந்த நடைமுறையினுடைய அடிப்படையில் எளிதாக்கித் தர வேண்டுமென்று ஒன்றிய நிதி அமைச்சர் அவர்களை நான் புதுடெல்லியில் சந்தித்த போது, நேரடியாக நான் கோரிக்கைகளை வைத்திருக்கிறேன். செலவினங்களைப் பொறுத்தமட்டில், வளர்ச்சிக்கான நடவடிக்கைகள் ஒருபுறம் இருக்கிறபோது, அதற்கு தொடர்பற்றிருக்கக்கூடிய செலவினங்களைக் குறைப்பதற்கும், உரிய நேரத்திலே அந்த நிதியை, நம்முடைய அரசிலிருந்து விடுவிப்பதை உறுதி செய்வதன் வாயிலாக, அந்த செயலினங்களில் இருக்கக்கூடிய செயல்திறனை நாம் கொண்டுவருவதற்கும் இந்த அரசு தீவிரமான முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது. குறிப்பாக, பல திட்டங்க ளுக்கு கருவூலத்திலிருந்தே நேரடியாக பயனாளிகளுக்கு நிதியை விடுவிக்கும் வழிமுறையை இந்த அரசு புதியதாக அறிமுகப்படுத்தியிருக்கிறது. மேலும், தமிழ்நாடு பொது நிதிக் கண்காணிப்பு அமைப்பினையும், இந்த அரசு சிறப்பாக செயலாற்றி வருகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

### கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம்!

நூற்றாண்டு கண்ட இந்த சட்டமன்றத்தைப் பொறுத்தமட்டில், இந்த நிதியாண்டு பொன்னெழுத்துகளாலே பொறிக்கப்பட வேண்டிய ஒரு நிதியாண்டு என்று நான் குறிப்பிட வேண்டும். ஏனென்றால், இந்த நாட்டுக்கே முன்னுதாரணமாக வழங்கக்கூடிய கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம், முதலமைச்சருடைய காலை உணவுத் திட்டம் போன்ற முத்தான திட்டங்களை இந்த அரசு இந்த நிதியாண்டு முதல் நிறைவேற்றி வருகிறது என்பதை நான் பெருமையோடு இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். நாட்டினுடைய பிற மாநிலங்கள் இந்தத் திட்டங்களையெல்லாம், பின்பற்றுகின்ற அளவுக்கு மிகச் செம்மையாக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தத் திட்டங்களை வடித்தெடுத்து, நடைமுறைப்படுத்தி வருக்கிறார்கள். காலையிலே நம்முடைய மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் பேசுகின்றபோது, பசிப்பிணி போக்கக்கூடிய மருத்துவரைப் பற்றி குறிப்பிட்டார்கள். புறநானூற்றுப் பாடலிலே அது வருகிறது.

“பசிப்பிணி மருத்துவன் இல்லம்

அணித்தோ? சேய்த்தோ? கூறுமின், எமக்கே”

என்று ஒரு புலவர் கேட்கிறார். பசிப்பிணி நீக்கக்கூடிய அந்த மருத்துவனுடைய வீடு, பக்கத்தில்தான் இருக்கிறதா? அல்லது தூரத்தில் இருக்கிறதா? என்று ஒரு புலவன் கேட்கிறான் என்று சொன்னால், சங்ககாலத்தைச் சேர்ந்திருக்கக்கூடிய அந்த குறுநில மன்னர் ஒருவர் ஏழை, எளியோருடைய பசியினைப் போக்கியதால், அந்தப் பசியினைப் போக்கிய மருத்துவராக பார்க்கப்படுகிறார். அந்தப் பசிப்பிணி போக்கிய மரபினுடைய தொடர்ச்சியாக தமிழ்ச் சமூகத்தை வழிநடத்தியிருக்கக்கூடிய தலைவர்கள் பலரும் காலந்தோறும் வறுமையினை அகற்றிடவும், மாணவர்களுடைய கல்வி நலனைப் பாதுகாத்திடவும் பல முன்னோடித் திட்டங்களை அறிமுகப்படுத்தித் தந்திருக்கி றார்கள்.

### பசிப்பிணியை போக்கிய முதல்வர்!

அந்த வகையில் திராவிட பிதாமகர் சர். பிட்டி. தியாகராயர், பெருந்தலைவர் காமராஜர்,



மக்கள் திலகம் எம்.ஜி.ஆர்., முத்தமிழ றிஞர் கலைஞர் என பசிப்பிணிப் போக்கிய மகத்தான தலைவர்களின் வரிசையில், நமது முதலமைச்சர் அவர்களும் இணைந்திருக்கிறார் என்பதை வரலாறு என்றென்றும் நமக்குத் தெரிவித்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோன்று ஆணிற்கு பெண் சரிநிகர் சமானம் என்ற சமுதாயப் பாதையில், நல்லெண்ணத்தோடு நாடே வியந்து பார்க்கும் வகையில், மகளிர் நலன் கருதி புதுமையான பல திட்டங்களை அறிமுகப்படுத்தியிருக்கக்கூடிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பெயரால், மகளிர் உரிமைத் தொகை திட்டத்தை, முதலமைச்சர் அவர்கள் வடிவமைத்து, நடைமுறைப்படுத்தி வருவதை நாட்டு மக்கள் மனமுவந்து இன்றைக்கு வரவேற்றிருக்கிறார்கள்.

வாழ்க்கையில் எத்தனையோ இடர்பாடுகளைச் சந்தித்தாலும், தன்னுடைய குழந்தைகளின் நலன் கருதி, தன்னை உருக்கி, தன்னுடைய பிள்ளைகளின் கல்வி மற்றும் உடல் நலன்களை கருதி, காப்பதுதான் ஓர் தாய்மையின் அடையாளம்.

அதேபோன்று ஒன்றிய அரசினுடைய மாற்றந்தாய் மனப்பான்மை, உலகளாவிய பொருளாதார வளர்ச்சியில் காணப்படும் மந்தநிலை போன்ற அனைத்துச் சோதனைகளையும் எதிர்கொண்ட போதிலும், தமிழ் மக்களுடைய நலன் காத்திடும் “தாயுமானவராக” (மேசையைத் தட்டும் ஒலி) முதலமைச்சர் அவர்கள் இந்த அரசை சிறப்பாக வழி நடத்தி வந்து கொண்டிருக்கின்றார் என்பதை நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

நான் பேசுகிறபோது, மாற்றாந்தாய் மனப்பான்மையோடு ஒன்றிய அரசு நடந்து கொண்டிருக்கிறது என்று குறிப்பிட்டேன். ஏதோ போகிற போக்கில் அதை நான் சொல்ல விரும்பவில்லை. ஆனால், அதற்குரிய தரவுகளையும் இந்த மாமன்றத்தில் எடுத்து வைப்பது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன்.

நேரடி வரி வருவாயைப் பொறுத்தமட்டில் ஒன்றிய அரசினுடைய நேரடி வரி விதிப்பில் தமிழ்நாட்டினுடைய பங்களிப்பில் நாம் தொடர்ந்து முன்னிலையில் இருக்கின்றோம். இந்த வரி வருவாயில், நம்முடைய பங்களிப்பு முன்னிலையில் இருக்கிறது. ஆனால், அந்தப் பங்களிப்பிற்கு நிகராக நாம் வரி பகிர்வினை பெற்றிருக்கிறோமா என்பதைப் பார்க்க வேண்டும். Direct taxesல் நம்முடைய contributionஐ நாம் கொடுத்து கொண்டிருக்கிறோம். ஆனால், அதற்கு இணையாக இருக்கிற devolutionல் நமக்குக் கிடைக்கக்கூடிய வரி பகிர்வு வந்திருக்கிறதா என்று பார்த்தால் தமிழ்நாடு அதைப் பெறவில்லை.

உதாரணத்திற்கு, ஒன்றிய அரசிற்கு வரி வருவாயாக தமிழ்நாடு செலுத்தக்கூடிய ஒவ்வொரு ஒரு ரூபாய் ஒரு ரூபாய் நாம் கொடுக்கிறோம் என்று சொன்னால், அதற்கு ஈடாக 29 பைசா மட்டுமே நமக்கு திரும்ப கிடைக்கிறது. மாறாக ஒன்றிய அரசாங்கமான பாரதிய ஜனதா கட்சி ஆளக்கூடிய உத்தரப் பிரதேசம் மாநிலத்தைப் பார்த்தீர்களென்று சொன்னால், அந்த மாநிலம் செலுத்தக்கூடிய ஒரு ரூபாய் அவர்கள் கொடுக்கக்கூடிய அந்த வரிக்கு, திரும்ப அவர்களுக்கு ஈடாக கிடைப்பதைப் பார்த்தீர்கள் என்றால், 2 ரூபாய் 73 பைசா அவர்களுக்குக் கிடைக்கிறது. நமக்கு திரும்பக் கிடைப்பது வெறும் 29 பைசா மட்டுமே. ஆனால், அவர்களுக்குக் கிடைப்பது 2 ரூபாய் 73 பைசா கிடைக்கிறது.

### பா.ஜ.க. ஆளும் மாநிலங்களுக்கு அதிக நிதி ஒதுக்கீடு!

நிதியாண்டு 2014-2015 முதல் 2021-2022 வரை ஒன்றிய அரசினுடைய நேரடி வரியில் தமிழ்நாட்டினுடைய பங்களிப்பு மட்டும் ரூபாய் 5.16 இலட்சம் கோடி. அதாவது நம்முடைய பங்களிப்பாக, வரி பகிர்வாக நாம் ரூபாய் 5.16 இலட்சம் கோடி கொடுத்திருக்கிறோம். ஆனால், திரும்ப நமக்கு கிடைக்கக்கூடிய வரிப் பகிர்வாக அந்தக் காலக்கட்டத்தில் நமக்கு எவ்வளவு கிடைத்திருக்கிறது என்று சொன்னால், ரூபாய் 2.08 இலட்சம் கோடி மட்டும்தான்.

இதே, பாரதிய ஜனதா கட்சி ஆளக்கூடிய மாநிலங்களை ஒப்பிட்டுப் பார்த்தால் நிலைமை வேறாக இருக்கிறது. உத்தரப் பிரதேசம் மாநிலம் ரூபாய் 2.24 இலட்சம் கோடி மட்டுமே அவர்களுடைய பங்களிப்பு. நம்முடைய பங்களிப்பு ரூபாய் 5.16 இலட்சம் கோடி. ஆனால், நமக்கு கிடைத்தது ரூபாய் 2.08 இலட்சம் கோடி. அவர்கள் பங்களிப்பு ரூபாய் 2.24 இலட்சம் கோடியாகத்தான் இருக்கிறது. ஆனால், உத்தரப் பிரதேசம் மாநிலத்திற்கு கிடைத்த வரிப் பகிர்வு என்பது ரூபாய் 9.04 இலட்சம் கோடி என்று பார்ப்பீர்களேயானால், அவர்கள் வரி பங்களிப்பை விட, அவர்கள் பெற்றிருக்கின்ற வரி பகிர்வானது நான்கு மடங்கு அவர்களுக்கு கொடுத்திருக்கிறார்கள் என்று சொன்னால், இதுதான் ஒரு கண்ணிலே வெண்ணெய்யும் மற்றொரு கண்ணில் சுண்ணாம்பையும் வைக்கக்கூடிய ஒன்றிய அரசின் செயல்பாடு என்பதை நான் இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல. நிதிக் குழு (Finance Commission). இந்த கணக்கீடுகளை நீங்கள் எடுத்துக்கொண்டீர்கள் என்றால், மத்திய நிதிக் குழு(Central Finance Commission) ஒதுக்கீட்டில் தமிழ்நாடு தொடர்ச்சியாக, நாம் பெருமளவில் இன்றைக்கு நிதி இழப்பை சந்தித்து வருகிறோம். 15 வருடங்களாக தமிழ்நாட்டினுடைய பங்களிப்பிற்கு நிகராக இருக்கக்கூடிய இந்த நிதி ஒதுக்கீடு, தொடர்ச்சியாக தமிழ்நாட்டிற்கு மறுக்கப்பட்டு வந்திருக்கிறது. அதாவது 12வது நிதிக் குழுவில்(Twelfth Finance Commission) 5.305 சதவிகிதமாக இருந்த நிதி ஒதுக்கீடு, 15வது நிதிக் குழுவிற்கு வருகிறபோது (Fifteenth Finance Commission) 4.079 சதவிகிதமாக அது குறைந்து வருகிறது. ஆனால், Twelfth Finance Commissionல் இருக்கிறதைவிட Fifteenth Finance Commissionல் வருகிறபோது, தமிழ்நாட்டிற்கு வரக்கூடிய நிதி ஒதுக்கீடு என்பது குறைந்து கொண்டே வருகிறது.

மக்கட்தொகை கணக்கெடுப்பை பார்த்தீர்கள் என்று சொன்னால், இந்தியாவினுடைய மக்கட்தொகையில் 6.124 சதவிகிதமாக இருக்கக்கூடிய தமிழ்நாட்டிற்கு நமக்கு கிடைக்கக் கூடிய சதவிகிதம் நம்முடைய மக்கட்தொகைக்கு இணையாகவோ, நேராகவோ இல்லை.

ஆனால், அதைவிட குறைவாக 4.079 சதவிகிதமாகத்தான் நிதி ஒதுக்கீடு நமக்கு வந்திருக்கிறது. இது எந்தவகையில் நியாயம் என்ற கேள்வியைத்தான் இந்த மாமன்றத்தில் நான் உங்கள் முன்பு வைக்க விரும்புகின்றேன். இந்த divide, வடமாநிலங்களுக்கும், தென்மாநிலங்களுக்கும் இருக்கின்ற இந்த வேறுபாட்டிற்குக் காரணம், நீங்கள் மிக நன்றாக அறிவீர்கள். இது வடமாநிலங்களுக்கு சாதகமாக அமைவதற்கு காரணம், நமக்கு இருக்கக்கூடிய census. 1971 ஆம் ஆண்டில் நாம் எடுத்த census. அன்றைக்கு இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் இருக்கின்றபோது, கொண்டுவந்ததற்குப் பிறகு, ஏறத்தாழ 25 ஆண்டுகளுக்கு ஒரு சமச்சீர் நிலைமை உருவாகின்றவரை, அது நடைமுறையில் இருக்கும் என்று அவர்கள் தெரிவித்தார்கள்.

தமிழ்நாடு உட்பட்டிருக்கக்கூடிய தென் மாநிலங்கள், இந்த குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை மிகப்பெரிய அளவில் நிறைவேற்றியது. குறிப்பாக, தமிழ்நாடு ஒரு progressive ஆக அதைச் செய்ய வேண்டுமென்பதற்காக, அந்தத் திட்டத்தை நாம் நிறைவேற்றியிருக்கிறோம். 1972ல் குடும்பக் கட்டுப்பாட்டு முறையை ஏற்றுக்கொண்டதன் காரணமாக, இன்றைக்கு நாம் பழி வாங்கப்படுகிறோம் என்பதுதான் உண்மை. அதற்குப் பின்பு வாஜ்பாய் அவர்கள் காலத்தில்கூட இந்த சமச்சீர் தன்மையைத் தொடர்ச்சியாக கொண்டு வரவேண்டுமென்று சொன்னார்கள். ஆனால், இன்றைக்கு இருக்கின்ற மக்கள் தொகையின் கணக்கெடுப்பை எடுக்கிற போது, இது ஒரு மிகப்பெரிய பின்னடைவை, நிதி ஒதுக்கீட்டில் நமக்கு இன்றைக்கு ஏற்படுத்தியிருக்கிறது என்று சொல்வேன்.

### பேரிடர் நிவாரண நிதியும் குறைத்து வழங்குகிறார்கள்!

அதைப்போல, பேரிடர் நிவாரண நிதியை எடுத்துக்கொண்டால்கூட தமிழ்நாடு கிட்டத்தட்ட 64.65 சதவிகிதத்தை மட்டும்தான் மத்திய அரசிடமிருந்து, ஒன்றிய அரசிடமிருந்து நாம் பெற முடிகிறது. மாறாக, 14 வது நிதிக் குழு காலத்தைவிட 15 வது நிதிக் குழு காலத்தை நீங்கள் எடுத்துக்கொண்டால், ஓர் ஒப்பீட்டுக்காக நான் சொல்கிறேன். நமக்கு எவ்வளவு கிடைத்திருக்கிறது, 64.65 சதவிகிதத்தை நாம் பெறுகிறோம். ஆனால், இந்த 15 வது நிதிக் குழு காலக்கட்டத்தில் உத்தரப்பிரதேசத்திற்கு எவ்வளவு கிடைத்திருக்கிறது என்று பார்த்தால், 214.39 சதவிகிதம். பீகார், 231.23 சதவிகிதத்தைப் பெற்றிருக்கிறது. நாம் பெற்றிருக்கின்ற சதவிகிதம் எங்கே இருக்கிறது, உத்தரபிரதேசமும், பீகாரும் பெற்றிருக்கின்ற சதவிகிதம் எங்கே இருக்கிறது. தென் மாநிலங்களின் நிலை என்ன, வட மாநிலங்களின் நிலை என்ன, இதற்கெல்லாம் யார் காரணம் என்று நீங்கள் பார்த்தீர்களென்றால், இந்த என்னுடைய விரல் ஒன்றிய அரசாங்கத்தை நோக்கித்தான் நீளுகிறது என்பதை நான் இந்த மன்றத்தில் தெரிவிக்க விரும்புகிறேன்.

### ஜி.எஸ்.டி.யிலும் பாரபட்சம்!

இதற்குப் பிறகு இன்னொரு பெரிய கொடுமை என்னவென்று கேட்டால், சரக்கு மற்றும் சேவை வரி, GST. GSTஐப் பொறுத்தமட்டில் 2017 ஜூலை 1 ஆம் தேதி GSTஐ நாம் கொண்டு வந்துவிட்டோம். GST வந்ததற்குப் பிறகு என்ன சொன்னோம். மிகப் பெரிய விஷயம், நம்முடைய நிதி சுயாட்சி, மாநிலங்களுக்கு இருக்கக்கூடிய நிதி சுயாட்சி, fiscal autonomy, அதை இழக்கக்கூடிய ஒரு நிலையை நாம் உருவாக்கினோம். மாநில அரசாங்கத்திற்கு இருக்கின்ற அதிகார வரம்புகள், எந்த பொருளின்மீது வரி விதிக்கலாம், எந்தளவில் அந்த வரி விகிதங்கள் அமையலாம், அந்த வரியை எப்படி பெறுவது என்பதற்கான நடைமுறைகளையெல்லாம் தீர்மானிக்கக்கூடிய மாநில அரசின் அதிகாரங்கள், அந்த அரசியல் அமைப்பு சட்டத்தினால் நமக்கு கிடைத்த உரிமைகளை, GSTக்குப் பிறகு நாம் இழந்துவிட்டோம். சரி, இழந்துவிட்டோம் என்று சொன்னவுடனே, மாநிலங்களுக்கான வருவாய் பாதுகாக்கப்பட்ட அளவிலே இருக்கும் என்கின்ற உத்தரவாதம் ஒன்றிய அரசால் நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது.

அவர் என்ன சொன்னார், 2017லிருந்து 2022 வரையுள்ள 5 ஆண்டுகளுக்கு GST மூலமாக வரக்கூடிய வருவாய் இழப்புகளுக்கு நாங்கள்உங்களுக்கு இழப்பீடுகள் அளிக்கப்படும் என்று சொன்னார். 5 வருடங்கள் கொடுத்தார்கள். ஆனால், 5 வருடங்கள் அந்த இழப்பீட்டைப் பெற்றதற்குப் பிறகும் உரிய வளர்ச்சியை மாநிலங்கள் பெற்றிருக்கிறதா என்று சொன்னால், மாநிலங்கள் அந்த வருவாயை, நம்முடைய வளர்ச்சியைப் பெறவில்லை.

உண்மையிலேயே சொல்ல வேண்டுமென்றால் 2023-2024ல் நமக்கென்று இருக்கின்ற இந்த பாதுகாக்கப்பட்ட வருவாயிலிருந்து, தமிழ்நாட்டிற்கு மட்டும் GSTயால் ஏற்பட்டிருக்கின்ற வருவாய் இழப்பு என்பது இருபதாயிரம் கோடி ரூபாயாக இருக்கிறது என்பதை நான் இங்கே உங்களிடத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதுமட்டுமல்ல, இந்த இழப்பீடு 2022ல் முடிந்துவிட்டது. நான் சொன்ன காரணங்களையெல்லாம் ஒன்றிய அரசிற்கு எடுத்துச்சொல்லி, இன்னும் இரண்டு ஆண்டுகளுக்கு இந்த இழப்பீட்டினை நீங்கள் நீட்டித்துத்தர வேண்டுமென்று நான் கேட்டபோது, நம்முடைய கடுமையான நிதிச் சூழ்நிலையை எடுத்துச் சொன்னதற்குப் பிறகும், ஒன்றிய அரசாங்கம் இழப்பீட்டுக் காலத்தை நீட்டித்துத் தரவில்லை என்பதையும் நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

ஒன்றிய அரசின் பல்வேறு திட்டங்கள், Jal Jeevan Missionலிருந்து நீங்கள் எடுத்துக் கொண்டால், அதேபோல வீடு கட்டும் திட்டம். பிரதம மந்திரி வீடு கட்டும் திட்டம். நகர்ப்புறத்தில் இருக்கும் வீடு கட்டும் திட்டம், கிராமப் புறத்தில் இருக்கும் வீடு கட்டும் திட்டம். ஓர் உதாரணத்திற்குச் சொல்கிறேன். இப்போது நகர்ப்புறத்தில் இருக்கின்ற பிரதம மந்திரி வீடு கட்டும் திட்டத்தைப் பார்த்தீர்களென்றால், ஒன்றிய அரசாங்கம் கொடுப்பது ஒரு வீட்டிற்கு 1 இலட்சம் ரூபாய்தான் ஒன்றிய அரசாங்கம் கொடுக்கின்றது. ஆனால், தமிழ்நாடு அரசாங்கம் குறைந்தபட்சம் ஒவ்வொரு பயனாளிக்கும் 7 இலட்சம் ரூபாய் இன்றைக்கு கொடுக்கின்றது. பேர் பெத்த பேர், பிரதம மந்திரி வீடு கட்டும் திட்டம். ஆனால், அந்தத் திட்டத்தில் அவர்கள் கொடுப்பது 1 இலட்சம் ரூபாய். தமிழ்நாடு அரசின்மூலம் 7 இலட்சம் ரூபாயை நாம் கொடுக்கிறோம். ஆனால், பேர் பிரதம மந்திரி வீடு கட்டும் திட்டம்.

### மெட்ரோ ரயில் திட்டத்திற்கு நிதி தரவில்லை!

அதேபோல, சென்னை மெட்ரோ இரயில் திட்டம். இந்த மெட்ரோ இரயில் திட்டத்தை 2020 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21 ஆம் தேதி மத்திய உள்துறை அமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் வரவு செலவுத் திட்டத்தில் 2021-2022ல் நாங்கள் இதற்கு நிதி ஒதுக்கியிருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். நாங்கள் இந்த இடத்திலே பேசிக் கொண்டு இருக்கக்கூடிய இந்த நொடி வரை மெட்ரோ இரயில் திட்டத்திற்கு ஓர் ஒதுக்கீட்டையும் ஒன்றிய அரசு செய்யவில்லை. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தலைமையில் இருக்கக்கூடிய மாநில அரசுதான் (மேசையைத் தட்டும் ஒலி) ஒட்டுமொத்தமான அந்த செலவையும் இன்றைக்கு அதற்காக ஏற்றுக்கொண்டிருக்கிறது.

அதேபோல் கிராமத்தில் இருக்கக்கூடிய-- கிராமத்தில் எப்படி வீடு கட்டுவது என்று நம் அனைவருக்கும் தெரியும். ஒரு பயனாளிக்கு, அவர்கள் எந்த அளவுக்கு கொடுக்கிறார்கள்? மாநில அரசு நம்முடைய பங்களிப்பு அவர்கள் கொடுக்கும் தொகை வெறும் 72 ஆயிரம் ரூபாய் கொடுக்கிறார்கள். நம்முடைய மாநில அரசு 1 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் நமக்குக் கூடுதலாக, கூரைக்கான செலவையும் சேர்த்துக் கொடுக்கிறோம். இந்தத் திட்டத்தின் கீழே பயனாளிகளுக்கு வழங்கப்படும் மொத்தத் தொகையில் 70 சதவிகிதமான, ஒரு வீட்டிற்காக 1.68 இலட்சம் ரூபாயை யார் வழங்குகிறார்கள் என்று கேட்டால் தமிழ்நாடு அரசுதான் வழங்குகிறது. மீண்டும் சொல்கிறேன், இந்தத் திட்டத்திற்கு அதிகமான நிதி ஒதுக்கீட்டை வழங்குவது தமிழ்நாடு அரசு. அவர்கள் 72 ஆயிரம் ரூபாய் கொடுக்கிறார்கள். நாம் 1 இலட்சத்து 68 ஆயிரம் ரூபாயைக் கொடுக்கிறோம். ஆனால் திட்டத்தின் பெயர் பிரதம மந்திரி கிராமப்புற வீடு கட்டும் திட்டம்.

இதுபோலத்தான் ஜல் ஜுவன் திட்டத்தில் 50:50 percentage. ஆனால் நீங்கள் பார்த்தீர்களென்று சொன்னால், மின்சார செலவு, மற்ற செலவுகளான நடைமுறைச் செலவு, பராமரிப்புச் செலவுகளையெல்லாம் எடுத்துக் கொண்டால் 45 சதவிகிதத்திற்கும் குறைவாகத்தான் ஒன்றிய அரசினுடைய பங்களிப்பு, மீதி இருப்பதையெல்லாம் மாநில அரசு கொடுக்கிறது. இதுபோல, வரிசையாக நான் சொல்லமுடியும். காலத்தினுடைய அருமை கருதி நான் தவிர்க்கின்றேன். ஆக, ஒவ்வொரு காலகட்டத்திலும் மாநில அரசினுடைய நிதி ஆதாரங்களை, ஒன்றிய அரசு தொடர்ச்சியாக வஞ்சித்துக் கொண்டு வருகிறது.

### ரயில்வே நிதி ஒதுக்கிலும் பாரபட்சம்!

இரயில்வே திட்டங்களை எடுத்துக்கொண்டால், நம்முடைய இரயில்வே திட்டங்களுக்கு இதுவரை நிதி குறைவாகத்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. 2023-2024 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் மாநிலத்திற்கான ஒதுக்கீடு, ஒன்றிய அளவில் வெறும் 2.5 சதவிகிதம் மட்டும்தான். கடந்த ஐந்து ஆண்டுகளில் தமிழ்நாடு அரசினுடைய மொத்த ஒதுக்கீடு 18 ஆயிரம் கோடி ரூபாய். இது 2023 ஆம் ஆண்டில் உத்தரப்பிரதேசத்திற்கு ஒதுக்கிய, அவர்களுடைய ஒரு வருட ஒதுக்கீடான 17,500 ஆயிரம் கோடியைவிட கொஞ்சம் கூட. நமக்கு ஐந்து வருடங்களில் வந்தது, உத்தரப்பிரதேசத்தினுடைய ஒரு வருடத்தை விட கொஞ்சம்தான்கூட இருக்கிறது. இதை நான் எதற்கு இவ்வளவு விவரமாகச் சொல்கிறேன் என்று சொன்னால், ஒன்றிய அரசு நிதி பகிர்வில், நிதி பங்கீட்டில் எந்தளவிற்கு தமிழ்நாட்டை வஞ்சிக்கிறது என்பதைத்தான் நான் சொல்கிறேன்.

### பசு - பால் உவமை!

நம் வீட்டில் ஒரு பழமொழி சொல்வார்கள். பசு உங்களுக்கு, பால் எங்களுக்கு. பசு மாநில அரசுக்கு; பசுவை வளர்ப்பது, பசுவைப் பராமரிப்பது, பசுவை பார்ப்பது எல்லாம் மாநில அரசு, ஆனால் பால் வாங்கிக் கொள்வது ஒன்றிய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) ஆவி உமக்கு, அமுதபடி எமக்கு. நெய்வேத்தியம் செய்துஇந்தாருங்கள் என்று காண்பிக்கக்கூடிய ஆவி மாநில அரசுக்கு, ஆனால் அதில் இருக்கக்கூடிய அமுதபடி ஒன்றிய அரசுக்கு. (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, இந்தக் காரணம்தான் நடக்கிறதே ஒழிய இது தொடர்ச்சியாக நமக்குக் கொடுக்கக்கூடிய “வஞ்சனை செய்வாரடி கிளியே” என்று பாரதியார் பாடிய இந்தப் பாடல்களுக்கு எல்லாம் ஓர் உதாரணமாக இருக்கிறது என்று சொன்னால், இன்றைக்கு மத்தியிலே இருக்கக்கூடிய ஒன்றிய அரசு தொடர்ந்து தமிழ்நாட்டை வஞ்சிக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மகளிர் மற்றும் குழந்தைகளின் எதிர்கால நலன் கருதி ஒவ்வொரு நொடியும் சிந்தித்து வரக்கூடிய சரித்திர நாயகராக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய வழிகாட்டுதலின் படி இந்தத் துணை மதிப்பீடுகளை நான் இந்த மாமன்றத்தில் கொடுப்பதற்கு வாய்ப்பு வழங்கிய முதல்வர் அவர்களுக்கு நான் என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்தத் துணை மானியக் கோரிக்கையின்மீது, உறுப்பினர்கள் மொத்தம் 44 மானியங்கள்மீது 160 வெட்டுத் தீர்மானங்களைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். அவற்றையெல்லாம், நான் கவனத்தோடு பரிசீலித்து இருக்கிறேன். தமிழகத்தில் இருக்கக்கூடிய அனைத்து தரப்பு மக்களுடைய ஒட்டுமொத்த வளர்ச்சியை கணக்கில் கொண்டு பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்கு தேவையான நிதிகளை ஒதுக்கி, அவற்றை செயல்படுத்துவதற்கான வழிமுறைகளையும் வகுத்து, தமிழ்நாட்டை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்வதற்கான நடவடிக்கைகளை சீரிய முறையிலே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலோடு, இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது. எனவே, 2023-2024 ஆம் ஆண்டுக்கான முதல் துணை மானியக்கோரிக்கையின் மீது, உறுப்பினர்கள் கொண்டு வந்து இருக்கக்கூடிய வெட்டுத் தீர்மானங்களை நீங்கள் விலக்கிக் கொண்டு, இந்த துணை மானியக் கோரிக்கைக்கான தீர்மானங்களை நீங்கள் நிறைவேற்றித் தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இந்த நல்வாய்ப்பினை எனக்கு வழங்கி, சீர்மிகு வழிகாட்டுதல் வழங்கியிருக்கக்கூடிய முதலமைச்சர் அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் துணை மானியக் கோரிக்கையினைத் தயாரிப்பதற்கு உறுதுணையாக இருக்கக்கூடிய நிதித் துறைச் செயலாளர் உதயச்சந்திரன் ஐ.ஏ.எஸ். அவர்களுக்கும், நிதித்துறை அதிகாரிகள் அனைவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து என்னுடைய உரையை நிறைவுசெய்கிறேன். நன்றி, வணக்கம்.

இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு உரையாற்றினார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.10.2023) சென்னையில், வயது மூப்பின் காரணமாக உயிரிழந்த சன் செய்தித் தொலைக்காட்சியின் முதன்மை ஆசிரியரும், ஊடகவியலாளருமான மு. குணசேகரனின் தந்தை முனியா அவர்களின் உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். உடன் திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் அய்யா கி.வீரமணி, சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் த. மோகன், மாநில திட்டக்குழு துணைத் தலைவர் பேராசிரியர் ஜெ.ஜெயரஞ்சன், திராவிடர் கழக துணைத் தலைவர் கவிஞர் கலி. பூங்குன்றன், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக் குழுத்தலைவர் நே. சிற்றரசு ஆகியோர் உள்ளனர்.

### சன் செய்தித் தொலைக்காட்சி முதன்மை ஆசிரியர் -

# ஊடகவியலாளர் மு.குணசேகரன் தந்தை மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, அக். 13 -

சன் செய்தித் தொலைக்காட்சியின் முதன்மை ஆசிரியரும், ஊடகவியலாளருமான மு.குணசேகரன் அவர்களின் தந்தையார் மறைவிற்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-

சன் செய்தித் தொலைக்காட்சி முதன்மை ஆசிரியரும், ஊடகவியலாளருமான மு.குணசேகரன் அவர்களின் தந்தையார் முனியா அவர்கள் மறைவுற்ற செய்தியறிந்து மிகவும் மனம் வருந்தினேன்.

அவரது மறைவால் வாடும் குணசேகரன், அவரது குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

# தமிழ்நாட்டில் 16 ஐ.பி.எஸ். அதிகாரிகள் இடமாற்றம்!

*சென்னை, அக்.13 -*

தமிழ்நாடு அரசு நிர்வாக காரணங்களுக்காக அவ்வப்போது துறை வாரியாக அதிரடி மாற்றங்களை செயல்படுத்தி வருகிறது. அந்த வகையில், அரசுத் துறைகளில் பணியாற்றும் ஐ.ஏ.எஸ், ஐபிஎஸ் அதிகாரிகள் அவ்வப்போது பணியிட மாற்றம் செய்யப்படுவது வழக்கமான ஒன்றுதான்.

அந்த வகையில் தற்போது, ஐ.பி.எஸ். அதிகாரிகள் 16 பேர் பணியிட மாற்றம் செய்து தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது. அதன்படி,

குடிமைப்பொருள் வழங்கல் சி.ஐ.டி. பிரிவு டி.ஜி.பி. வன்னிய பெருமாள், ஊர்க்காவல் படை டி.ஜி.பி. ஆக பணியிட மாற்றம்.

சென்னை காவலர் பயிற்சி கல்லூரி ஐஜி தமிழ்ச் சந்திரன், TNUSRB உறுப்பினர் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

சென்னை பெருநகர மத்திய குற்றப்பிரிவு கூடுதல் ஆணையராக செந்தில் குமார் நியமிக்கப்பட்டுள்ளார்.

திருநெல்வேலி மாநகர காவல் ஆணையராக மகேஸ்வரி நியமிக்கப்பட்டுள்ளார்.

குடிமைப்பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வு பிரிவு ஐ.ஜி. ஆக ஜோஷி நிர்மல் குமார் நியமிக்கப்பட்டுள்ளார்.

சென்னை வடக்கு மண்டல சட்டம், ஒழுங்கு காவல் இணை ஆணையராக அபிஷேக் தீட்சித் நியமிக்கப்பட்டுள்ளார்.

சென்னை தொழில்நுட்ப சேவைகள் பிரிவு டி.ஐ.ஜி. ஆக திஷா மிட்டல் நியமிக்கப்பட்டுள்ளார்.

சென்னை தலைமையக டி.ஐ.ஜி. ஆக ஐ.பி.எஸ். அதிகாரி சாமுண்டீஸ்வரி நியமிக்கப் பட்டுள்ளார்.

சென்னை போதைப் பொருள் தடுப்புப் பிரிவு எஸ்.பி. ஆக சாம்சன் நியமிக்கப்பட்டுள்ளார்.

ராமநாதபுரம் கடலோர பாதுகாப்பு குழும எஸ்.பி. ஆக ஹரி கிரண் பிரசாத் நியமிக்கப்பட்டுள்ளார்.

காத்திருப்போர் பட்டியலில் இருந்து தீபா சத்யன், தமிழக காவல்துறை நிர்வாக பிரிவு ஏ.ஐ.ஜி. ஆக நியமிக்கப்பட்டுள்ளார்.

தென்காசி மாவட்ட காவல் கண்காணிப்பாளராக சுரேஷ் குமார் நியமிக்கப்பட்டுள்ளார்.

நீலகிரி மாவட்ட காவல் கண்காணிப்பாளராக சுந்தரவடிவேல் நியமிக்கப்பட்டுள்ளார்.

திருவாரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளராக ஜெயக்குமார் நியமிக்கப்பட்டுள்ளார்.

கரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளராக பிரபாகர் நியமிக்கப்பட்டுள்ளார்.

கன்னியாகுமரி மாவட்ட காவல் கண்காணிப்பாளராக ஆக சுந்தரவதனம் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு அரசு செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

### முதல்வர் தலைமையிலான அரசு வாரி வழங்குகின்ற அரசு!

# தமிழ்நாடு முழுவதும் ரூ.242 கோடியில் 71 திருமண மண்டபங்கள்!

## பேரவையில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு விளக்கம்!

சென்னை, அக். 13 -

கோயில்களுக்கு தங்கும் விடுதிகள் திருமண மண்டபங்களை வாரி வழங்குகின்ற அரசு நம்முடைய முதல்வர் அரசு என்றும் தமிழ்நாடு முழுவதும் ரூ.242 கோடி மதிப்பீட்டல் 71 திருமண மண்டபங்கள் கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்று இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு பெருமிதத்துடன குறிப்பிட்டார்.

**இந்து சமய அறநிலையத் துறை**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நேற்று முன்தினம் (11.10.2023) வினா விடை நேரத்தின்போது, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அரூர் சட்டமன்ற உறுப்பினர் வே.சம்பத்குமார், திருவாரூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பூண்டி கலைவாணன், மயிலம் சட்டமன்ற உறுப்பினர் சி.சிவக்குமார், பழனி சட்டமன்ற உறுப்பினர் ஐ.பி. செந்தில் குமார், தென்காசி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.பழனி நாடார், விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி. பிரபாகர ராஜா ஆகியோர் எழுப்பிய வினாக்களுக்கு பதிலளித்தார்.

**வே.சம்பத்குமார்:** தீர்த்தமலை, அருள்மிகு தீர்த்தகிரிஸ்வரர் திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்களுக்கு தங்கும் விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா ?

**அமைச்சர் பி.கே. சேகர்பாபு :** தீர்த்தகிரி மலை என்பது 750 படிகளை கொண்ட அருள்மிகு தீர்த்தகிரிஸ்வரர் திருக்கோயில் அமைந்த மலையாகும். அத்திருக்கோயிலுக்கு கடந்த 14.09.2023 அன்று நேரடியாக ஆய்வுக்கு சென்றிருந்தேன். இந்த பகுதியானது வனத்துறைக்கு சொந்தமான இடத்தில் அமைந்திருப்பதால் உறுப்பினர் அவர்களின் கோரிக்கையான தங்கும் விடுதி கட்டித் தருகின்ற வாய்ப்பு இல்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**வே.சம்பத்குமார்:** கடந்த மாதம் அமைச்சர் வருகை தந்தார்கள். பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியில் 10 ஏக்கர் நிலம் அந்த கோயிலுக்கு சொந்தமான இடம் என 1893 ல் பிரிட்டிஷ் கவர்மெண்ட் அறிவித்திருக்கிறது. தற்போது படிக்கட்டுகள், தரைதளம் சீரமைத்தல், கோயில் புனரமைப்பிற்கு கொடையாளர்கள் நிதியோடு வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். இரவு நேரங்களில் பக்தர்கள் தங்குவதற்கு மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகவே வனத்துறையிடம் கலந்தாலோசித்து தங்கும் விடுதி கட்டி தர வேண்டும். அதேபோல அந்த கோயிலுக்கு தார்சலை அல்லது வின்ச் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

**அமைச்சர் பி.கே. சேகர்பாபு :** அத்திருக்கோயிலில் ரூ.222 லட்சம் செலவில் 14 சன்னதிகள் தற்போது புதுப்பிக்கின்ற திருப்பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அதேபோல் அந்த வனப்பகுதியில் தீர்த்தகிரீஸ்வரரை தரிசனம் செய்ய செல்கின்ற 750 படிகளை சீரமைத்தல், கருங்கல் தரைத்தளம் அமைக்கின்ற பணி மற்றும் கான்கிரீட் மலைப்பாதையை சீரமைத்தல் பணிக்கு வனத்துறையிடம் அனுமதி கேட்டு பரிவேஷ் மூலம் விண்ணப்பித்து இருக்கின்றோம். இதுகுறித்து வனத்துறை அமைச்சர் அவர்களோடு கலந்து பேசி இருக்கின்றோம் கூடிய விரைவில் அனுமதி பெற்று தரப்படும் என்ற உறுதியளித்திருக்கின்றார். ஆகவே அடுத்த மாதத்திற்குள் கருங்கல் படிகளை சீரமைக்கும் பணி, மலைப்பாதையை சீரமைக்கின்ற பணி, தரை தளம் அமைக்கின்ற பணி என அனைத்து பணிகளும் தொடங்கப்படும்.

**வே.சம்பத்குமார் :** மலைக்கோயில் கீழ்கோயிலில் வருடத்திற்கு 250 திருமணங்கள் நடைபெறுகிறது. அங்கே திருமணத்திற்கு வருபவர்கள் அமர்ந்து உணவு அருந்துவதற்கு இடமில்லை. போதிய இடம் இருக்கின்ற காரணத்தினால் சமையல் கூடத்துடன் சேர்ந்த உணவுக்கூடம் கட்டித் தர வேண்டும். கீழ் பகுதியில் உள்ள ராஜகோபுரம் இடிந்த நிலையில் இருக்கின்றது. புதிதாக ஒரு ராஜகோபுரம் கட்டுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அரூர் வர்ணேஸ்வரர் கோயிலுக்கு திருப்பணி மேற்கொள்வதற்கு மண் பரிசோதனை நடந்துக் கொண்டிருக்கிறது. உபயதாரர்கள் நிதி வழங்க தயாராக இருக்கிறார்கள். ஆகவே, அந்த கோயிலை கட்டுவதற்கு கூடிய விரைவில் ஆணை பெற்று தர கேட்டு கொள்கின்றேன். அதேபோல மொரப்பூர் சிங்காரத்தோப்பு முனியப்பன் கோயில் மிகவும் பிரசித்தி பெற்ற கோயிலாகும். புதன் மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் அசைவம் சமைத்து தெருக்களிலேயே அமர்ந்து உணவு அருந்துகின்ற நிலை இருக்கின்றது. இடிந்த நிலையில் உள்ள மேற்கூரைகளை புனரமைக்கவும், மொரப்பூர் பேருந்து நிலையத்தில் அருகில் உள்ள திருமண மண்டபத்தில் சமையல் கூடம் இல்லை. அதற்கு சமையல் கூடம் கட்டித் தரவும், அரூர் மஞ்சவாடி கணவாய் வெள்ளையப்பன் கோயிலுக்கு ஒரு உணவு கூடம் கட்டித் தரவும் கேட்டுக் கொள்கிறேன்.

**அமைச்சர் பி.கே.சேகர் பாபு :** இந்த ஆட்சி இன்னார் இனியவர் என்று பார்க்காமல் கேட்கின்ற திருமண மண்டபங்கள், தங்கும் விடுதிகளை வாரி வழங்கி இருக்கின்ற ஆட்சியாகும். முதலமைச்சர் தலைமையிலான அரசால் தமிழ்நாடு முழுவதும் ரூ.70.50 கோடி மதிப்பீட்டில் 17 தங்கும் விடுதிகளும், ரூ.257.28 கோடி மதிப்பீட்டில் 73 திருமண மண்டபங்களும் கட்டும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. உறுப்பினர் கோரிய தீர்த்தகிரீஸ்வரர் மலைக் கோயிலின் கீழ்தளத்தில் உள்ள திருக்கோயிலுக்கு அருகில் தனியாருக்கு சொந்தமான இடங்கள்தான் அதிக அளவிற்கு இருக்கின்றன. 1,000 ஆண்டுகள் பழமை வாய்ந்த திருக்கோயிலை சுற்றி யாராவது தானமாகவோ அல்லது விலைக்கோ இடத்தை தர முன்வந்தால் நிச்சயமாக உறுப்பினரின் கோரிக்கையை முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று நிறைவேற்றி தரப்படும். முனீஸ்வரர் கோயிலுக்கு திருமண மண்டபம் கேட்டீர்கள். அங்கு ஏற்கனவே 2015 ஆம் ஆண்டு கட்டப்பட்ட 120 பேர் அமர்கின்ற அளவிற்கான ஆஸ்பெட்டாஸ் சீட்டினால் கூரை அமைக்கப்பட்ட திருமண மண்டபம் இருக்கின்றது. அதன் கூரையை உடனடியாக கான்கிரீட் தளத்திற்கு மாற்றி திருமண மண்டபம் புதுப்பித்து தரப்படும்.

**கே.பூண்டி கலைவாணன் :** மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் தனது இளம் பிராயத்திலேயே துணிச்சலோடு நீந்தி கடந்த கமலாலயத்தை இன்றைய முதல்வர் கமலாலயத்தை கடந்து செல்லும் போதெல்லாம் ஆள் அரவமற்ற அந்த நிலையை பார்த்து செல்லும் நிலையில் கமலாலய குளத்தில் திருவாரூருக்கு ஒரு அடையாளமாக உள்ள தேர் சுற்றிவரும், தெப்பம் செல்லும் அந்த குளத்தில் ஏற்கனவே சுற்றுலா துறையின் சார்பாக படகு போக்குவரத்து இருந்தது. இப்போது இல்லை. ஆகவே, இந்து சமய அறநிலையத்துறை சார்பாக கமலாலயத்தில் படகு சவாரி ஏற்பாடு செய்வதோடு, மிதவை பூங்காவையும் அமைத்து தருமாறு தங்கள் வாயிலாக அமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன்.

**அமைச்சர் பி.கே. சேகர்பாபு :** 2021 ஆம் ஆண்டு ஏற்பட்ட பெரு மழை வெள்ளத்தின் போது சுற்றுச்சுவர் படிக்கட்டுகள் இடிந்து விழுந்ததால் சாலை சேதமடைந்த நிலையில், ஆழித்தே ரோட்டம் நடைபெற 20 நாட்கள் தான் இருந்தது. முதலமைச்சர் இந்த நிலையை அறிந்து உடனடியாக நேரடியாக சென்று கள ஆய்வு செய்து இந்த ஆண்டு ஆழித்தேர் ஓட வேண்டும் என்று உத்தரவிட்டார். 15 நாட்களில் அந்த சாலையை மேம்படுத்தி, ஓடுமா ஓடாதா என்று கேள்வியோடு இருந்த ஆழித்தேரை ஓட்டிய பெருமை முதலமைச்சர் அவர்களை சாரும் என்பதை இந்த நேரத்தில் குறிப்பிட்டு, உறுப்பினர் வைத்த கோரிக்கையான படகு சவாரி குறித்து சுற்றுலா துறையோடு கலந்து பேசி வாய்ப்பு இருந்தால் சுற்றுலா துறையோ அல்லது இந்து சமய அறநிலையத்துறை சார்பிலோ நிறைவேற்றி தரப்படும்.

**சி.சிவக்குமார் :** எனது மயிலம் சட்டமன்ற தொகுதி, வல்லம் ஒன்றியம், வீரணாமூர் அகத்தீஸ்வரர் கோயில் மிகவும் சிதிலமடைந்து உள்ளது. மன்னர்கள் காலத்தில் கட்டப்பட்ட அக்கோயிலை புதிதாக கட்டி குடமுழுக்கு நடத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**அமைச்சர் பி.கே. சேகர் பாபு :** இது போன்ற முன்னோர்கள் நமக்கு விட்டு சென்ற பொக்கிஷங்களான ஆயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட திருக்கோயில்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்று தமிழக முதல்வர் பொறுப்பேற்ற பிறகு உத்தரவிட்டதன் அடிப்படையில் தமிழ்நாடு முழுவதும் 1,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட திருக்கோயில்கள் என 714 திருக்கோயில்கள் பட்டியலிடப்பட்டு இருக்கின்றன. 1,000 ஆண்டுகளுக்கு மேற்பட்ட திருக்கோயில்களுக்கு திருப்பணிகள் செய்ய வேண்டும் என்றால் போதிய நிதி ஆதாரங்கள் அந்தந்த திருக்கோயில்களில் இல்லாத நிலையை அறிந்து 2022 2023 ஆம் நிதியாண்டில் ரூபாய் 100 கோடியை மானியமாக தந்து இது வரையில் எந்த ஆட்சியிலும் ஒதுக்காத அளவிற்கு மானியமாக நிதி வழங்கிய பெருமை முதலமைச்சர் அவர்களை சாரும். அதோடு மட்டுமில்லாமல் 2023 2024 ஆம் நிதியாண்டிற்கும் மீண்டும் ரூ.100 கோடியை மானியமாக வழங்கியுள்ளார்கள். இந்த ரூ.200 கோடியோடு உபயதாரர்களும் திருப்பணி மேற்கொள்ள சம்மதம் வழங்கி இருக்கின்றார்கள். திருக்கோயில் நிதி உள்பட ஒட்டுமொத்த நிதியில் 197 திருக்கோயில்கள் திருப்பணிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன.

நம்முடைய உறுப்பினர் கோரிய அகத்தீஸ்வரர் கோயிலும் அந்த பட்டியலில் அடங்கும் என்று நினைக்கின்றேன். இல்லையென்றாலும் இந்த திருக்கோயிலையும் அதில் சேர்த்து திருப்பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஐ.பி.செந்தில்குமார் :** பழனி அருள்மிகு தண்டாயுத பாணி திருக்கோயில் கட்டுப்பாட்டில் உள்ள கொடைக்கானல் மேல் மலை பூம்பாறை கிராமத்தில் அமைந்து இருக்கக்கூடிய சித்தர் போகர் அவர்களால் வடிவமைக்கப்பட்ட தசாவாசன முருகன் சிலை அமைந்துள்ள வரலாற்று சிறப்புமிக்க திருக்கோயிலுக்கு வாரத்திற்கு சுமார் 25,000 பக்தர்கள் வரக்கூடிய சூழல் உருவாகி இருக்கிறது. சுபமுகூர்த்த தினங்களில் நிறைய திருமணங்களும் நடக்கிறது. அத்திருக்கோயிலின் ராஜகோபுரத்தை புதுப்பித்து தருவதுடன், ஒரு திருமண மண்டபமும் அமைத்து தர வேண்டுமென தங்கள் வாயிலாக கேட்டு அமருகிறேன்.

**அமைச்சர் பி.கே. சேகர் பாபு :** உறுப்பினர் பூம்பாறை பகுதியிலே அமைந்திருக்கின்ற திருக்கோயிலுக்கு ராஜகோபுரத்தை புதுப்பித்து தர வேண்டும் என்ற கோரிக்கை வைத்திருக்கின்றார். இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு ஒன்பது நிலை, ஏழு நிலை, ஐந்து நிலை என்று 35 ராஜ கோபுரங்களை கட்டுவதற்கு உத்தரவிட்ட கம்பீரமான உள்ளம் கொண்ட முதலமைச்சர் அவருடைய ஆட்சி என்பதை இந்த நேரத்தில் கோடிட்டு காட்டி, நீங்கள் விரும்பிய இந்த பூம்பாறை அம்மன் திருக்கோயிலுக்கு ராஜகோபுரம் புதுப்பித்துக் கட்டுவதற்கும், அந்த கோயிலை புனரமைப்ப தற்குண்டான பணிகளையும் உடனடியாக மேற்கொள்வோம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**எஸ்.பழனி நாடார் :** பேரவை தலைவர் அவர்களே தென்காசி தொகுதிக்குட்பட்ட தென்காசி நகரிலுள்ள அருள்மிகு காசிவிஸ்வநாதர் திருக்கோயிலுக்கு சுமார் 17 ஆண்டுகளுக்கு முன்பு குடமுழுக்கு விழா நடைபெற்றது. அதனால் இந்தாண்டு அத்திருக்கோயிலுக்கு குடமுழுக்கு விழா நடத்த அரசு ஆவன செய்யுமாறு கேட்டு அமர்கிறேன்.

**அமைச்சர் பி.கே. சேகர்பாபு :** உறுப்பினர் பழனி நாடார் கோரிய அருள்மிகு காசிவிஸ்வநாதர் திருக்கோயிலுக்கு திருப்பணிகள் மேற்கொள்ள தொல்லியல்துறை அனுமதி, மண்டல, மாநில வல்லுநர் குழுக்கள் அனுமதி பெறப்பட்டு ரூ.3.5 கோடி மதிப்பீட்டில் 15 பணிகள் மேற்கொள்ளப்பட இருக்கின்றது. கூடுதலாக அவர் கேட்காமலேயே ரூ.1.60 கோடி செலவில் ஒரு ராஜகோபுரம் திருப்பணியும் மேற்கொள்ளப்பட இருக்கின்றது. அடுத்த முகூர்த்த தினத்தில் நிச்சயமாக அந்த திருப்பணிகள் தொடங்கப்படும். நம்முடைய உறுப்பினர் அவர்களும் திருப்பணி தொடக்க நிகழ்ச்சிக்கு அழைக்கப்படுவார் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஏ.எம்.வி. பிரபாகர ராஜா :** நேற்று சட்டமன்ற கூட்டத்தொடரில் 110 விதியின் கீழ் ஒரு சட்டத்தை போட்டு இந்தியாவில் முதல் மாநிலமாக லட்சோப லட்சம் வணிகர்களின் வாழ்வை ஒளி விளக்கேற்றிய முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொண்டு சென்னையின் மையப் பகுதியான கோயம்பேடு பகுதியில் அமைந்துள்ள குறுங்காலீ ஸ்வரர் திருக்கோயிலுக்கு 5 நிலை ராஜகோபுரம் கேட்டோம். அமைச்சர் அவர்களும் வழங்கி இருக்கிறார்கள். மேலும் அந்த திருக்கோயிலுக்கு பங்குனி உத்திரம், மகா சிவராத்திரி போன்ற திருநாட்களில் வீதியுலா வருவதற்கு தேர் வேண்டுமென்று பக்தகோடிகள் கோரிக்கை விடுத்துள்ளார்கள். அமைச்சர் தேர் செய்து தருவாரா என்றும், திருக்கோயில் தெப்பக்குளத்தை சீர் செய்து தருவாரா என்றும் தங்கள் வாயிலாக கேட்டு அமைகிறேன்.

**அமைச்சர் பி.கே. சேகர் பாபு :** உறுப்பினர் கடந்த கூட்டத் தொடரிலேயே கோயம்பேடு, அருள்மிகு குறுங்காலீஸ்வரர் திருக்கோயிலுக்கு ஒரு திருத்தேர் வேண்டும் என்று கோரிக்கை வைத்திருந்தார். சுமார் ரூ.53.90 லட்சம் செலவில் திருத்தேர் அமைக்க ஒப்புதல் பெறப்பட்டிருக்கின்றது. பசு மடம் அமைப்பதற்கு ரூ. 10.60 லட்சமும், புதிய அன்னதான கூடம் அமைப்பதற்கு ரூ.49 லட்சமும், அருள்மிகு வைகுண்டவாச பெருமாள் திருக்கோயிலில் புதிய ஐந்து நிலை ராஜகோபுரம் கட்ட ரூ.85.40 லட்சமும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட் டுள்ளது. பசுமடம் அமைக்கும் பணி 04.10.2023 அன்று தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. திருத்தேர் திருப்பணி, ராஜகோபுரத் திருப்பணி, புதிய அன்னதானக்கூடம் கட்டும் பணி வருகின்ற 25.10.2023 அன்று காலை தொடங்கி வைக்கப்பட உள்ளது. உறுப்பினர் தம்பி பிரபாகர ராஜா அவர்களையும் நிகழ்ச்சிக்கு அழைக்க இருக்கின்றோம். பேரவை தலைவர் வாயிலாக அவர் கேட்டதையும் தருகிறோம் அவர் கேட்காததையும் தருகிறோம். கேட்டதையும் கேட்காததையும் தருகின்ற அரசு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அரசு என்பதனை உறுப்பினருக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.





கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞர் அணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, திருச்செங்கோட்டில் நடைபெற்ற நாமக்கல் மேற்கு மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர் இளைஞர் அணி பொறுப்புகளுக்கான நேர்காணல் நிகழ்ச்சியில் நாமக்கல் மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் தலைமை தாங்கினார். இதில் கழக இளைஞர் அணி துணை செயலாளர்கள் பி.எஸ்.சீனிவாசன், சி.ஆனந்தகுமார், எஸ்.ஜேயால், இன்பா ஏ.என்.ரகு, நா.இளையராஜா, ப.அப்துல் மாலிக், கே.இ.பிரகாஷ், க.பிரபு, பிரதீப்ராஜா, நாமக்கல் மேற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.பாலாஜி, துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.




ஈரோடு தெற்கு மாவட்டக் கழக இளைஞர் அணி அமைப்பாளர் ஜெ.திருவாசகம் ஏற்பாட்டில் கழக இளைஞர் அணி துணைச் செயலாளர்கள் பி.எஸ்.சீனிவாசன், சி.ஆனந்த குமார், எஸ். ஜேயால், இன்பா ஏ.என்.ரகு நா.இளையராஜா, ப.அப்துல் மாலிக், கே.இ.பிரகாஷ், க.பிரபு, பிரதீப்ராஜா ஆகியோர் முன்னிலையில் ஈரோடு தெற்கு மாவட்ட 4 சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட ஒன்றிய, பகுதி, பேரூர் நேர்காணல் நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சியில் மாவட்டக் கழக நிர்வாகிகள் ஆ.செந்தில்குமார், செல்லபொன்னி, ப.க.பழனிசாமி, மாநகர கழகச் செயலாளர் மு.சுப்பிரமணியம், பகுதி கழக செயலாளர்கள் எஸ்.குமாரவடிவேல், வி.சி.நடராஜன், பொ. ராமச்சந்திரன், குறிஞ்சி என்.தண்டபாணி, அக்னி சந்துரு ( எ) சந்திரசேகர், வில்லரசம்பட்டி முருகேசன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### இராயபுரம் ப. பொன்னுரங்கம்

### அக்டோபர் 13 (1989)



பள்ளிப் பருவத்திலேயே திராவிட இயக்க கொள்கையினால் ஈர்க்கப்பட்டு கழகத்தில் உறுப்பினராக சேர்ந்தவர்.

இராயபுரம் பகுதிக் கழகச் செயலாளராகவும், கழகத்தின் தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர்.

இராயபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக தொடர்ந்து மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பாகப் பணியாற்றியவர்.

இந்தித் திணிப்பை எதிர்த்து நடைபெற்ற அறப்போராட்டம், விலைவாசி உயர்வு உள்ளிட்ட கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

1986ஆம் ஆண்டு மத்திய அரசின் இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து அரசியல் சட்டப்பிரிவை தீயிட்டு எரித்ததால் சட்டமன்ற உறுப்பினர் பதவியை இழந்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# வாலிபப் பெரியார் ஏ.வி.பி.ஆசைத்தம்பி நூற்றாண்டு விழா!

## (சில நினைவுக் குறிப்புகள்)

நேற்றைய தொடர்ச்சி...

இத்தகவலை, விருதை தி.மு.கழகத்தினர், மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டதோடு வழக்கை நடத்துவதற்கு நிதியைத் திரட்டுவதற்காக ஐந்து பேர் கொண்ட, நிதி வசூல் கமிட்டியொன்றையும் நிறுவினர். மேற்படி கமிட்டிக்குப் பொருளாளராக இருந்து பணியாற்ற தோழர் அய்யாச்சாமியும், செயலாளராக இருந்து ஆவன செய்ய தோழர் இளஞ்செழியனும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மேற்படி வழக்குக்கு, அண்ணாதுரை அளித்த ரூபாய் 50, முதன் முதலாக வரவு வைக்கப்பட்டது. பின்னர் ஆசைத்தம்பியின் தந்தையாரையும் மற்ற முக்கியத் தோழர்களையும் சந்தித்துவிட்டு, தகவலைப் பொதுச்செயலாளரிடம் அறிவிப்பதற்காகத் தோழர் என்.வி.என். நேராகச் சென்னைத் திரும்பினார்.

அப்பீல் வழக்கு சம்பந்தமாக, உடனிருந்து கவனித்துக் கொள்வதாகத் திருச்சி மாவட்டத் தோழர்களும், மேற்படி மாவட்ட தி.மு.க. துணைச்செயலாளர் தோழர் பராங்குசமும் அறிவித்துள்ளனர். 23ஆம் தேதி ஞாயிறு விடுமுறையாதலால், திங்களன்று, தோழர் ஆசைத் தம்பியும், மற்ற இரு தோழர்களும் சிறைச்சாலை யிலிருந்து விடுவிக்கப்பட்டனர். உரிமைப் போரில் துவக்க அத்தியாயம் ஆரம்பமாகியிருக்கிறது. கஷ்ட நஷ்டங்களைத் துச்சமென மதிக்கும் திறமை படைத்த காளைகள்தாம் நாம்! எனினும், நீதி கோரி நிற்கிறோம்! அதற்கான நடவடிக்கைகளைச் செய்வதென, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் முடிவு செய்யப் பட்டிருக்கிறது. தலைமைக் காரியாலயத்தின் விருப்பையறிந்து மனமகிழ்வுடன் பொறுப்பேற்றுக் கொண்ட விருதைக் கிளைக் கழகத்தவரின் ஆர்வத்தைப் பாராட்டுகிறோம். வெற்றி பெறுவதற்கான ஏற்பாடுகளை, விரைவில் முடிக்குமாறு வேண்டிக் கொள்கிறோம்.

**காந்தியாரின் பாதையில் நடப்பதாகக் கர்ஜனை யெழுப்பும் கனவான்கள் ஆட்சியில், நம்மீது வீசப் பட்டிருக்கும் அம்பு இது. சாதாரணமானதல்ல, கூட்டைத் திறந்துவிட்டு 'சிங்கமே வெளியில் வா!' என்று வேண்டு மென்றே வீண் வம்புக்கிழுப்பது. ஆகவே, நாம் நீதியின் முன் செல்கிறோம் நேர்மையைத் துணையாகக் கொண்டு!**

**உரிமைப் போரின் முதல் அத்தியாயம் ஆரம்பமாகிறது, அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய இயன்ற அளவு பொருளுதவி செய்யுமாறு பொதுவாக வசதி படைத் தோரையும், குறிப்பாக விருதுநகர்த் தோழர்களையும் கேட்டுக் கொள்கிறோம்."**

ஆசைத்தம்பியின் வழக்கு உயர்நீதிமன்றத்திற்கு அப்பீல் செய்து கொள்ளப்பட்டது. அப்பீலில், அவர் உயர்நீதி மன்றத்தால், ஜாமீனில் விடுதலையானார். இதற்குள் சுமார் இரண்டு மாதத்தில் இச்செய்தி கழகத்தை மகத்தான எழுச்சிக் குள்ளாக்கியது. காங்கிரசாரின் இச்செய்கையினால், ஆசைத்தம்பியின் புகழ் கட்சி வட்டாரங்களைக் கடந்து, தமிழகப் பொது மக்களிடை யேயும் பரவலாயிற்று.




ஆசைத்தம்பி இனப்பற்று மிக்கவர். தமிழர்களின் இன்னல்களைக் கண்டு சகித்துக்கொள்ள முடியாதவர். அவர், 1953ஆம் ஆண்டு பம்பாய் தாராவி பகுதிக்கு அழைக்கப்பட்டு, அங்குள்ள தமிழர்கள் ஏற்பாடு செய்த நிகழ்ச்சியில் பங்கு கொண்டார். அச்சமயத்தில் அவர்கள் படும் இன்னல்களைக் கண்டு கசிந்துருகி அதுகுறித்து 'திராவிட நாடு' இதழில் (01.02.1953) பின்வரும் சிறிய கட்டுரையொன்றை அவர் எழுதியிருந்தார். அதனை இங்கே அப்படியே வெளியிடுகிறோம். அக்கட்டுரைக்குக் 'கண்டேன், திகைத்தேன்' என தலைப்பிடப்பட்டிருந்தது.

'பம்பாய் தாராவி என்றால், நல்லதொரு இடமாக இருக்கும் என்று நினைத்தேன். நேரில், தாராவியைத் தரிசித்தபோது, பம்பாய் தாராவி, பாழடைந்த, இடமாக சுடுகாடு போன்று காட்சியளிக்கக் கண்டேன். ஆயிரமாயிரம் தமிழர்கள் இங்கு வாழ்கிறார்கள் என்று சொல்லுவதைவிட, தினமும் வதைகிறார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். சென்னை மாகாணத்திலே உள்ள சேரிகளைவிட, மிகமிகக் கேவலமான மண் குடிசைகளும், கிழிந்த சாக்குகளால் ஆக்கப்பட்ட கூடாரங்களும், எட்டு அடி அகல நீளமுள்ள குடிசைகளிலேயே நான்கு பேர்களுக்குக் குறையாமல் குடியிருந்து கொண்டு, சென்னைத் தமிழர்கள் பம்பாயில் கொடுமைப்பட்டு வருகிறார்கள்.

சிறைச்சாலைகளில் உள்ள அறைகளில், நீள அகலம் அதிகமானதாகவும், காற்றோட்டமானதாகவும், சுகாதாரமாகவும் உள்ளன என்று சொல்லலாம். ஆனால், பம்பாய் தாராவியிலே, தமிழ் மக்கள் வாழும் குடிசைகள், சிறைச் சாலைகளைவிட மோசமாகக் காட்சியளிக்கின்றன. சாதாரண பஞ்சாயத்து போர்டின் நிர்வாகத்தின் கீழுள்ள கிராமம்கூட சுத்தமாக சுகமாக அமைக்கப்பட்டுள்ளது. ஆனால், பம்பாய் தாராவியைப் பார்க்கிறபோது, பம்பாய் கார்ப்பரேஷன், அதற்கு மேயர், கமிஷனர், அங்கத்தி னர்கள் ஆகியோர் இருக்கிறார்களா? செத்து விட்டார்களா? - என்றுதான் கேட்கத் தோன்றுகிறது.

பம்பாய் கார்ப்பரேஷன் மனது வைத்தால் ஓட்டைக் குடிசையிலே வாழுகிற தாராவி தமிழர்கட்கு, கூட்டுறவுத் திட்டப்படி குறைந்த வாடகையில் சிறந்த வீடுகளைக் கட்டிக் கொடுக்க முடியும். பல நகர சபைகள், இதைச் செய்கின்றன. சென்னை கார்ப்பரேஷன்,



1924–2023

கோயம்புத்தூர் நகர சபை ஆகியவை வடநாட்டவர் என்று கருதப்படுகின்ற அகதிகட்கு, அழகான வீடு அமைத்துக் கொடுக்கவும், வேலை வாங்கிக் கொடுக்கவும், ரொக்கக் கடன் கொடுக்கவுமான காரியங்களில் ஈடுபட்டும், தாராவியில் வாழுகிற தமிழர்கட்கு பம்பாய் சர்க்காரோ கார்ப்ப ரேஷனோ தாராவிப் பகுதியில் தன் கடமையைச் செய்யத் தவறியது வருந்தத்தக்கது மட்டு மல்ல; கண்டிக்கக் கூடியதுமாகும். தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் தோழர் காமராசர், தாராவிக்கு வந்து விட்டுப் போயிருந்தார் என்று கேள்விப்பட்டேன்.

'மந்திரி மேக்கர்' என்று மதிக்கப்படுகின்ற காமராசர், தாராவியில் வாழுகின்ற தன் நாட்டு சகோதரர்கள் நிலைமையைப் பற்றி, பம்பாய் சர்க்காருக்காவது சென்னை சர்க்காருக்காவது அறிவித்திருந்தால் கூட, ஏதாவது நன்மை கிடைத்திருக்கும். உலகத்தில், ஒவ்வொரு இடமும் வேகமாக முன்னேறிக் கொண்டு போகும் இந்தக் காலத்திலே, தாராவி, நாளுக்கு நாள் தாழ்ந்து கொண்டே போகிறது. சென்னைத் தலைவர்களும் அரசாங்கமும் தாராவிப் பகுதியின் கேவல நிலையை மாற்ற, தக்க நடவடிக்கையை உடனே எடுக்க வேண்டும். தாராவியிலே வாழுகிற தமிழ் மக்களும், சாதி மத கட்சி பேதமின்றி ஐக்கியப்பட்டு ஆவன செய்ய வேண்டும்."

ஆசைத்தம்பியின் தனி அரசு இதழ், தனது பங்களிப்பை உரிய தருணத்தில் அளித்தது. இவர் 'திராவிட சினிமா' எனும் இதழையும் நடத்தினார். இவரது தனியரசு 1958 முதல் 1963 வரை நாளேடாக வெளிவந்தது. இதனைக் 'கழக தினத் தந்தி' எனப் போற்றினர். இவரது கதை சொல்லும் திறன் புனைவாற்றல் ஆகியன காரணமாகத் திரைப்படத் துறையிலும் இவர் பணியாற்றினார். மாடர்ன் தியேட்டர்ஸ் கதை இலாக்காவில் பணியாற்றிய இவர் அந்நிறுவனம் தயாரித்த ஆங்கிலத் தழுவலான ஒரு கதைக்கு உரையாடல் எழுதினார். அந்தத் திரைப் படம்தான் எம்.ஜி.ஆர். நடித்த 'சர்வாதிகாரி'! இதனைத் தொடர்ந்து இவர் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் கதை, உரையாடல் அமைத்த 'வளையாபதி' படத்திற்கும் சில காட்சிகளை அமைத்துக் கொடுத்தார். இவ்விவரத்தை இயக்க நடிகரான வளையாபதி முத்துகிருஷ்ணன் நம்மிடம் தெரிவித்தார்.

**ஏ.வி.பி.ஆசைத்தம்பியின் கட்சி வாழ்க்கை என்பது மிகவும் உறுதியானது. அவர், இறுதிவரையும் கட்சி மாறாமல் பணியாற்றியவர். எத்தகைய சர்ச்சைகளையும் அவர் கட்சியினுள்ளே விவாதித்தார். ஒரு கட்டத்தில், அவரது தனி அரசு ஏட்டிலும் பகிரங்கமாகவும் எழுதினார். ஆனால், எந்தச் சூழ்நிலையிலும், மோதல்கள் - பிளவு வரை சென்ற போதும், அவர் உறுதியோடு தி.மு. கழகத்தில் தொடர்ந்தார். அறிஞர் அண்ணா இவரின் முரண்பாடுகளை அணுகிய விதத்தினை இராம.அரங் கண்ணல் தமது நினைவுகளில் குறிப்பிட்டுள்ளதை இன்றும் நாம் படிக்கலாம். அதில் அண்ணாவிடம் ஆசைத்தம்பி காட்டிய பணிவையும் நாம் அறிந்து கொள்ளலாம். கட்சிப் பங்கு கொள்ளச் செய்த அத்தனை போராட்டங்களிலும் அவர் கலந்து கொண்டு சிறை சென்றார். தி.மு.கழகம் தொடங்கப்பட்ட காலத்தி லிருந்தே அதன் முன்னணித் தலைவர்களுள் ஒருவராக வும், கட்சியின் பிரச்சாரக்குழு உறுப்பினராகவும் கட்சி வாழ்க்கையைத் தொடங்கிய அவர், கட்சியின் துணைப் பொதுச்செயலாளர் வரை உயர்ந்தார். 'நெருக்கடி நிலை' பிரகடனம் செய்த பிறகு தி.மு.கழக ஆட்சி, முதன் முதலில் கலைக்கப்பட்டபோது 'மிசா' கைதியாக அவர் சிறையில் ஓராண்டுக்காலம் இருந்தார்.**

1957 - ஆம் ஆண்டு கழகம் தேர்தலில் ஈடுபட்ட போது, ஆசைத்தம்பி ஆயிரம் விளக்குத் தொகுதியிலிருந்து சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். சட்டமன்றத்தில் அவர் எல்லா விவாதங்களிலும் கலந்து கொண்டார்; கேள்வி மேல் கேள்விகளை எழுப்பினார். 1967 இல் எழும்பூர்த் தொகுதியிலிருந்து சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1968-69 இல் தமிழகச் சட்டமன்றத்தில் மதிப்பீட்டுக் குழுத் தலைவராக அவர் பணியாற்றினார். 1968இல் இங்கிலாந்தில் நடந்த காமன்வெல்த் நாடாளுமன்ற மாநாட்டில் இந்தியப் பிரதிநிதி யாக அவர் கலந்து கொண்டார். நெருக்கடி நிலைக்கு பிறகு, நாடாளுமன்றத்தில் நடைபெற்ற தேர்தலில் தி.மு.கழகத்தின் சார்பாக ஏ.வி.பி.ஆசைத்தம்பி மட்டுமே வெற்றிபெற்றார். அவர் நாடாளுமன்றத்தில் தி.மு.க.வின் குரலாக எதிரொலித்தார். அவர் நாடாளு மன்றத்தில் இறுதியாக ஆற்றிய உரையை இங்கே வெளியிடுகிறோம்:

"மத்திய அரசின் உள்துறை இலாகா, இந்தியாவில் பலமதங்கள் இருந்தும் இந்து ராஜ்யம் உருவாக்க முயல்வதாக கோவிந்தன் நாயர் குற்றம் சாட்டினார். ஆனால், மத்திய அரசின் உள்துறை இலாகா, கோவிந்தன் நாயர் கூறியதுபோல், வெறும் இந்து ராஜ்யத்தை மட்டு மல்ல; இந்திமொழி பேசும் இந்துக்களின் ராஜ்யத்தை உருவாக்க முயல்கிறது என்று தி.மு.க. சார்பில் குற்றம் சாட்டுகிறேன். இந்தியா விடுதலை பெற்றதும், சுதந்திர மதமதப்பில், அனைவரும் இருந்த நேரத்தில் 'இந்திதான் இந்தியாவின் ஆட்சி மொழி' என்ற அரசியல் சட்டத்தை உருவாக்கிவிட்டனர்.

இந்தி ஆட்சி மொழியாக பவனிவர ஆரம்பித்தவுடன், இதை அனுமதித்தால், இந்தி ஏகாதிபத்தியம் உருவாகிவிடும் என்றும்; ஜனநாயக சமதர்மக் குடியரசுக்கே இடமில்லாமல் போய்விடும் என்றும் கூறி, இந்தியை எதிர்த்த முதல் நாடு நான் சார்ந்துள்ள தமிழ்நாடுதான்! எட்டு வீரர்கள் உயிரோடு தங்களைத் தாங்களே எரித்துக் கொண்டு இந்தியை எதிர்த்தனர். ஆயிரக்கணக்கில் சிறை சென்றோம். இங்கே, அப்போது அமைச்சர்களாக இருந்த சி.சுப்பிரமணியமும் ஓ.வி. அழகேசனும் தங்களது எதிர்ப்பைக் காட்டினர். இதன் பிறகாவது, 'இந்தி பேசாத பகுதி மக்கள் விரும்பும் வரை, ஆங்கிலமே தொடர்ந்து நீடிக்கும்' என்று பழைய பிரதமர் பண்டித நேருவின் உறுதிமொழி காப்பாற்றப்பட்டதா ? இல்லவே இல்லை! 1975 ஜூன் 25 இல், திருமதி இந்திரா காந்தியால் அவசர நிலைப் பிரகடனம் அறிவிக்கப்பட்ட அடுத்த நாளே இந்தியை எங்கும் புகுத்த உள்துறை இலாகாவில் இந்திக்கென்றே ஒரு தனி இலாகா பெரிய அளவில் அமைக்கப்பட்டுச் செயல்பட ஆரம்பித்தது.


**க.திருநாவுக்கரசு**
திராவிட இயக்க எழுத்தாளர்




இதன் விளைவு, இன்று வட இந்தியாவிலுள்ள வங்கிகள், பொதுத்துறை நிறுவனங்கள் ஆகியவற்றின் நடவடிக்கைகள் இந்தியில் மட்டுமே உள்ளன. உள்துறை இலாகாவின் இத்தகைய செயலால் இந்தி வெறியர் களுக்கு தைரியம் ஏற்பட்டு, குடியரசுத் தலைவரே அவமானப்படுத்தப்பட்டுள்ளார். சமீபத்தில் குடியரசுத் தலைவர் அவர்கள் இரண்டொரு பொது நிகழ்ச்சிகளில் கலந்துகொண்ட போது, அவர் முன்னிலையிலேயே இந்தி மொழியில் பேசி அவரை வேதனைப்படுத்தி, ஆத்திரப்பட வைத்தனர்.

உள்துறை இலாகாவின் முறையற்ற செயலால், இந்தியக் குடியரசுத் தலைவரே இரண்டாந்தர பிரஜை யாகத் தாழ்த்தப்பட்டு விட்டார். இந்த நிலை நீடித்தால், இந்தி இந்தியா, இந்தி பேசாத இந்தியா என்று நாடு இரண்டு துண்டாகும் நிலை ஏற்படும் என்று எச்சரிக்கிறேன். எனவே, இந்தியாவைக் காப்பாற்ற தேசிய ஒருமைப் பாட்டை நிலைநாட்ட, நேருவின் உறுதி மொழியை,



உள்துறை இலாகா உடனே அமுல்படுத்த முன்வர வேண்டும். நேருவின் உறுதிமொழி அமுல் படுத்தப்படுகிறதா என்பதைக் கண்காணிக்க, ஒரு நாடாளுமன்றக் குழு அமைக்கவேண்டும். அந்தக் குழுவில் இந்தி பேசாத பகுதியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமே அங்கம் வகிக்க வேண்டும்.

ஆசைத்தம்பியின் கட்சி வாழ்க்கை -அவரது உறுதி மிக்க போக்கு அனைவராலும் பாராட்டப் பெற்ற ஒன்றாகும். 1950 இல் காஞ்சியில் செங்கற்பட்டு மாவட்ட தி.மு.க. மாநாட்டை தொடங்கி வைத்து பேசுகிறபோது அவர் எந்த உறுதியில் பேசினாரோ, அதைவிடப் பன்மடங்கு உறதியோடு கோவை தி.மு.க. 5 ஆவது மாநில மாநாட்டில் (1975) அவர் பேசினார். 1971 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில், ஆசைத்தம்பி, வெற்றி வாய்ப்பை இழந்தார். ஆனால், முதல்வரான கலைஞர் அவர்கள், அவரை சுற்றுலா வாரியத் தலைவராக நியமனம் செய்தார். சுற்றுலா வாரியத்தின் மூலமாக வெளிநாட்டுப் பயணிகளைக் கவரத்தக்க வகையில் திட்டங்களை வகுத்து செயலாற்றினார்.



**ஆசைத்தம்பி, ஒரு பத்திரிகையாளராக, எழுத்தாளராக, சிறந்த பேச்சாளராக, திரைக்கதை அமைக்கும் வளமான உரையாடல் ஆசிரியராக, நகரமன்ற உறுப்பினராக, சட்டமன்ற உறுப்பினராக, நாடாளுமன்ற உறுப்பினராக பொது வாழ்வில் உயர்ந்து கொண்டே சென்றவர். பள்ளியிறுதி வகுப்பே படித்தாலும், தமது ஆற்றலை அவர் வளர்த்துக் கொள்வதில் எப்போதும் முனைப்பாக இருந்தவர். தன்னம்பிக்கை, விடாமுயற்சி, உறுதி ஆகிய முக்குணங்களை, அவர் இயல்பாக பெற்றிருந்தார். தி.மு.கழகத்தின் சார்பாக, ஒற்றைக்குரல் மனிதராக அவர் நாடாளுமன்றத்தில் விளங்கினார். இயற்கை அக்குரலையும் அக்கட்டத்தில் நம்மிடமிருந்து பிரித்தது மிகுந்த வேதனையான ஒன்றாகும்.**

ஆசைத்தம்பி அவர்களது மரணம், யாரும் எதிர்பாராமல் நடந்தேறி விட்டது. அவர் தமது மனைவியார் பரமேஸ்வரி அம்மையாருடன் அந்தமான் தீவுகளில் கழக நிகழ்ச்சிகளில் பங்கு கொள்வதற்காக விமானத்தின் மூலம், 6-4-1979 மாலை அந்தமான் போர்ட் பிளேயர் விமான நிலையத்தில் இறங்கினார். சிறிது நேரம் ஓய்வு எடுத்துக் கொண்டார். பிறகு, கழகக் கொடியை ஏற்றி வைத்துவிட்டு, தொழிலாளர் நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டார். அப்போது அந்நிகழ்ச்சியிலிருந்து கொஞ்ச தூரம் நடந்துவரும் போது, 'சற்று களைப்பாக இருக்கிறது. கண்ணை மறைப்பதுபோல் தெரிகிறது' என்று தம் மனைவியாரிடமும் மற்றவர்களிடமும் தெரிவித்தார். ஆனால், உண்மை என்னவென்றால், அன்று காலையிலேயே (6-4-79) அவருடைய தலையில் உள்ள இரத்தக் குழாய் சிறிதளவு வெடித்து, அது அவருக்கே தெரியாமல் அவர் கண்ணை மறைக்கும் அளவிற்கு ஆகிவிட்டது.

இவ்வளவு வேதனைகளும் அவருக்கு எந்தவித 'வலியுமில்லாமல்' நடந்தேறி இருக்கிறது. உடனே மருத்துவ மனைக்கு அவரை அழைத்துச் சென்று சேர்த்தார்கள். ரத்தநாளம் வெடித்திருக்கிறது; இங்கே யுள்ள மருத்துவமனை வசதி போதாது, திரும்ப அழைத்துச் செல்வதுதான் நல்லது என்று டாக்டர்கள் கூறினார்கள், மருத்துவ வசதி இல்லாத இடத்தில் சிக்கிக் கொண்டோமே என அவர் மனைவியிடத்திலே வருந்தினார். அழைத்துச் செல்லப் பட்ட அதே மருத்துவ மனையில் 7-4-1979 இரவு 8.00 மணியளவில் ஆசைத்தம்பி இயற்கை எய்தினார்.

அவரது உடல் அந்தமானிலிருந்து சென்னைக்கு கொண்டு வருவதற்கு பெரிய பிரச்சினையாக இருந்தது. 10-4-1979 காலைதான், சென்னைக்கு விமானத்தில் உடலைக் கொண்டு வந்து பொது மக்களின் பார்வைக்கு அஞ்சலி செலுத்துவதற்காக வைக்கப்பட்டது. கழகத் தலைவர், பொதுச்செயலாளர், இதர தலைவர்கள் அனைவரும் விமான நிலையம் சென்று உடலைப் பெற்றுக் கொள்ளக் காத்திருந்தனர். அன்று மாலையே, ஆசைத்தம்பியின் இறுதிப் பயணம் முடிந்தது.

கலைஞர் அவர்கள், ஆசைத்தம்பியின் மறைவு குறித்து தமது இரங்கற் செய்தியில் "தலையில் பேரிடி வீழ்ந்து விட்டது போன்று அதிர்ச்சிக்கு ஆளாகியிருக்கிறேன்! தன்மான இயக்கத்தின் தளபதிகளில் ஒருவர், தி.மு.கழகத்தின் வலிமைமிக்க தூதர்; நிலைகுலை யாத கொள்கை நெஞ்சம் கொண்டவர், ஐயாவின் தொண்டர், அண்ணாவின் அருமைத் தம்பி, ஐயோ! எங்கள் ஆசைத்தம்பி போய்விட்டார்! அவர் நாவசைந்தால் நாடதிர வேங்கையின் முழக்கமன்றோ கேட்கும்?

அரிமா என நிமிர்ந்து நின்று, மேடைகளில் அவர் அடுக்கடுக்காக எடுத்து வைத்த வாதத் திறமையில் வயப்படாதவர் யாருண்டு? எத்தனையோ கருத்து வேறுபாடுகள், இருப்பினும், அவற்றை பேசித் தீர்த்துக் கொண்டு அன்று முதல் இன்று வரையில் கழகத்தின் கட்டுக் கோப்புக்கு இம்மியளவு ஊனமும் ஏற்படாமல் காத்து வந்த என் ஆருயிர் உடன்பிறப்பை இழந்துவிட்டேனே!" என்று குறிப்பிட்டிருந்தார்.

பேராசிரியர் ஆசைத்தம்பியைப் பற்றி குறிப்பிடும் போது, 'ஆசைத் தம்பியைப் போல இன்னொருவரை ஈடாகச் சொல்ல முடியாது' எனக் குறிப்பிட்டிருந்தார்.

1989-90ஆம் ஆண்டுகளில் முரசொலிக்காக ஆசைத்தம்பியைப் பற்றி நாம் எழுதினோம். அப்போது சிலவிவரங்களைத்தெரிந்துகொண்டோம். அந்தக் கட்டுரையின் திருத்தப்பட்ட வடிவமே இக்கட்டுரை. ஆசைத்தம்பியின் மனைவி பரமேசுவரி அம்மையார் இப்போது இல்லை. அக்.13ஆம் தேதி நடைபெறும் நிகழ்ச்சிக்காக நமது தோழர்கள் ஆசைத்தம்பியின் மகன் சௌந்திர பாண்டியனைச் சந்தித்து உள்ளனர். இன்று கூட்டம் மிகச் சிறப்பாக நடைபெறவிருக்கிறது. அக்கூட்டத்தில் ஆசைத்தம்பியின் மகன் சௌந்திர பாண்டியன் கலந்து கொள்கிறார். ஆசைத்தம்பியின் இன்னொரு மகன் காந்தியும் ஒரு மகளும் இப்போது உயிருடன் இல்லை.

ஏ.வி.பி.ஆசைத்தம்பியின் நூற்றாண்டு தொடக்க விழாக் கொண்டாடப்படுகின்ற இந்நேரத்தில் கொள்கையிலும் இயக்கத்தின் மீதும் அவர் எவ்வளவு பற்று உடையவராக இருந்து மறைந்து இருக்கிறார் என்பதினை ஒவ்வொரு தோழரும் நினைவு கூர்ந்து அவரைப் போற்ற வேண்டும். வாழ்க ஆசைத்தம்பியின் புகழ்!

இன்று - சென்னையில் நடைபெறுகிறது! கழக முன்னாள் துணைப் பொதுச் செயலாளர்

# 'வாலிபப் பெரியார்' ஏ.வி.பி.ஆசைத்தம்பி நூற்றாண்டு விழா!

## திருவுருவப் படத்தைத் திறந்து வைத்து - முதல்வர் மு.க.ஸ்டாலின் சிறப்புரையாற்றுகிறார்!

### பொதுச் செயலாளர் துரைமுருகன் தலைமை! அமைச்சர் பி.கே.சேகர்பாபு வரவேற்புரை! தயாநிதி மாறன் எம்.பி. முன்னிலை!

**சென்னை, அக். 13-**

**"வாலிபப் பெரியார்" என கழகத் தவரால் அன்போடு அழைக்கப்பெற்றவரும், கழக முன்னாள் துணைப் பொதுச் செயலாளரும், கழகம் வளர்த்த மூத்த முன்னோடியுமான ஏ.வி.பி.ஆசைத்தம்பி அவர்களின் நூற்றாண்டு விழா, சென்னையில் இன்றைய தினம் நடைபெறுகிறது.**

**கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்கள் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு, ஏ.வி.பி. ஆசைத் தம்பி அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்துச் சிறப்புரையாற்றுகிறார்.**

இந்நிகழ்வு பற்றிய விபரம் வருமாறு:-



திராவிட முன்னேற்றக் கழக மூத்த முன்னோடிகளில் ஒருவர், கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர், இயக்கத்தின் சிங்கம், கழகத்தின் கருவூலம், தந்தை பெரியாரின் மாணவர், தன்மானப் பேரறிஞர் அண்ணா அவர்களின் அன்புத் தம்பி, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் உற்ற தோழர், கழகம் போட்டியிட்ட முதல் தேர்தலில், சட்டப் பேரவை உறுப்பினராகவும்; பின்னர் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுகழகக்கொள்கையினை பாராளுமன்றத்தில் ஓங்கி ஒலித்தவர், பெரியார் அவர்களுடைய உணர்வை தன்னுடைய சொற்பொழிவுகளிலே அப்படியே பிரதிபலிக்கின்ற ஒரு பேராற்றல் இருந்த காரணத்தாலே வயதில் இளைஞராக இருந்தாலுங்கூட "வாலிபப் பெரியார்" என்று கழக நிர்வாகிகள், தோழர்களால் அன்போடு அழைக்கப்பட்டவர், ஏ.வி.பி. ஆசைத்தம்பி அவர்கள்!

நெருக்கடிநிலை காலக்கட்டத்தில் 'மிசா கைதியாக' ஓராண்டு சென்னை மத்திய சிறையில் இருந்த பெரும் தியாக வரலாற்றுக்கும் உரியவர், ஆசைத்தம்பி அவர்கள்.

அப்பெருமகனாரின் நூற்றாண்டு விழா, தி.மு.க. தலைமைக் கழகம் சார்பில், சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.வின் நிகழ்ச்சி ஏற்பாட்டில், இன்றைய தினம் (13.10.2023 - வெள்ளிக்கிழமை) மாலை 5.30 மணியளவில், சென்னை - பாரிமுனை இராஜா அண்ணாமலை மன்றத்தில் நடைபெறுகிறது.

இம்மகத்தான நிகழ்வுக்கு எழிலான ஏற்பாடுகளைச் செய்துள்ள, சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு, விழாவில் வரவேற்புரையாற்றுகிறார்.

கழக விளையாட்டு மேம்பாட்டு அணியின் செயலாளர் தயாநிதி மாறன் எம்.பி., விழாவிற்கு முன்னிலை வகிக்கிறார்.

கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்கள், விழாவிற்குத் தலைமை வகிக்கிறார்.

இந்நிகழ்வில் - கழகத் தலைவரும்முதல்வருமானமு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு, 'வாலிபப் பெரியார்' ஏ.வி.பி.ஆசைத்தம்பி அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்துச் சிறப்புரையாற்றுகிறார்.

துறைமுகம் மேற்குப் பகுதிச் செயலாளர் எஸ்.முரளி நன்றி கூறுகிறார்.

இந்நிகழ்வில் - ஏ.வி.பி.ஆசைத்தம்பி அவர்களின் புதல்வர் சௌந்திரபாண்டியன் உள்ளிட்ட குடும்பத்தினரும், கழக முன்னோடிகளும், நிர்வாகிகளும், தோழர்களும் கலந்துகொள்கிறார்கள்.

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. - இந்நிகழ்வுக்கு சிறப்பான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.



கடந்த வாரம் இயற்கை எய்திய உதகை வடக்கு ஒன்றிய கழக இளைஞர் அணி அமைப்பாளர் முருகேஷின் தாயார் அவர்களிடம் கழக நிர்வாகிகள், உறவினர்கள் முன்னிலையில் கழக துணை பொது செயலாளரும், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினருமான ஆ.இராசா 1 லட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கி ஆறுதல் கூறினார்.

# ஆவூர் அல்லது வந்தவாசியில் "பாய் நெசவுப் பூங்கா!"

## சட்டப் பேரவையில் - கு. பிச்சாண்டி வலியுறுத்தல்!

**சென்னை, அக். 13-**

**சட்டப் பேரவையில், 10.10.2023 அன்று கேள்வி நேரத்தின்போது பேசிய - சட்டப் பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, திருவண்ணாமலை மாவட்டத்தில் வந்தவாசி அல்லது ஆவூரில் "பாய் நெசவுப் பூங்கா" அமைக்கப்பட வேண்டுமென வேண்டுகோள் விடுத்தார்.**

இது தொடர்பாக பேரவையில் நடைபெற்ற விவாதம் வருமாறு:-

**கு.பிச்சாண்டி:** சிறுபான்மையின மக்கள் பல்வேறு ஊர்களில் பாய் நெசவுத் தொழிலை செய்து வருகிறார்கள். என்னுடைய கீழ்ப் பெண்ணாத்தூர் தொகுதியிலுள்ள ஆவூர் என்ற கிராமத்திலே பாய் நெசவாளர்கள் இருக்கிறார்கள். சீர்காழியில் இருக்கின்ற பாய் நெசவாளர்களுக்கெல்லாம் இலவச மின்சாரம் வழங்கப்படுகிறது. ஆனால், எங்களுடைய ஆவூர் பகுதி மற்றும் வந்தவாசி பகுதியிலே இருக்கின்ற பாய் நெசவாளர்களுக்கு இலவச மின்சாரம் வழங்கப்படுவதில்லை. ஆகவே, சிறுபான்மையின மக்களுக்கு இலவச மின்சாரம் வழங்குகின்ற வகையிலேயும்,— தமிழ்நாட்டில் எங்கேயுமே பாய் நெசவுப் பூங்கா இல்லாமல் இருக்கிறது. ஆகவே, எங்களுடைய மாவட்டத்தில், ஆவூர் அல்லது வந்தவாசியில் கண்டிப்பாக ஒரு பாய் நெசவுப் பூங்கா அமைக்க வேண்டும்.



மின்சாரத் துறை அமைச்சர் அவர்களோடு கலந்து பேசி, முதல்வர் அவர்களுடைய ஒப்புதலைப் பெற்று, மின்சாரம் சம்பந்தமான பிரச்சினைகள் தீர்க்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேநேரத்தில், - மின்சாரம் - பாய் நெசவுத் தொழிலுடைய பொருள்கள் எல்லாம் நம்முடைய அரசு நிறுவனங்களுக்கெல்லாம் முறையாக supply செய்யப்படுகின்றன. கதர் வாரியத் தின்மூலம், போக்குவரத்துக் கழகங்கள், சிறைத் துறைகள் மற்றும் எல்லாத் துறைகளுக்கெல்லாம் கொடுக்கப்படுகிறது. அதில் எந்தவித மான தவறும் நடைபெறவில்லை. வந்தவாசியில் சிறுபான்மையின மக்கள் நிறையபேர் வசிக்கிறார்கள். சிறுபான்மையின மக்களுடைய கோரிக்கைகள் சம்பந்தமாக பேரவைத் துணைத் தலைவர் கோரிக்கை வைத்திருக்கிறார். நிச்சயமாக இந்த அரசு அதைப் பரிசீலிக்கும். அதற்கு இடம் ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று அவரை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

தொழிற்கூடம் ஒன்றை கட்டித் தந்து, அதற்குரிய பாய் உற்பத்தி செய்கின்ற சங்கம் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

அனைத்து மாவட்டங்களிலும்

# 'தோழி' பணிபுரியும் மகளிர் விடுதிகள் கட்டப்பட நடவடிக்கை!

## சட்டப் பேரவையில் - சமூக நலன், மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி பி. கீதாஜீவன் தகவல்!

**சென்னை, அக்.13-**

**சட்டப் பேரவையில், 10.10.2023 அன்று கேள்வி நேரத்தின்போது பதிலளித்த சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் பி.கீதா ஜீவன், 'தோழி' பணிபுரியும் மகளிர் விடுதிகள் கட்டுவது குறித்து விளக்கமளித்தார்.**

சட்டப்பேரவையில் இது தொடர்பாக நடைபெற்ற விவாதம் வருமாறு:-

**கு.மரகதம் தங்கவேல்:** மதுராந்தகம் தொகுதியில் பணிபுரியும் மகளிருக்கான விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**அமைச்சர் பி.கீதாஜீவன்:** 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள மதுராந்தகம் தொகுதியின் மக்கள் தொகை 2,75,953 ஆகும். அதில் 1,37,903 நபர்கள் பெண்கள் ஆவர். இத்தொகுதியில் 95 தொழிற்சாலைகளில் 678 பெண் ஊழியர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.



செங்கல்பட்டு மாவட்டத்தில் சோழிங்கநல்லூர்ஒக்கியம் துரைப்பாக்கம் என்ற இடத்தில் 50 படுக்கை வசதிகள் கொண்ட அரசு பணிபுரியும் மகளிர் விடுதி ஒன்று செயல்பட்டு வருகிறது.

அதுமட்டுமல்லாமல், கூடுவாஞ்சேரியில் புதிய 'தோழி' பணிபுரியும் மகளிர் விடுதியானது 120 படுக்கை வசதிகளுடன் தமிழ்நாடு மகளிர் விடுதி கழகத்தின்மூலம் கட்டப்பட்டு, 13.7.2023 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டு மக்களின் பயன்பாட்டிற்கு வந்துள்ளது.

தாம்பரத்தில் 420 படுக்கை வசதிகளுடன் கட்டப்பட்டு வரும் பணிபுரியும் மகளிர் விடுதி தற்போது பணிகள் முடியும் தருவாயில் உள்ளது. இவை தவிர, செங்கல்பட்டு மாவட்டத்தில் மொத்தம் 15 பதிவு பெற்ற தனியார் மகளிர் விடுதிகள் செயல்பட்டு வருகின்றன.

மதுராந்தகம் தொகுதியிலுள்ள பெண் பணியாளர்கள் மேற்குறிப்பிட்ட விடுதிகளில் தற்போது பயன்பெற்று வருகின்றனர். தேவையைப் பொறுத்து, எதிர்காலத்தில் 'தோழி' பணிபுரியும் மகளிர் விடுதி அமைத்திட இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

**கு.மரகதம் தங்கவேல்:** மதுராந்தகம் நகர் பகுதியில் 'தோழி' மகளிர் தங்கும் விடுதி தொடங்கப்பட்டால், அங்கிருந்து அவர்கள் பணித் தலங்களுக்குச் செல்ல உதவியாக இருக்கும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மதுராந்தகம் நகரத்தில் தங்கும் விடுதி அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**அமைச்சர் பி.கீதாஜீவன்:** பெண்களின் அதிக பணிப் பங்கேற்பை ஊக்குவிக்கும் வகையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் பணிபுரியும் மகளிர் விடுதி அமைத்திட வேண்டுமென்று நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய கொள்கையாக முடிவெடுக்கப்பட்டு, அதை இந்தத் துறைக்கு அறிவுறுத்தியுள்ளார்கள். அதன்படி, ஏற்கெனவே, அடையாறு, விழுப்புரம், வேலூர், தஞ்சாவூர், பெரம்பலூர், திருநெல்வேலி, சேலம் ஆகிய இடங்களில் விடுதிகள் புதியதாக நவீனப்படுத்தப்பட்டு, சீரமைக்கப்பட்டு, சகல வசதிகளுடன் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

'தோழி' நிறுவனத்தின் மூலம் - புதிய பணிபுரியும் மகளிர் விடுதிகள் திருச்சிராப்பள்ளி மற்றும் கூடுவாஞ்சேரி பகுதிகளில் திறந்து வைக்கப்பட்டுள்ளன. அதுமட்டுமல்லாமல், தாம்பரம், திருவண்ணாமலை, ஓசூர், கிருஷ்ணகிரி, St. Thomas Mount ஆகிய பகுதிகளிலும் புதியதாக பணிபுரியும் மகளிர் விடுதிகள் கட்டப்பட்டு வருகின்றன. ஆகவே, இதுமட்டுமல்லாமல், பணிபுரியும் மகளிர் விடுதிகள் இல்லாத எல்லா மாவட்டங்களிலும் அமைத்திட வேண்டுமென்று, அதற்கு இடம் தேர்வு செய்து அளித்திட வேண்டுமென்று மாவட்ட நிருவாகத்திடம் நாங்கள் கேட்டுக் கொண்டுள்ளோம். ஆகவே, உறுப்பினரின் அவர்களுடைய கோரிக்கையையும் தேவையைப் பொறுத்து இந்த அரசு பரிசீலிக்கும்.

**கு.மரகதம் குமரவேல்:** கைம்பெண்கள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், பொருளாதாரத்தில் பின்தங்கிய பெண்கள் மற்றும் குழந்தை திருமணத்திலிருந்து மீட்கப்பட்ட சிறுமிகள், குடும்பத்தினரால் புறக்கணிக்கப்பட்ட பெண்கள் தங்குவதற்கான சேவை இல்லம் மதுராந்தகம் தொகுதியில் அமைக்கப்படுமா?

**அமைச்சர் திருமதி பி.கீதா ஜீவன்:** நலிவடைந்த பெண்கள், கைம்பெண்கள், அதைப்போல தாய், தகப்பன் இல்லாத ஆதரவற்ற பெண்களெல்லாம் தங்குவதற்கு தாம்பரத்தில் சேவை இல்லம் செயல்பட்டு வருகிறது. அங்கே தங்கக்கூடிய பிள்ளைகளுக்கு நாம் கல்வி அளிக்கிறோம், தொழிற்பயிற்சி அளிக்கிறோம். ஆகவே, அவர்களுக்கு பாதுகாப்பும் அளிக்கப்பட்டு, அவர்கள் எதிர்காலத்தில் ஒரு வேலையைத் தேடக்கூடிய அளவிற்கு, அவர்களுக்கு, அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்துகிற அந்தத் தேர்வுக்கான பயிற்சியும் இந்தத் துறையால் வழங்கப்பட்டு வருகிறது. ஆகவே, அப்படி மதுராந்தகம் தொகுதியிலுள்ள பெண்களையெல்லாம் நீங்கள் அதில் தங்க வைத்து பயனடையலாம். ஏனென்றால், அங்கு அதிகமான பேர் தங்கும் அளவிற்கு இடவசதி உள்ளது. 100 பேர் நன்றாக தங்கலாம் என்றால், இப்போது அங்கே 25 பேர், 33 பேர் தான் இருக்கின்றனர். ஆகவே, அந்த இல்லத்தை மதுராந்தகம் தொகுதியிலுள்ள பெண்களும் பயன்படுத்திக்கொள்ளலாம் .

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.

தமிழ்நாடு வீட்டு வசதிவாரியம் மூலம்

# இராமநாதபுரம் தொகுதியில் அடுக்குமாடி குடியிருப்புகள்!

## சட்டப் பேரவையில் - காதர்பாட்சா முத்துராமலிங்கம் வலியுறுத்தல்!

**சென்னை, அக்.13-**

**சட்டப் பேரவையில், அக்.10 அன்று கேள்வி நேரத்தின்போது கழக உறுப்பினர் காதர்பாட்சா முத்துராமலிங்கம், 'இராமநாதபுரம் தொகுதியில் தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம் மூலம் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்ட வேண்டும்' என வேண்டுகோள் விடுத்துள்ளார்.**



சட்டப்பேரவையில் இது தொடர்பாக நடைபெற்ற விவாதம் வருமாறு:-

**காதர்பாட்சா முத்துராமலிங்கம்:** இராமநாதபுரம் தொகுதியில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் மூலமாக அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**அமைச்சர் சு.முத்துசாமி:** இராமநாதபுரம் தொகுதியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான நிலம் ஏதுமில்லை. எனவே, புதிதாக அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டுகிற திட்டம் தற்போது இல்லை.

**காதர்பாட்சா முத்துராமலிங்கம்:** இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள இராமநாதபுரம் சட்டமன்றத் தொகுதி என்பது அந்த மாவட்டத்தினுடைய தலைமையிடமாக இருப்பதனால், அரசு அலுவலகங்களில் பணிபுரியும் பல்லாயிரக்கணக்கான அரசு ஊழியர்களுக்கு வீட்டு வசதியை ஏற்பாடு செய்து தந்திட நமது துறையின் சார்பாக இராமநாதபுரம் நகராட்சிக்குட்பட்ட 25வது வார்டு மூலக்கொத்தளம் என்னும் இடத்தில் ஏற்கெனவே வீட்டுவசதி வாரியக் கட்டடத்தின் கட்டடங்கள் இருக்கின்றன. 25 ஆண்டுகள் பழமையுற்றதால் அது இடிக்கப்பட்டு, 25வது வார்டில் தற்போது காலியிடமாக இருக்கின்றது. அந்த இடத்தை அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டித்தர வேண்டும்.

**அமைச்சர் சு.முத்துசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே 2, 3 திட்டங்கள் அங்கே செயல்படுத்தப்பட்டிருக்கின்றன. அதிலே சுயநிதித் திட்டத்தின் மூலமாக நிலங்கள் விற்கப்பட்டிருக்கிறது. அடுக்குமாடிக் குடியிருப்புகள் அரசுப் பணியாளர்களுக்காக வாடகைக் குடியிருப்புகளுக்காக கட்டித் தரப்பட்டிருக்கிறது. அதிலே ஏறத்தாழ 1,032 அடுக்குமாடிக் குடியிருப்புகள் ஏற்கெனவே இருந்தன. ஆனால், அதெல்லாம் மிகவும் மோசமடைந்துவிட்ட காரணத்தால் 594 அடுக்குமாடிக் குடியிருப்புகள் இடிக்கப்பட்டுவிட்டன. மீதமிருக்கிற 438 அடுக்குமாடிக் குடியிருப்புகளும்கூட இடிக்கிற நிலையிலேதான் இருக்கிறது. எனவே, எல்லாவற்றையும் இடித்துவிட்டு புதிதாக அங்கே கட்டடம் கட்டுவதற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. அவைகள் கட்டப்படுகிறபோது அங்கே தேவையான வீடுகள் அரசுப் பணியாளர்களுக்குக் கிடைக்கும். கூடுதலாகக் கிடைப்பதற்குக் கூட வாய்ப்பு இருக்கிறது.

**காதர்பாட்சா முத்துராமலிங்கம்:** அமைச்சர் அவர்கள் சொன்ன இடம் என்பது மாவட்ட ஆட்சித் தலைவர் வளாகத்திலுள்ள திருவாடனை தொகுதிக்குட்பட்ட பகுதி. நான் கோரிக்கை வைப்பது இராமநாதபுரம் நகராட்சிக்குட்பட்ட 25வது வார்டிலே நம்முடைய காலியிடங்கள் இருக்கின்றன. ஆகவே, பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து அந்த இடத்தில் புதியதாக ஒரு கட்டடம் கட்ட வேண்டும்.

அதேபோன்று, இராமநாதபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட இராமேஸ்வரம் பகுதியானது தற்போது வளர்ந்து வரக்கூடிய ஒரு பகுதியாக இருக்கின்றது. சுமார் இராமநாதபுரத்திலிருந்து 60 கிலோ மீட்டர் இராமேஸ்வரத்திற்கு இடைப்பட்ட இடமாக இருந்தாலும் அங்கும் பல்வேறு அரசுத் துறையைச் சார்ந்த அலுவலர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கின்ற காரணத்தினால், அங்கு நம்முடைய துறையின் சார்பாக காலியிடங்கள் இரு

**அமைச்சர் சு.முத்துசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமாக எங்கெங்கே இடமிருக்கிறதோ, அங்கே தேவைக்கேற்ப கட்டுவதற்கான நடவடிக்கை கண்டிப்பாக எடுக்கப்படும்.

முதலில் அரசுப் பணியாளர்களுக்கு வாடகைக்குக் கொடுப்பதற்காக எடுக்கிறபோது, அங்கு எவ்வளவு பணியாளர்கள் இருக்கிறார்கள், அவர்களிடத்தில் என்ன demand இருக்கிறது என்பதைப் பார்த்து, அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கலாம். பிற திட்டங்களுக்கு, அதேபோல மக்களிடத்தில் விசாரித்து, அதற்குப் பின்னர்தான் நடவடிக்கை எடுக்க வேண்டும். இப்படி கட்டப்பட்ட பல கட்டடங்கள் விற்கப்படாமல், அப்படியே பழுதடைந்து இடிக்கக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது. உதாரணமாக, உடுமலைப்பேட்டையில் 101 வீடுகளைத் தனித் தனியாக கட்டியுள்ளார்கள். அந்த 101 வீடுகளும் விற்கவில்லை. இன்றைக்கு அதை முழுவதுமாக இடிக்கவேண்டிய நிலை உள்ளது. எனவே, இதை முழுமையாக ஆய்வுசெய்து, அங்கே உள்ள தேவைக்கேற்ப வீடுகள் கட்டுவதற்கான நடவடிக்கைகள் கண்டிப்பாக எடுக்கப்படும்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.



தலைமைச் செயலகத்தில், நேற்று முன்தினம் (11.10.2023) வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தலைமையில் பயிர் பாதுகாப்புத் திட்டம் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர் சி.சமயமூர்த்தி, வேளாண்மைத் துறை ஆணையர் முனைவர். எல். சுப்ரமணியன், புள்ளியியல் துறை இயக்குநர் கணேஷ், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை இயக்குநர் முனைவர் எஸ்.நடராஜன், சர்க்கரைத் துறை கூடுதல் இயக்குநர் அன்பழகன், தலைமைப் பொறியாளர் (வே.பொ.) ஆர். முருகேசன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மாதவரம் தொகுதி மக்களின் குடிநீர் தேவைக்காக

# கூட்டுக் குடிநீர்த் திட்டம் தொடங்கப்படுமா?

## பேரவையில் மாதவரம் எஸ்.சுதர்சனம் கேள்வி!

சென்னை, அக்.13-

சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின் போது உறுப்பினர் மாதவரம் எஸ். சுதர்சனம் கேட்ட கேள்வியும் அதற்கு அமைச்சர் கே.என்.நேரு அளித்த பதிலும் வருமாறு :

**எஸ்.சுதர்சனம்:** மாதவரம் தொகுதியில் புழல் ஏரியும், சோழவரம் ஏரியும் உருவாகி சென்னை மாநகருக்குக் குடிநீர் ஆதாரமாகத் திகழ்ந்து கொண்டு இருக்கின்றது. அதிலே 4 TMC தண்ணீர் தேக்கி வைக்கப்படுகின்றது. ஆனால், அங்கே வசிக்கின்ற மக்களுக்கு பெருகிவரும் மக்கள் தொகையின் காரணமாக போதுமான பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைக்கப் பெறவில்லை ஆகவே, ஒரு கூட்டுக்குடிநீர் திட்டத்தை உருவாக்கித் தர முடியுமா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**கே.என்.நேரு:** திருவள்ளூர் மாவட்டத்திலிருந்துதான் முழுமையாக 3,4 ஏரிகளிலிருந்து சென்னைக்குக் குடிநீர் எடுத்துக் கொண்டு இருக்கிறோம். ஆனால், அங்கு சென்றபோது திருவள்ளூர் மாவட்டத்திலேயே, அங்குள்ள மக்கள் சொன்னார்கள் --இங்கிருந்து செல்கிறது



ஆனால், எங்களுக்கு கூட்டுக் குடிநீர் திட்டம் தேவை என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்குத்தான் நேற்று பதில் சொல்கிறபோதே சொன்னேன். செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து கூடுதலாக 250 MLD எடுக்கக்கூடிய வாய்ப்பு என்பது இன்னும் 7,8 மாதங்களில் கிடைக்கும் அப்படி கிடைக்கின்றபோது ஒரு பகுதி- pipeline மட்டும்தான் போடவேண்டும். புது குடிநீர் திட்டம் என்பது அல்ல pipeline connection கொடுத்தாலே திருவள்ளூர் மாவட்டத்தில் இருக்கக்கூடிய பெரும்பாலான நகரங்களுக்கு, அந்தத் தண்ணீர் வசதி கிடைக்கும் அதற்கான ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.



விழுப்புரத்தில் நடைபெற்ற குடிமைச் சமூகங்கள் முன்னெடுக்கும் இந்திய அரசியலமைப்புச் சட்ட பாதுகாப்பு பரப்புரை பொதுக்கூட்டத்தில் உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி கலந்துகொண்டு எழுச்சி உரையாற்றினார். மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ, தோழமைக் கட்சி நிர்வாகிகள் மனித நேய மக்கள் கட்சி, முஸ்தாக்தீன் வரவேற்புரையாற்றினார். இந்திய கம்யூனிஸ்ட் ஏ. வி. சரவணன், தமிழ்நாடு காங்கிரஸ் குலாம் மொய்தீன், கம்யூனிஸ்ட் இராமமூர்த்தி, வி.சி.க. பெரியார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் நகராட்சியில் புதிதாக கட்டப்பட்டுள்ள காய்கறி சந்தை, காயல்பட்டினம் நகராட்சியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, உடன்குடி பேரூராட்சியில் காய்கறி சந்தை, ஸ்ரீவைகுண்டம் பேரூராட்சியில் தினசரி காய்கறி சந்தை, சாத்தான்குளம் பேரூராட்சியில் தினசரி காய்கறி சந்தை உள்ளிட்ட முடிவுற்ற திட்டப்பணிகளை தொடங்கி வைத்து, புதிதாக கட்டப்பட இருக்கும் ஏரல் பேரூராட்சி புதிய அலுவலக கட்டிடம், சாத்தான்குளம் பேரூராட்சி பேருந்து நிலையம் மேம்பாடு மற்றும் ஆழ்வார்திருநகரி பேரூராட்சியில் அம்ரூத் திட்டத்தின் கீழ் குடிநீர் திட்டம் உள்ளிட்ட பணிகளுக்கு தி.மு.க. துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் கே.என்.நேரு ஆகியோர் அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தனர். உடன் மாவட்டச் செயலாளர் – அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், மாவட்ட ஆட்சியர் செந்தில்ராஜ், சிவராஜ், பிரம்மசக்தி, பை.மூ.ராமஜெயம், ரமேஷ், சுடலை மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு - தயாநிதிமாறன், எம்.பி. முன்னிலை! டி.சதீஷ்குமார் தலைமை!

# 6 தொகுதிகளில் மாநகராட்சி தூய்மைப் பணியாளர்களுக்கு தொடர் 18 மருத்துவ முகாம்கள்!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் துவக்கி வைக்கிறார்!

சென்னை, அக்.13-

சென்னை கிழக்கு மாவட்டம், துறைமுகம் தொகுதி, கலைஞர்-100, 45வது நிகழ்ச்சியாக “உடல் நலம் பேணுவோம்! உதயத்தை காணுவோம்! எனும் தலைப்பில் மருத்துவ முகாம் இன்று (13.10.2023-வெள்ளிக்கிழமை) காலை 9 மணியளவில், நாராயணபவன், வால்டாக்ஸ் சாலையில் நடைபெறுகிறது.

இம்மருத்துவமுகாமில் வட்ட கழகச் செயலாளர், டி.சதீஷ்குமார் தலைமை வகிக்கின்றார். சென்னை கிழக்கு மாவட்டக்கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அமைச்சர் பி.கே.சேகர்பாபு, கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர், கழக விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் தயாநிதி மாறன் எம்.பி., க.பிரபு, எஸ்.முரளி, எஸ்.இராஜசேகர், ஜி.எம்.தேவன், எம்.விஜயகுமார், இசட்.ஆசாத் எம்.சி., என்.பி.எம்.சேக் அப்துல்லா, பி.ஸ்ரீராமுலு. எம்.சி, எம்.வினாயகம், பா.ஜெகதீஷ், பி.விஜயகுமார், மே.ஜனார்த்தனன், ம.முத்துகுமார், ஆர்.கலைச்செல்வி, எம்.இ. கனி, பூங்காநகர் கண்ணன், ஆர். பி.ரமேஷ் முன்னிலை வகிக்கின்றனர்.

துறைமுகம் மேற்கு-கிழக்கு பகுதி கழக நிர்வாகிகள்: கே.ஆர்.அபரஞ்சி, ந.சுந்தரம், S.சந்தியாகு, செ.தமிழ்வாணன், வி.சந்தான லட்சுமி, சி.ப.ஜெயராமன், துறைமுகம் மேற்கு-கிழக்கு வட்ட கழக செயலாளர்கள்: சேப்பாக்கம் வே.பா.பிரபா கரன், மா.ஜெய்சங்கர், பா.கதிரவன், ஆர்.ரவிச்சந்திரன், ஜி.ராமமூர்த்தி, பா.அண்ணாதுரை, எஸ்.சத்தியநாராயணன், எஸ்.புகழேந்தி, ஆர்.ஏ.அஸ்லாம், டி.கதிரவன், எம்.பரத்குமார். கே. கவியரசு. ஆ.நா.பார்த்திபன் ஆகியோர் வரவேற்கின்றனர்.

6 சட்டமன்றத் தொகுதிகளில் பணியாற்றும் மாநகராட்சி தூய்மை பணியாளர்களுக்கான தொடர் மருத்துவ முகாம்களில் முதல் மருத்துவ முகாமை, கழக இளைஞர் அணிச் செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் துவக்கி வைக்கிறார்.

மேலும், இவ்விழாவில் மேயர் பிரியாராஜன், ப. தாயகம்கவி எம்.எல்.ஏ. இ.பரந்தாமன் எம்.எல்.ஏ, ஜோசப்சாமுவேல் எம்.எல்.ஏ., அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ., ப.ரங்கநாதன், மாநில நிர்வாகிகள்: கே. எஸ்.இரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா, கே.சந்துரு, பி.கே.மூர்த்தி.எம்.சி, சங்கரிநாராயணன்., எஸ். மணிமுடி, கே.எஸ்.எம். நாதன், வே.உமாகாந்த், பரிதிஇளம்சுருதி எம்.சி., மாவட்ட நிர்வாகிகள்: கோ.ஏகப்பன், தேவஜவகர், எ.புனிதவதி எத்திராசன்,எம்.சி., மண்டலகுழு தலைவர்கள்/நியமன குழு உறுப்பினர்கள்: கூ.பி. ஜெயின்.எம்.சி, சரிதா மகேஷ்குமார்.எம்.சி, சொ.வேலு.எம்.சி, டாக்டர்.ஜி.சாந்தகுமாரி.எம்.சி, பகுதி கழக செயலாளர்கள்: ஐ.சி.எப்.வ.முரளிதரன், எ.நாகராசன்.எம்.சி, டி.எஸ்.பி.இராஜகோபால் எம்.சி., எம்.டி.ஆர்.நாகராஜ், செ.தமிழ்வேந்தன், எம்.சாமிக்கண்ணு, வி.சுதாகர். மாமன்ற உறுப்பினர்கள்: ராஜேஷ் ஜெயின்.எம்.சி, எல்.நவீன்.எம்.சி, வெ. பரிமளம்.எம்.சி. ஆகியோர் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

59வது வட்டகழக செயலாளர் சேப்பாக்கம் வே.பா.பிரபாகரன் நன்றி கூறுகிறார்.

### காலிப்பணியிடங்கள் நிரப்புதல் - வாரிசுதாரர்கள் பணி நியமனம்!

# விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்!

சென்னை, அக்.13-

முதலமைச்சர் அவர்களின் உத்திரவின்படி, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களின் பேருந்து சேவைகளை மேம்படுத்திட ஏதுவாக காலிப்பணியிடங்களை நிரப்புதல், கருணை அடிப்படையிலான வாரிசுதாரர்களை பணி நியமனம் செய்தல், ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கான பணப்பலன்களை வழங்குதல் மற்றும் மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை அமல்படுத்துதல் தொடர்பாக நடவடிக்கைகள் எடுத்திட வேண்டும்-என போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.



போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தலைமையில், 10.10.2023 அன்று, தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் செயல்பாடுகள் குறித்து, போக்குவரத்துத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் க.பணீந்திர ரெட்டி, போக்குவரத்துத் துறை சிறப்புச் செயலாளர் தி.ந.வெங்கடேஷ், அனைத்துப் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர்கள், பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக்குழு (PTCS) மேலாண் இயக்குநர், சாலை போக்குவரத்து நிறுவன இயக்குநர் மற்றும் போக்குவரத்துத்துறை தலைவர் அலுவலக உயர் அலுவலர்களுடன் ஆலோசனை நடத்தினார்.

இவ்வாலோசனைக் கூட்டத்தில், போக்குவரத்துத் துறை அமைச்சர், பொதுமக்களுக்கு பேருந்து சேவையினை நிறைவாக அளிப்பதில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் பெரும்பங்காற்றி வருகின்றன. குறிப்பாக, இந்தியாவிலேயே தமிழ்நாடு தான் குறைந்த பயண கட்டணத்தில் பேருந்து சேவையினை வழங்கி வருகிறது. கொரோனா பெருந்தொற்று தாக்கத்தினால் ஏற்பட்ட நிதி நெருக்கடி தொடர்ந்த போதிலும், போக்குவரத்து சேவையினை சிறப்பாக செய்தும், பயண கட்டணத்தை உயர்த்தாமலும் சிறந்த முறையில் செயலாற்றி வருகிறது. முதலமைச்சர் அவர்களின் உத்திரவின்படி, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களின் பேருந்து சேவைகளை மேம்படுத்திட ஏதுவாக, 1,619 காலிப் பணியிடங்களை நிரப்பிட நடவடிக்கை எடுக்கப்பட்டு, முதல் கட்டமாக அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தில் உள்ள 685 ஓட்டுனருடன் நடத்துநர் காலிப்பணியிடங்களை நிரப்ப எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்து விரைவுபடுத்த அமைச்சர் சா.சி.சிவசங்கர் அறிவுறுத்தினார்.

# நாமக்கல் மேற்கு மாவட்டத்தில் இளைஞர் அணி நேர்காணல்!

### மதுரா செந்தில் - பி.எஸ்.சீனிவாசன் - சி.ஆனந்தகுமார் -எஸ்.ஜோயல்-நிர்வாகிகள் பங்கேற்பு!

நாமக்கல் அக் 13-

நாமக்கல் மேற்கு மாவட்டத்தின் ஒன்றிய, நகர, பேரூர் இளைஞர் அணி பொறுப்புகளுக்கான நேர்காணலில் 500க்கும் மேற்பட்ட இளைஞர்கள் கலந்து கொண்டனர்.

நாமக்கல் மேற்கு மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர் இளைஞர் பொறுப்புகளுக்கான நேர்காணல் நிகழ்ச்சி திருச்செங்கோடு கொங்கு சமுதாய கூடத்தில் நடைபெற்றது.

கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞர் அணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, கழக இளைஞர் அணி துணை செயலாளர்கள் பி.எஸ்.சீனிவாசன், சி.ஆனந்தகுமார், எஸ்.ஜேயால், இன்பா ஏ. என்.ரகு நா.இளையராஜா, ப.அப்துல் மாலிக், கே.இ.பிரகாஷ், க.பிரபு, பிரதீப்ராஜா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நேர்காணல் நிகழ்ச்சியில் நாமக்கல் மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் எஸ்.எம். மதுரா செந்தில் தலைமையில் நடைபெற்றது.

திருச்செங்கோடு, குமாரபாளையம், பரமத்தி வேலூர் உள்ளிட்ட 3 தொகுதிகள் அடங்கிய 8 பேரூராட்சிகளுக்கு நபர்களும் , 10 ஒன்றியங்களுக்கு , 4 நகரங்களுக்கு நேரகாணலானது நடைபெறுகிறது.

இந்த நேர்காணலில் மொத்தம் 330 பேர் பங்கு பெற்றுள்ளனர். கலந்து கொண்ட இளைஞர்களிடம் கழக மாநில இளைஞர் அணி துணை செயலாளர்கள 3 குழுக்களாக பிரிந்து 3 தொகுதிகளுக்கு இந்த நேர்காணலை நடத்தினர்.

மேலும் இது குறித்து அவர்கள் கூறும் போது நேர்காணலில் கலந்து கொண்டவர்களிடம் கட்சிப் பணிகள் குறித்தும் கல்வித் தகுதி குறித்தும் கேட்டுள்ளோம் தகுதி அடிப்படையில் ஒன்றிய, நகர, பேரூர் இளைஞர் அணி பொறுப்புகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு தலைமைக் கழகத்தால் அறிவிக்கப்படும் என தெரிவித்தனர்.

நாமக்கல் மேற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆர். பாலாஜி, துணை அமைப்பாளர்கள் பூக்கடை டீ சுந்தர், ப.நவலடி ராஜா, ஜி.ஜெகதீஷ்குமார், எஸ். கதிரவன் சி.கார்த்திகேயன், க.முரளி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இந்த நேர்காணல் நிகழ்ச்சிகளை நாமக்கல் மேற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆர். பாலாஜி, துணை அமைப்பாளர்கள் பூக்கடை டீ சுந்தர், ப.நவலடி ராஜா, ஜி.ஜெகதீஷ்குமார், எஸ்.கதிரவன் சி.கார்த்திகேயன், க.முரளி ஆகியோர் சிறப்பான ஏற்பாடுகளை செய்திருந்தனர்.



பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் மேற்கு ஒன்றிய கழக செயலாளரும் மாவட்ட கவுன்சிலருமான சோமு.மதியழகன்(63), உடல்நலக்குறைவால் மறைவெய்தினார். பாடாலூர் கிராமத்தில் வைக்கப்பட்டிருந்த அவரது உடலுக்கு, போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அஞ்சலி செலுத்தினார். உடன் மாவட்ட கழகச் செயலாளர் குன்னம் சி.இராஜேந்திரன், சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன் உள்ளனர் . கழக நிர்வாகிகள் ஆயிரக்கணக்கானோர் அஞ்சலி செலுத்தினார்கள்.

### ஒப்பந்த செவிலியர்களுக்கு

# பணி நியமன ஆணைகள் - முதல்வர் வழங்குகிறார்!

## பேரவையில் கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!

**சென்னை, அக். 13–**

**முதலமைச்சர் அவர்கள், மிக விரைவில் ஒப்பந்த செவிலியர்களாக பணிபுரியும் 499 பேருக்கு நிரந்தர செவிலியர்களாகவும், புதிதாக 300 தொகுப்பூதிய செவிலியர்களுக்கும் பணி நியமன ஆணை வழங்க உள்ளார்கள் என அமைச்சர் மா.சுப்பிரமணியன் சட்டப்பேரவையில் நேற்று சிறப்பு கவன ஈர்ப்பு தீர்மானத்தின் மீது அளித்த பதில் வருமாறு :**



தமிழ்நாடு MRB செவிலியர்கள் மேம்பாட்டு சங்கம் நேற்று காலை பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை, மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் அலுவலகம் அமைந்துள்ள வளாகத்திற்குள் 300க்கும் மேற்பட்டோர் அத்துமீறி நுழைந்து போராட்டம் நடத்தினார்கள். போராட்டம் நடத்துவதற்கு அனைவருக்கும் ஜனநாயக ரீதியாக உரிமை உண்டு என்றாலும், சென்னையில் போராட்டம் நடத்துவதற்கு என்று காவல் துறையினரால் அனுமதிக்கப்பட்ட இடங்கள் வள்ளுவர் கோட்டம், சேப்பாக்கம் மற்றம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் உள்ளது. இங்கே போராட வேண்டும் என்று யார் அனுமதி கேட்டாலும், உடனடியாக அனுமதி வழங்கப்படுகிறது.

இந்த நிலையில் மருத்துவத் துறை இயக்குநரகம் உள்ள வளாகத்தில் பேராட்டம் நடத்த வேண்டும் என்று நேற்று கூடியுள்ளனர். இதனால் அந்த அலுவலகத்தின் பணி பாதிக்கப்படுவதால், செவிலியர்களை அருகில் உள்ள திருமண மண்டபத்திற்கு அழைத்து சென்று அமர வைக்கப்பட்டனர். இதனை கேள்விப்பட்டவுடன் உடனடியாக நான் முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலைப்பெற்று, துறையின் செயலாளரிடம் இந்த பிரச்சனை தொடர்பாக செவிலியர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி உரிய தீர்வு கண்டு அவர்களுக்கு உரிய பதில்களை வழங்குமாறு அறிவுறுத்தினேன்.

உடனடியாக துறையின் செயலாளர் அவர்கள் போராட்டம் நடத்தியவர்களில் முக்கியமானவர்களை அழைத்து 2 மணி நேரம் பேச்சுவார்த்தை நடத்திய பிறகு, பேராட்டத்தை நடத்தியவர்கள் போராட்டத்தை வாபஸ் பெற்றுக்கொண்டதாக செய்தியை தெரிவித்துவிட்டு, அவர்களின் சொந்த ஊர்களுக்கு சென்றுவிட்டனர். ஆனால் இங்கு பேசிய தலைவர்கள் இன்னுமும் போராட்டம் நடைபெறுவது போன்ற பிரம்மையை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

02.07.2003 அரசு ஊழியர்களின் வரலாற்றில் ஒரு கருப்பு நாள், அந்த நாளை யாரும் மறக்கவே முடியாது, Essential Services Maintanence Act (ESMA) மற்றும் Tamilnadu Essential Services Maintanence Act (TESMA) ஆகிய இரண்டு சட்டங்கள் கொண்டு வரப்பட்டு அன்றைக்கு பேராட்டம் நடத்திய ஒன்றே கால் லட்சம் அரசு ஊழியர்கள் வீட்டிற்கு அனுப்பப்பட்டனர். 12,000 அரசு ஊழியர்களை அவர்களின் வீடுகளுக்கே சென்று காவல் துறையினர் சமூக விரோதியினரை பிடிப்பது போன்று கைது செய்து சிறையில் அடைத்தார்கள். அதன்பிறகு கைது செய்யப்பட்ட 12,000 பேருக்கு பதிலாக, புதியதாக 12,000 பேர் ரூ.4000 என்ற ஊதியத்தில் பணியமர்த்தப்பட்டனர்.

தற்போது ஒப்பந்த செவிலியர்கள் மீது அக்கறை காட்டும், இதற்கு முன்பு தமிழ்நாட்டை ஆட்சி செய்தவர்கள் அந்த நிலையை எண்ணி பார்க்க வேண்டும். 12,000 பேருடைய வாழ்கை இருண்டு போனது, ஒன்றே கால் லட்சம் பேருடைய வாழ்கை கேள்விக்குறியானது. கடந்த காலங்களில் மக்கள் நல்வாழ்வுத் துறையில் போராட்டங்களை நடத்திய மருத்துவர்கள், செவிலியர்கள் கிடைத்த பரிசு என்னவென்றால் உடனடியாக பணியிட மாற்றும், பணிநீக்கம், மாவட்டம் விட்டு மாவட்டம் அவர்களை பந்தாடுவது, இதைவிட கூடுதல் கொடுமை பணியில் இருந்த மரு.லட்சுமி நரசிம்மன் என்ற மருத்துவர் பேராட்ட காலத்திலேயே இறந்தும் போனார். இப்படி தான் கடந்த ஆட்சி காலத்தில் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களின் நிலை இருந்தது. ஆனால் நமது முதலமைச்சர் அவர்கள் ஒருவர் கூட இந்த துறையில் பாதிக்கப்படகூடாது என்று தொடர்ந்து அறிவுறுத்திக்கொண்டிருக்கிறார். அந்த வகையில் நேற்று காலை நடைபெறத் தொடங்கிய போராட்டம் குறித்து, எங்களிடம் தகவல் சொல்லப்பட்ட பிறகு அன்று மாலையே போராட்டம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

15 நாட்களுக்கு முன்னாள் மற்றொரு செவிலியர்கள் சங்கத்தினர் வள்ளுவர் கோட்டத்தில் உண்ணாவிரதம் இருந்த நிலையில், முதலமைச்சர் அவர்கள் உடனடியாக அந்த உண்ணாவிரதத்தை முடிவுக்கு கொண்டு வரச்சொன்னார்கள். உடனடியாக அந்த செவிலியர்களை அழைத்து 2 மணி நேரம் பேச்சுவார்த்தை நடத்தி, அவர்களின் கோரிக்கைகளில் ஒரு சில வற்றை முதலமைச்சர் அவர்களின் ஒப்புதலை பெற்று ஏற்றுக்கொண்டதை தொடர்ந்து மிகுந்த மகிழ்ச்சியோடு விடை பெற்றுச் சென்றார்கள். நேற்றைக்கு அதுபோலத் தான் துறையின் செயலாளர் அவர்கள் அழைத்து பேசியதற்கு பிறகு மகிழ்ச்சியோடு சென்றிருக்கிறார்கள். இன்று மாலை 4 மணிக்கு குரோம்பேட்டையில் தங்கியுள்ள பேராட்டம் நடத்தியவர்களில் ஒருசிலரை நான் சந்திக்கவுள்ளேன். இந்தநிலையில் தான் இந்த போராட்டம் இருந்து வருகிறது.

மருத்துவத் துறையைப் பொறுத்தவரை மருத்துவக் கல்வி இயக்குநரகம், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள், ESI, இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி, குடும்பநலத் துறை, போன்ற துறைகளில் ஏறத்தாழ 47,938 செவிலியர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இந்த 47,938 செவிலியர்களில் 12,787 பேர் ஒப்பந்த செவிலியர்கள். இந்த ஒப்பந்த செவிலியர்கள் எப்போது பணிக் காலத்தில் இருந்தார்கள் என்றால் 2015, 2016, 2017 முதல் 2020-க்குள்ளான பணிக்காலத்தில் வந்தவர்கள். இவர்களை கூட நமது முதலமைச்சர் அவர்கள் ஒருவருக்கு கூட பணி பாதிப்பு இருக்கக்கூடாது என்பதற்காக ஒப்பந்த காலம் முடிவடைந்தவுடன் அவர்களுக்கு மீண்டும் District Health Society மூலம் அவர்கள் ஏற்கெனவே வாங்கிக் கொண்டிருந்த சம்பளம் ரூ.14,000/- தேசிய நலவாழ்வு குழுமத்தின் மூலமாக அவர்களுக்கான சம்பளத்தினை ரூ.18,000/- ஆக உயர்த்தி அவர்களுடைய சொந்த மாவட்டங்களில் பணியமர்த்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இன்று பலரும் பணியில் இருந்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தநிலையில் முதலமைச்சர் அவர்கள் காலியாக உள்ள 499 நிரந்தர செவிலியர்கள் பணியிடம் காலிப்பணியிடங்களை அவர்களை வைத்தே நிரப்பிட வேண்டும் என்று அறிவுறுத்தியதற்கிணங்க வருகின்ற 13.10.2023 அன்று கலந்தாய்வு மூலம் இனச்சுழற்சி மற்றும் பணிமூப்பு அடிப்படையில் சான்றிதழ் சரிபாக்கப்பட்டு தற்போது MRB ஒப்பந்த செவிலியர்களை காலமுறை ஊதியத்தில் பணியாற்றிட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. நாளை மறுநாள் இந்தப்பணி முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, ஏறத்தாழ 499 பேருக்கு வாழ்வு கிடைக்க விருக்கிறது. அதுமட்டுமல்லாமல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கலைஞர் பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனையில் 300 செவிலியர் பணியிடங்களை புதியதாக தோற்றுவித்து அதிலும் தொகுப்பூதிய செவிலியர் காலிப்பணியிடங்களை தற்காலிக செவிலியர்களை கொண்டு நிரப்பிட வேண்டும் என்று அறிவுறுத்தியிருக்கிறார்கள்.

எனவே இந்த 499 பணியிடங்களுக்கு பிறகு இந்த 300 பணியிடங்களும் நிரப்புவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அவ்வப்போது MRB மூலம் தேர்ந்தெடுக்கப்படும் செவிலியர்களை நிரந்தர காலமுறை ஊதியத்தில் பணிவரன்முறை செய்யப்படும்போது ஏற்படுகின்ற தொகுப்பூதிய செவிலியர் காலிப்பணியிடங்களை இனசுழற்சி முறையில் பணிநியமனம் செய்யப்பட வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தி யிருக்கிறார்கள். அந்த வகையில் அதற்கான பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

நேற்று நடைபெற்ற ஒப்பந்த செவிலியர்களின் போராட்டத்தில் அவர்கள் வைத்த முக்கிய கோரிக்கைகள் 11 என்று சொல்லியிருந்தாலும் அதில் 3 மிக முக்கியமானது என்று சொல்லியிருக்கிறார்கள். இதில் அதிகமான செவிலியர் பணியிடங்களை நிரப்பிட வேண்டும் என்றும், நிரந்தர செவிலியர்களுக்கு தரப்படுகின்ற விடுப்பு அதாவது மகப்பேறு விடுப்பு மற்றும் அதற்கான பணப்பயன்களும் தங்களுக்கும் தர வேண்டும் என்றும், ஒப்பந்த பணியிலிருந்து நிரந்தர பணியிடத்திற்கு மாற்ற வேண்டும் என்ற இந்த 3 கோரிக்கைகள் வைத்திருந்தார்கள். நமது முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு இந்த 3 கோரிக்கைகளும் கொண்டு சென்ற போது அவர்கள் செவிலியர்கள் போராட்டத்தை வாபஸ் பெற்றுக் கொண்டாலும் பரவாயில்லை, கருணை உள்ளத்தோடு அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றி தந்திட நாம் கூடுதலாக கவனத்தில் கொள்ள வேண்டும் என்று சொல்லி இன்று துறைக்குள் கூடுதல் செவிலியர் பணியிடங்களை உருவாக்குவதற்கும், அவ்வபோது எழுகின்ற நிரந்தர காலிப்பணியிடங்களை உருவாக்குவதற்கும், ஒப்பந்த செவிலியர் பணியிடங்களை நியமிப்பதற்கும் நிதித்துறையுடன் கலந்து பேசி அவர்களுக்கு மகப்பேறு விடுப்பு மற்றும் பணப்பயன்களை பெற்று தருவதற்கும் தேசிய நல வாழ்வு குழும வழிகாட்டுதலின்படி அரசிடம் கலந்தாலோசித்து ஊதிய உயர்வு குறித்து பேசுவதற்கும் இன்று முடிவெடுக்கப்பட்டுள்ளது. அதற்கான அறிவிப்புகளை அவர்களிடத்திலேயே சொல்லியிருக்கிறோம். தேசிய நல வாழ்வு குழுமத்தின் சார்பில் இந்த தொகை வழங்கப்படுகிறது.

பாரதிய ஜனதா கட்சியின் சார்பில் உறுப்பினர் வானதி சீனிவாசன் சொன்னதைப்போல் இந்த 18,000 என்பது ஒப்பந்த ஊழியர்களுக்கு வழங்கப்படும் ஊதியம் என்பது இந்தியா முழுமைக்கும் ஒரே மாதிரியாக வரையறுக்கப்பட்ட ஊதியம் ரூ.18,000. குறிப்பாக தமிழ்நாட்டில் மட்டும் இந்த தொகை ஊதியமாக வழங்கப்படுகிறது. பல்வேறு மாநிலங்களில் ஊதியம் ரூ.14,000/- ஆகவும் ரூ.13,000/- இருந்துக் கொண்டிருக்கிறது. என்றாலும்கூட முதலமைச்சர் அவர்கள் இந்த ரூ.18,000/- ஊதியத்துடன் சேர்த்து ஒவ்வொரு ஆண்டும் 5 % ஊதிய உயர்வு வழங்கப்பட வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். நிச்சயம் வருங்காலத்தில் அவர்களுடைய கோரிக்கை நிறைவேற்றப்படும்.

அதாவது ஒவ்வொரு செவிலியர்களுக்கும் பணி பாதிப்பு இல்லை என்கின்ற நிலை உருவாக்கப்படும். யார் எப்போது போராட்டம் நடத்தினாலும் போராட்டம் நடத்தப்படுகின்ற இடத்திற்கு நேரிடையாக சென்று அவர்களுடைய போராட்டத்திற்கான காரணங்களை கேட்டு, அந்த போராட்டத்தினை கனிவோடு பரிசீலிக்கின்ற அரசு இந்த அரசு, கனிவோடு பரிசீலிக்கும் முதலமைச்சர் அவர்கள், தாயுள்ளத்தோடு அவர்களுக்கு நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்ற நடவடிக்கைகள் எடுப்பார் என்று அமைச்சர் மா.சுப்பிரமணியன் சட்டப்பேரவையில் தெரிவித்தார்.

## முதல்வர் உத்தரவுப்படி

# 1281 தரைப்பாலங்கள் உயர் மட்டப் பாலங்களாக மாற்றப்படுகின்றன!

## சட்டப்பேரவையில் அமைச்சர் எ.வ.வேலு தகவல்!

**சென்னை, அக். 13 – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவுப்படி 1281 தரைப் பாலங்கள் உயர் மட்ட மேம்பாலங்களாக மாற்றப் படுகின்றன என்று சட்டப் பேரவையில் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு உறுப்பினர் ஜி.கே.மணி எழுப்பிய கேள்விக்குப் பெருமிதத் துடன் குறிப்பிட்டுள்ளார்.**

இது குறித்த விவாதம் வருமாறு:-

**ஜி.கே.மணி:** காவிரி ஆற்றின் குறுக்கே பாலம் கட்டுவது குறித்து, உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின்கீழ் ஒரு கோரிக்கை வைத்தேன். அதை ஏற்றுக்கொண்ட முதலமைச்சர் அவர்கள் ரூபாய் 250 கோடி மதிப் பீட்டில் பாலம் கட்டப்படும் என்ற ஒரு மகத்தான அறிவிப்பை வெளியிட்டார்கள். அதற்காக பொது மக்களின் சார்பில் நான் அப்பொழுதே நன்றியைத் தெரிவித்துக்கொண்டேன். இந்தப் பாலம் என்பது தருமபுரி, கிருஷ்ணகிரி, சேலம், ஈரோடு, கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களை இணைப்பது என்பது உண்மை. அதே நேரத்தில் கொச்சின் துறை முகத்திலிருந்து பாலக்காடு, கோயம்புத்தூர் மாவட்டம், ஈரோடு மாவட்டம், கொளத்தூர் வழியாக ஆற்றைக் கடந்து பெண்ணாகரம், பாலக்கோடு, ஓசூர், பெங்களூர், மும்பை வரையிலே இணைக்கக்கூடிய தேசிய நெடுஞ்சாலைகளோடு இணைத்துவிட்டால், அது போக்குவரத்திற்கு மிக எளிதாக இருப்பதோடு, போக்குவரத்து நேரமும் குறையும், எரிபொருளும் சிக்கனமாகும் மற்றும் தொழில் வளர்ச்சிக்கு ஏதுவாகவும் இருக்கும் என்பதன் அடிப்படையிலேதான் இது ஒரு நல்லத் திட்டம்.



இதை அரசு நிறைவேற்ற வேண்டும் என்ற வேண்டுகோளை கேள்வியோடு வைக்கிற அதேநேரத்தில், முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிற இந்தத் திட்டத்தை நல்ல மனம் படைத்த, எதையும் எப்படியும் செய்யும் ஆற்றல் மிக்க அமைச்சர் அவர்கள் இதை விரைந்து செய்து முடிப்பார்களா?

**அமைச்சர் எ.வ. வேலு:** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் தளபதியார் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடனேயே உயர்மட்டப் பாலம் கட்டுவதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டுமென்று கூறினார்கள். தரைப் பாலங்களைப் பொறுத்தவரையில், வெள்ளப்பெருக்கு ஏற்படுகின்ற காலங்களில், அதன் வழியாக மக்கள் ஓர் ஊரிலிருந்து மற்றோர் ஊருக்குச் செல்லவே முடியாத நிலை ஒருகாலத்தில் இருந்தது. முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடனே, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், 1,281 தரைப் பாலங்களை உயர் மட்டப் பாலங்களாக தரமுயர்த்த வேண்டும் என்று ஆணை பிறப்பித்தார்கள். அந்த அடிப்படையில், 2021- 2022 ஆம் ஆண்டில் 693 பாலங்கள், 2022-2023 ஆம் ஆண்டில் 66 பாலங்கள், 2023-2024 ஆம் ஆண்டில் 277 பாலங்கள் என இந்த 3 நிதியாண்டுகளில் ஏறத்தாழ 1,036 பாலங்களைக் கட்ட இந்த அரசின் சார்பாக முடிவு செய்யப்பட்டது.

நிதி நிலைமை எப்படியிருக்கிறது என்பது பற்றி சட்டமன்ற உறுப்பினர்கள் அத்தனை பேருக்கும் தெரியும். இருந்தாலும், பாலம் கட்ட வேண்டும் என்ற முதலமைச்சர் அவர்களுடைய ஆணையை ஏற்று, துறையின் சார்பாக அதற்கான திட்ட மதிப்பீடுகளெல்லாம் தயாரிக்கப்பட்டு, டெண்டர் விடப்பட்டு, 667 பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சியிருக்கிற 409 பாலங்களைக் கட்டும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இந்நிலையில், அடுத்த ஆண்டு 248 பாலங்கள் கட்டுவதற்கு திட்ட மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு வருகின்றன.

இந்த அடிப்படையில்தான், முதலமைச்சர் அவர்கள் தர்மபுரிக்கு சென்றபோது, சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, உறுப்பினர் அவர்கள் கூறிய அந்தப் பாலம் கட்டப்படும் என்று அறிவித்தார்கள்.

அந்தப் பாலம் சேலம் மாவட்டத்தையும் தர்மபுரி மாவட்டத்தை யும் இணைக்கிற ஒரு பாலம் ஆகும்; அது தேவையானதும்கூட. சேலம் மாவட்டம் கோட்டையூரையும், தர்மபுரி மாவட்டத்திலுள்ள ஒட்டனூரையும் இணைக்கின்ற பாலம் ஆகும். ஒட்டனூர் என்ற ஊர் உறுப்பினர் அவர்களுக்குத் தெரிந்த ஊர். அதற்குப் பக்கத்தில்தான் அவருடைய சொந்த ஊர் இருக்கிறது. உறுப்பினர் அவர்கள், அந்த இரண்டு ஊரையும் இணைக்கின்ற வகையில் பாலம் அமைக்க வேண்டும் என்று முதலமைச்சர் அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அந்தப் பாலம் கட்டப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். முதலமைச்சர் அவர்கள் அறிவித்தவுடனேயே, துறையின் சார்பாக அதற்கான ஏற்பாடுகளை செய்யலாம் என்று முடிவு செய்யப்பட்டு, விரிவான திட்ட அறிக்கை தயார் செய்வதற்காக டெண்டர் விடப்பட்டு, 2 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அந்தப் பாலம் முழுக்க முழுக்க ஆற்றைக் கடந்து செல்கின்ற பாலம் ஆகும். எனவே, நீர்வளத் துறையிடமிருந்தும், வனத் துறையிடமிருந்தும் NOC தடையில்லா சான்று பெற வேண்டும். மேற்படி துறைகளிடமிருந்து NOC பெற வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டு, அத்துறைகளுக்கு உரிய கருத்துருக்கள் அனுப்பப்பட்டுள்ளன. அவையும் வரவிருக்கின்றன. திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டவுடனேயே, முதலமைச்சர் அவர்கள் அறிவித்த பாலம் என்கிற அடிப்படையில், அதற்கு முன்னுரிமை அளித்து, அவரிடத்தில் அனுமதி பெற்று, வரவிருக்கும் நிதியாண்டில் அப்பாலத்தை கட்டுவதற்கு துறையின் சார்பாக முயற்சி எடுக்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு பதிலளித்தார்.

# 9 ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் இடமாற்றம்!

## கரூர், தூத்துக்குடி, திருவள்ளூருக்கு புது மாவட்ட ஆட்சியர்!

சென்னை, அக்.13-

தமிழ்நாட்டில் 3 மாவட்ட ஆட்சியர்கள் உள்பட 9 ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

தமிழ்நாட்டில் 9 ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் பணியிட மாற்றம் செய்து தமிழ்நாடு அரசு அறிவிப்பு வெளியிட்டுள்ளது. தூத்துக்குடி, கரூர், திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களின் புதிய ஆட்சியர்களை நியமித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

தூத்துக்குடி ஆட்சியர் செந்தில் ராஜ் சிப்காட் நிர்வாக இயக்குநராக மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

திருவள்ளூர் ஆட்சியர் ஆல்பி ஜான் வர்கீஸ், சென்னை மாநகர போக்குவரத்துக்கழக நிர்வாக இயக்குநராக மாற்றம்.

கரூர் ஆட்சியர் பிரபுசங்கர், திருவள்ளூர் மாவட்ட ஆட்சியராக மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

செங்கல்பட்டு துணை ஆட்சியர் லட்சுமிபதி, தூத்துக்குடி ஆட்சியராக நியமிக்கப்பட்டுள்ளார். நகர்ப்புற வளர்ச்சி மேலாண்மை வாரிய இணை நிர்வாக இயக்குநர் தங்கவேல், கரூர் ஆட்சியராக நியமிக்கப்பட்டுள்ளார்.

சிப்காட் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் சுந்தரவள்ளி வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறையின் ஆணையராக நியமிக்கப்பட்டுள்ளார்.

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறையின் ஆணையராக இருந்த வீரராகவா, தொழிற்கல்வி துறையின் ஆணையராக நியமிக்கப்பட்டுள்ளார். திருப்பூர் மாவட்ட துணை ஆட்சியர் ஸ்ருதஞ்சய் நாராயணன், விழுப் புரம் மாவட்ட கிராமப்புற மேம்பாட்டு ஏஜென்சியின் திட்ட அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

வேலூர்மாநகராட்சிஆணையர் ரத்தினசாமி, ராம்நாதபுரம் மாவட்ட கிராமபுற மேம்பாட்டு ஏஜென்சி யின் திட்ட அதிகாரியாக நியமிக்கப்பட் டுள்ளார்.

இவ்வாறு தமிழக அரசு தெரிவித்துள்ளது.



தருமபுரி மேற்கு மாவட்ட கழக இளைஞர் அணி சார்பில் பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதியில் இல்லந்தோறும் தி.மு.க. இளைஞர் அணி உறுப்பினர் சேர்க்கை மற்றும் தி.மு.க. இளைஞர் அணி 2வது மாநில மாநாட்டில் கலந்துகொள்ளும் இளைஞர்கள் விவரம் பதிவு நிகழ்ச்சி பாப்பிரெட்டிப்பட்டி கிழக்கு ஒன்றியம் மோளையானூரில் தருமபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் தலைமையில் நடைபெற்றது. உடன் பாப்பிரெட்டிப்பட்டி கிழக்கு ஒன்றிய செயலாளர் சி.முத்துக்குமார், தலைமைச்செயற்குழு உறுப்பினர் இரா.சித்தார்த்தன், மேற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சிவகுரு மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.



சேலம் கிழக்கு மாவட்டம் அயோத்தியாபட்டணம் ஒன்றியம் வீராணம் ஊராட்சியில் மாவட்ட சுற்றுச் சூழல் அணி சார்பில் பனை விதை நடும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளராக கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ். ஆர்.சிவலிங்கம் கலந்து கொண்டு விவசாயிகளுக்கும், பொது மக்களுக்கும் இலவசமாக பனங்கன்றுகளையும், அதன் விதைகளையும் வழங்கினார். மொத்தம் 1 லட்சத்து 11 ஆயிரத்து 1 பனங்கன்று விதைகள் வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில், அயோத்தியாபட்டணம் தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் ஏ.விஜயகுமார், ஒன்றிய குழு தலைவர் ஹேமலதா, மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ.ஆறுமுகம், மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் முனைவர். வரத.ராஜசேகர், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## கல்லூரிகளின் கட்டமைப்பை மேம்படுத்த

# ரூ.1000 கோடி ஒதுக்கீடு செய்துள்ளார் முதல்வர்!

## பேரவையில் அமைச்சர் - முனைவர் க.பொன்முடி தகவல்!

சென்னை, அக். 13 -

சட்டப்பேரவையில் உறுப்பினர் எம்.ஆர்.காந்தி எழுப்பிய கேள்விக்கு, உயர் கல்வித் துறை அமைச்சர் க.பொன்முடி பதிலளிக்கையில், கல்லூரிகளின் கட்டமைப்பை மேம்படுத்த முதல்வர் அவர்கள் ஆயிரம் கோடி ஒதுக்கீடு செய்துள்ளார் என்று குறிப்பிட்டார்.



சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின்போது, உறுப்பினர் எம்.ஆர். காந்தி, நாகர்கோவில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் மாணவர் தங்கும் விடுதி கட்டப்படுமா? என்ற கேள்விக்கு அமைச்சர் முனைவர் க.பொன்முடி அளித்த பதில் வருமாறு :-

உறுப்பினர் கோரும் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பயிலும் மாணவ மாணவியர்கள் விடுதி வசதியானது, மாணவர்களின் தேவைக்கேற்ப அக்கல்லூரிக்கு அருகில் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் ஆதிதிராவிடர் நலத் துறை சார்ந்த விடுதிகள் உள்ளன. ஆகவே, அந்த விடுதிகளிலே மாணவர்கள் தங்கிப் படிக்கலாம். அதுமட்டுமின்றி, அங்கே பள்ளி மாணவர்களுக்கான பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் விடுதியும் உள்ளது. அந்த விடுதியிலும், அரசுக் கல்லூரி மாணவர்களைச் சேர்ப்பதற்கான நடவடிக்கைகளை பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்களும் மேற்கொண்டு வருகிறார்கள். ஆகவே, அந்த விடுதியை, இந்த அரசுக் கலைக் கல்லூரியின் விடுதியாகச் சேர்ப்பதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உறுப்பினர் அவர்கள் விடுதியைப் பற்றிக் கேட்டார். அந்தக் கல்லூரியைப் பொறுத்தவரையில், அவர் குறிப்பிட்டதைப்போல, 1,794 மாணவர்கள் அங்கே படிக்கிறார்கள். அதில் 1549 மாணவர்கள் உள்ளூர் மற்றும் வெளியூர்களிலிருந்து.

ஆகவே, அங்கே விடுதியிலே தங்கியிருப்பவர்கள் 245 பேர் மட்டும்தான். அதுகூட, நான் ஏற்கெனவே சொன்னதைப்போன்று, BC students hostels, SC students hostels எல்லாம் இருக்கின்றன. அங்கேயும் மாணவர்கள் இன்னும் சேருவதற்கு தேவை இருக்குமானால் பள்ளி மாணவர்கள் சேருகிற அந்த விடுதியும் BC, MBC & Minorities Welfare Department ன் மூலமாக இயங்குகின்ற விடுதியும் மாற்றப்படும். நீங்கள் மேலும் அங்கே கட்டட வசதிகள், கல்லூரி வசதிகள், படிப்பை உயர்த்துவது பற்றியெல்லாம் கேள்வி கேட்டிருக்கிறீர்கள்.

இவ்வரசு பொறுப்பேற்றவுடன் தமிழக முதலமைச்சர் அவர்கள் கல்லூரிகளினுடைய உட்கட்டமைப்புகளை மேம்படுத்த, அடுத்து வரும் ஐந்தாண்டுகளில் ரூ.1,000/ கோடி செலவில் பெருந்தலைவர் காமராஜர் பெயரில் ஒரு சிறப்புத் திட்டம் வகுக்கப்பட்டு, அறிவித்திருப்பதை நீங்கள் அறிவீர்கள். ஆகவே, உயர் கல்வியினுடைய வளர்ச்சிக்காக முதலமைச்சர் அவர்கள் எடுத்திருக்கிற பல்வேறு நட வடிக்கைகளிலே பெருந்தலைவர் காமராஜர் பெயரிலே அமைந்திருக்கிற திட்டமும் ஒன்றாகும்.

தற்போது 26 பாலிடெக்னிக் கல்லூரிகள் மற்றும் 55 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்குத் தேவையான ஆய்வகங்கள், வகுப்பறைகள், விடுதிகள், கழிப்பறைகள் மற்றும் இதர வசதிகள் உள்ளிட்ட உட்கட்டமைப்புகளை மேற்கொள்ள 2022- 2023 ஆம் நிதியாண்டில் ரூ.262 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. மொத்தம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒதுக்கியிருக்கிற தொகை ரூபாய் ஆயிரம் கோடி; அதிலே ரூ.262 கோடி இந்த ஆண்டு ஒதுக்கப்பட்டிருக்கிறது. படிப்படியாக அந்தந்த கல்லூரிகளினுடைய தேவைகளுக்கேற்ப, அங்கே பயில்கின்ற எல்லா மாணவர்களுடைய கோரிக்கைகளுக்கேற்ப, இன்னும் கேட்டீர்களென்றால், அங்கே உள்ள கல்லூரிகளில் இடவசதிகூட இல்லாமல் இருக்கிறது. அதையும் நாங்கள் கோரியிருக்கிறோம். ஆகவே, அவையெல்லாம், வருங்காலங்களிலே முறையாக, படிப்படியாக, நிதி நிலைமைக்கேற்ப சரி செய்யப்படும்.

இவ்வாறு அமைச்சர் முனைவர் க.பொன்முடி பதிலளித்தார்.

## திருவாரூர் கமலாலய குளத்தில்

# படகு சவாரி - மிதவை பூங்கா அமைத்திட வேண்டும்!

## சட்டப்பேரவையில் பூண்டி கே.கலைவாணன் வலியுறுத்தல்!

சென்னை, அக்.13-

சட்டப்பேரவையில் கழக உறுப்பினர் பூண்டி கே.கலைவாணன், திருவாரூர் கமலாலயக் குளத்தில் படகு சவாரி - மிதவை பூங்கா அமைக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

இதுகுறித்து பேரவையில் நடைபெற்ற விவாதம் வருமாறு :



**பூண்டி கே.கலைவாணன்:** மண்ணின் மைந்தர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தனது இளம் பிராயத்திலே துணிச்சலோடு நீந்திக் கடந்த கமலாலயத்தைஇன்றைய முதல்வர் அவர்கள் கமலாலயத்தைக் கடந்து செல்லும்போதெல்லாம், ஆள் அரவமற்ற அந்த நிலையைப் பார்த்து செல்லும் அந்த நிலையில், அந்தக் கமலாலயக் குளத்தில் திருவாரூருக்கு ஒரு அடையாளமாக உள்ள தேர் சுற்றிவரும் அந்த நிலையில், அந்த தெப்பக் குளத்தில் படகு சவாரி ஏற்கெனவே முன்பெல்லாம் சுற்றுலாத் துறையின் சார்பாக படகு போக்குவரத்து இருந்தது. இப்போது இல்லை. அதை இந்து சமய மற்றும் அறநிலையத் துறை சார்பாக அந்தக் கமலாலயத்தில் படகு சவாரி ஏற்பாடு செய்வதோடு, மிதவைப் பூங்காவையும் அமைத்துத் தருமாறு தங்கள் வாயிலாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

பி.கே.சேகர்பாபு: 2022 ஆம் ஆண்டில் ஏற்பட்ட பெருமழை வெள்ளத்தின் போது, சுற்றுச்சுவர் படிக்கட்டுகள் இடிந்து விழுந்ததால் சாலைகள் சேதம் அடைந்திருந்த நிலையில், ஆழித் தேரோட்டத்திற்கு 20 நாட்கள்தான் இருந்தது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதன் நிலையை அறிந்து உடனடியாக, நேரடியாகச் சென்று கள ஆய்வு செய்து இந்தாண்டு ஆழித் தேர் ஓட வேண்டுமென்று உத்தரவிட்டார். 15 தினங்களிலேயே அந்த தெருவை மேம்படுத்தி, ஓடுமா? ஓடாதா? என்ற கேள்வியோடு இருந்து ஆழித் தேரை ஓட்டியப் பெருமை முதல்வர் அவர்களையேச் சாரும் என்பதை இந்தநேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன். மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுற்றுலா படகு சவாரி குறித்த கோரிக்கை தொடர்பாக சுற்றுலாத் துறையோடு கலந்துபேசி, வாய்ப்பிருந்தால் சுற்றுலாத் துறையோ அல்லது இந்து சமய அறநிலையத் துறையின் சார்பிலோ உறுப்பினருடைய விருப்பம் நிறைவேற்றித் தரப்படும் என்பதை பேரவைத் தலைவர் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

## ஊடகவியலாளர்

# மு.குணசேகரன் தந்தை முனியா மறைவு!



தருமபுரி, அக். 13-

தருமபுரி மாவட்டத் தில் பண்ட ஹள்ளி கிராமத்தின் எளிய விவசாயியான பெரியவர் முனியா அவர்கள் சிறந்த கொள்கை பற்றாளர்; முதிர்ச்சியானவர்.


'சன்' தொலைக்காட்சி செய்தி ஆசிரியர் மு.குணசேகரனின் தந்தையார். அவர் தனது 97ஆவது வயதில் சென்னை ஷெனாய் நகரில் உள்ள குணசேகரன் அவர்களது இல்லத்தில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

ஊடகவியலாளர் மு.குணசேகரன், திராவிடர் கழக துணைத் தலைவர் கவிஞர் கலி. பூங்குன்றன் அவர்களது மகளான திருமதி அன்புமதியின் வாழ்விணையர் என்பது குறிப்பிடத்தக்கது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சி.பி. பவளவண்ணன்

### அக்டோபர் 13 (1975)



சென்னை, சைதை பகுதியில் இளம் வயதிலேயே தொண்டராக பணியாற்றி கழக வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டவர்.

தலைவர் கலைஞர்மீது மாறா அன்பும் பாசமும் கொண்டவர்.

கழகம் நடத்திய அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர். பேச்சாளராகவும் விளங்கியவர்.

1964ல் சென்னை மாநகராட்சி மாமன்ற உறுப்பினராகவும் – 1967ல் சென்னை மாநகர துணை மேயராகவும் பொறுப்பு வகித்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

# தமிழகத்திற்கு உரிய தண்ணீரை திறந்து விட கர்நாடக அரசை வலியுறுத்தியும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்தும் ஆர்ப்பாட்டம்!



நாகை மாவட்டம் நாகை தலைமை தாபால் நிலையம் முன் உச்சநீதிமன்ற இறுதி தீர்ப்பின் படி கர்நாடக அரசு தமிழகத்திற்கு உரிய அளவு தண்ணீரை திறந்து விட வலியுறுத்தியும், உச்சநீதிமன்ற அறிவுறுத்தலுக்கு பின் திறக்கப்படும் குறைந்த நீரைக்கூட தடுக்கும் கர்நாடாக பா.ஜ.க. மற்றும் அமைப்புகளை கண்டித்தும், தமிழக விவசாயிகளை பற்றி கவலைப்படாத ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து நாகை தலைமை தபால் நிலையம் முன் நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவருமான என்.கௌதமன் தலைமையில் மறியல் போராட்டம் நடைபெற்றது. .உடன் தாட்கோ தலைவர் உ.மதிவாணன், மார்க்சிஸ்ட் மாவட்டச் செயலாளர் மாரிமுத்து, தி.மு.க. சார்பில் க.இராஜேந்திரன், இல.மேகநாதன், மு.லோகநாதன், சிக்கல் என்.ஆனந்த், இரா.மாரிமுத்து, எம்.ஆர்.செந்தில்குமார், எஸ்.பால்ராஜ், ஆர். துரைராஜ் மற்றும் பலர் உள்ளனர்.



தஞ்சை மத்திய மாவட்டத்தில் காவரி படுகை பாதுகாப்பு கூட்டியக்கம் மற்றும் அனைத்துக் கட்சிகள் சார்பில் தமிழகத்திற்கு காவிரியில் தண்ணீர் திறந்துவிடக்கோரி கர்நாடக அரசை வலியுறுத்தியும், தண்ணீர் வழங்கக் கூடாது என போராட்டம் நடத்தும் கர்நாடக பா.ஜ.கவையும், அவர்களை வழிநடத்தும் ஒன்றிய அரசையும் கண்டித்து நடைபெற்று முழு அடைப்பு போராட்டத்தில் தஞ்சாவூர் எல்.ஐ.சி.அலுவலகத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினர். தி.மு.க மாநகரக் கழகச் செயலாளர் சண்.இராமநாதன், மாநகர துணை மேயர் அஞ்சுகம் பூபதி, மாவட்டக் கழக நிர்வாகிகள் எல்.ஜி.அண்ணா, கனகவள்ளி பாலாஜி, மாநில விவசாய அணி துணை செயலாளர் எஸ்.ஜித்து, ஒன்றிய செயலாளர்கள் முரசொலி, செல்வகுமார், விவசாய அணி அமைப்பாளர் கோவிந்தராஜ், தோழமைக் கட்சி நிர்வாகிகள் சொக்கா ரவி, கண்ணன், செந்தில்குமார், தமிழ்ச்செல்வன், அமர்சிங், ஜெயக்குமார், அண்ணாதுரை உள்ளிட்ட விவசாய சங்க பிரதிநிதிகள், கழகத் தோழர்கள், தோழமைக் கட்சியினர் திரளாக கலந்து கொண்டனர்.




டெல்டா விவசாயிகளுக்கு காவிரியில் தண்ணீர் திறந்து விடக்கோரி கர்நாடக அரசை வலியுறுத்தியும், தண்ணீர் திறக்கக் கூடாது என போராட்டம் நடத்தும் கர்நாடக பா.ஜ.கவையும், மக்கள் விரோத போக்கை கையாளும் ஒன்றிய அரசைக் கண்டித்தும் தஞ்சை தெற்கு மாவட்டம், பட்டுக்கோட்டையில் நடைபெற்ற முழு அடைப்பு போராட்டத்தில் பட்டுக்கோட்டை தபால் நிலையத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினர். இப்போராட்டத்தில் தி.மு.க சார்பில் ஒன்றியக் கழகச் செயலாளர்கள் ஆர்.இளங்கோவன், வி.கோவிந்தராஜ், பொதுக்குழு உறுப்பினர் மு. ரூஸ்வெல்ட், ராஜகோபால், காங்கிரஸ் கலைச்செல்வன், சி.பி.எம்.ஆர்.டி.பழநிவேல், சி.பி.ஐ.முத்துராமன், தி.க.வீரையன், வி.சி.க. செல்வராஜ், த.மு.மு.க. இல்லியாஸ் உள்ளிட்ட அனைத்துக்கட்சி தோழர்கள் கலந்துகொண்டனர்.




தஞ்சை வடக்கு மாவட்டம், கும்பகோணத்தில் காவிரி நீரை திறக்க கர்நாடக அரசை வலியுறுத்தியும், தமிழகத்திற்கு தண்ணீர் திறக்ககூடாது என போராட்டம் நடத்தும் பாஜாகவையும், ஒன்றிய அரசையும் கண்டித்து நடைபெற்ற முழு அடைப்பு பேராட்டத்தில், கும்பகோணம் தலைமை தபால் நிலையத்தை அனைத்துக் கட்சியினர் முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினர். போராட்டத்தில் கும்பகோணம் மாநகரக் கழகச் செயலாளர் சு.ப.தமிழழகன், காங்கிரஸ் கட்சி மாவட்ட தலைவர் டி.ஆர்.உலகநாதன், சி.பி.ஐ மாவட்ட செயலாளர் மு.பாரதி, சி.பி.எம். மாவட்டச் செயலாளர் சின்னை.பாண்டியன், விடுதலைச் சிறுத்தைகள்கட்சி முல்லை, ராஜ்குமார், இந்தியன் யூனியன் முஸ்லீம் லீக் ஷாஜகான், ம.தி.மு.க இரா. ஸ்டாலின், தி.க.கு.நிம்மதி உள்ளிட்ட தி.மு.க கழக நிர்வாகிகள், அனைத்துக்கட்சி தோழர்கள் பங்கேற்று கைதாகினர். உள்படம் கும்பகோணம் பெரியக்கடைத்தெருவில் அனைத்து கடைகளும் அடைக்கப்பட்டு வெறிச்சோடியது.

### கொடநாடு பிரச்சினை:

# தவறு செய்தவர்களுக்கு நிச்சயம் தண்டனை!

## சட்டப் பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!

சென்னை, அக்.13 – சட்டப் பேரவையில் நேற்று முன்தினம் தகவல் கோரலில் உறுப்பினர் ஆர்.வைத்திய லிங்கம் கொடநாடு பிரச் சினை குறித்து பேசினார்.

இதற்கு பதிலளித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பேசியதாவது:

உறுப்பினர் ஆர். வைத்தி லிங்கம், கொடநாடு பிரச்சி னையைப் பற்றி இங்கே பேசி யிருக்கிறார். தற்போது அது சி.பி.சி.ஐ.டி. விசாரணையில் இருக்கிறது என்பது எல்லோ ருக்கும் தெரியும். அந்த சி.பி. சி.ஐ.டி. விசாரணையே நாங் கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு தான் நடைபெறத் தொடங்கியிருக்கிறது. சிறப் புப் புலனாய்வுத் துறையின் மூலம் இந்த விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகி றது. விசாரணையின் முன் னேற்றம் மற்றும் தற்போது இருக்கக்கூடிய நிலவரங் களைப் பற்றியெல்லாம் தொடர்புடைய அறிக்கை விரைவிலே நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவிருக்கி றது. எனவே, இந்த வழக் கிலே யார், யார் தவறு செய்தி ருக்கிறார்கள் என்பது மிக விரைவிலே வெளியே வரப் போகிறது. எப்படிப்பட்ட இடத்திலே இருந்தாலும், நிச் சயமாக தண்டிக்கப்படுவார் கள் என்பதை நான் உறுதி யோடு தெரிவித்துக் கொள்கி றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கூறினார்.

### காவேரி படுகை மாவட்டங்களில் காவேரி நீர் வழங்காத பா.ஜ.க. ஒன்றிய அரசைக் கண்டித்து

# புதுக்கோட்டை மாவட்ட அனைத்து விவசாய சங்கங்களின் சார்பில் மறியல் போராட்டம்!

## மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் தலைமையில்! 5000க்கும் மேற்பட்டோர் கைது செய்து விடுதலை!

புதுக்கோட்டை, அக்.13 - காவேரி படுகை மாவட்டங்களில் காவேரி நீர் வழங்காத பா.ஜ.க. ஒன்றிய அரசை கண்டித் தும் தடையாக உள்ள கர் நாடக அமைப்புகளை கண்டித்தும் மாபெரும் கடையடைப்பு மற்றும் மறியல் போராட்டம் புது க்கோட்டை இந்தியன் ஓவர்சீஸ் வங்கி எதிரில் வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டி யன் தலைமையில் நடை பெற்றது. இந்தியன் ஓவர் சீஸ் வங்கியை முற்று கையிட்டு மறியலில் ஈடு பட்ட ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டு 3 மணியள வில் விடுவிக்க ப்பட்ட னர்.

ஆர்ப்பாட்டம் மற்றும் மறியல் போராட்டத்தில் சி.பி.ஐ.(எம்) மாவட்ட செயலாளர் எஸ்.கவிவர் மன், சி.பி.ஐ. மாவட்ட செயலாளர் த.செ ங்கோ டன், ம.தி.மு.க. மாவட்ட செயலாளர் மாத்தூர் கலி யமூர்த்தி, வி.சி.க. மண் டல துணை செயலாளர் திருமாறன், வி.சி.க. மாவட்ட செயலாளர் வெள்ளைநெஞ்சன், இந் திய விவசாயிகள் சங்க மாநில செயலாளர் ஜி. எஸ்.தனபதி, கல்லணைக் கால்வாய் விவசாயிகள் சங்க தலைவர் கொக்கு மடை ரமேஷ்,

விவசாயத் தொழிலா ளர் சங்க மாவட்ட தலை வர் எஸ்.சங்கர், தமிழ் நாடு விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் ஏ.ராமையன், தமிழ்நாடு விவசாயிகள் சங்க தேசி யக்குழு உறுப்பினர் ஜீ. மாதவன், தி.மு.க. நிர்வா கிகள் மாநில இலக்கிய அணி துணை தலைவர் கவிச்சுடர் கவிதைப்பித் தன், சொத்துப் பாதுகாப் புக்குழு உறுப்பினர் அஞ் சுகா மீனாட்சி சுந்தரம், விவசாய தொழிலாளர் அணி துணை தலைவர் த.சந்திரசேகரன், வர்த்தக அணி துணை செயலாளர் செ.அசோக் பாண்டியன், விவசாய அணி துணை செயலாளர் வி.என்.மணி, தொண்டர் அணி துணை செயலாளர் சுப.சரவ ணன், விவசாய தொழி லாளர் அணி துணை செய லாளர் கே.ஆர்.என். போஸ், மாவட்ட அவை தலைவர் அரு.வீரமணி, மாவட்ட துணை செய லாளர்கள் ஞான.இளங் கோவன், பெ. ராஜேஸ் வரி, எஸ்.எஸ்.கருப் பையன், ஸ்ரீதேவி அண் ணாதுரை, அடைக்கலம்,

மாவட்ட பொருளா ளர் எம்.லியாக்கத் அலி, நகர செயலாளர் ஆ.செந் தில், ஒன்றிய கழக செய லாளர்கள் தவ.பாஞ்சா லன், மு.க.ராமகி ருஷ் ணன், மு.பி.ம.சத்திய சீ லன், ஆர்.ஆர்.எஸ்.மாரி முத்து, பொன். ராமலிங்கம், அரு.வடி வேல், அ.இளங்கும ரன், சி.சண்முகம், கே.பி.அய் யப்பன், ஆர்.ஆர்.சாமிநா தன், கீரமங்கலம் பேரூர் செயலாளர் கே.சி.சிவக்கு மார், பொதுக்குழு உறுப் பினர்கள் தென்னலூர் எம்.பழனியப்பன், என். சாத்தையா, எம்.செந்தில் குமார்,

மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் அ.ரெத்தினம். டாக்டர் மு.க. முத்துக்கருப்பன், புத்தாம்பூர் எம். சுப் பையா, பொன்.பாரி வள்ளல், சு. சுந்தர பாண்டி யன், சி.அரங்கநா யகம், வி.என்.எம். பாலு, வே.ராஜேஷ், செந்தா மரை பாலு, எம்.ராஜா, தவசுமணி முருகேசன், அ.பிரபா, எஸ்.வி.ஆர். ஜெய் ஸ்டாலின், டி.எம். ஆர்.ராமமூர்த்தி, வி.ஜி. ஆர். மணிவண்ணன், க.கவிவேந்தன், வி.என். எம்.குமரேசன், மு.கலை ஞர் கருணாநிதி, மு. இளஞ்சேரன், முகமது ரபீக், அணிகளின் தலை வர்கள் மழையூர் ராம சாமி, ராய.முத்துக்குமார், கீரை அஸ்ரப் அலி, ஆ.ராஜேந்திரசோழன், இராம.செல்வராஜ், ஏ.கே.செல்வம், சுமோ பாலு, டி. அப்புக்காளை, தட்டாம்பட்டி ஆறுமு கம், கி. சுப்பிரமணியன், கவிஞர் ஆ.மரிய எட்வின், எம்.கே.அறிவுடைநம்பி, மா.மணிவேலன், எம். டி.ராமசாமி, செ.ரமேஷ், பாரி, அன்புச் செல்வன், கலையரசன், மு.ராஜ துரை, தெய்வானை, ராயல் சபா, முரளிதரன், பழனிவேலு, ராமச்சந்தி ரன், கண்மணி சுப்பு, விஜ யக்குமார், ஆர்.எம். சத்யா, பிரபு, செல்வராஜ், அருண்குமார், செல் லையா, செ.கணேஷ், ஞானவேல், மகேந்திரன், ஹரிகரன், ஆசைத்தம்பி, சுதாகர், ஐயப்பன், மணி கண்டன். தங்கவேல், உள் ளிட்ட ஏராளமான கழக முன்னோடிகள், மற்றும் அனைத்து விவசாயிகள் சங்கத்தை சேர்ந்த 5000 மேற்பட்டோர் கலந்து கொண்டனர், இந்தியன் ஓவர்சீஸ் வங்கியை முற்று கையிட்டு மறியல் செய்த 1000 க்கும் மேற்பட் டோர் கைது செய்ப்பட்டு பிற்பகல் 3 மணியளவில் அனைவரும் விடுவிக்கப் பட்டனர்.


**பெருநகர சென்னை மாநகராட்சி**
**மின்துறை**

கலைஞர் 100 1924 - 2023

த.தொ.நு.மை.ந.க.எண்.சி1/2257/2023 **மறு e - ஒப்பந்தப்புள்ளிகள்**

கீழ்கண்ட பணிகளுக்கு இரண்டு உறை முறையில் மேற்பார்வை பொறியாளர், மின்துறை பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களால் கோரப்படுகிறது.

**To purchase 12 No's of Oracle Database Enterprise Edition Software for use of Greater Chennai Corporation with one year support** – க்கான ஒப்பம்

| | |
|---|---|
| பணியின் மதிப்புத் தொகை 5,66,61,792/- | ஒப்ப முன் வைப்புத் தொகை 5,66,618/- |

ஒப்ப படிவங்கள் http://tntenders.gov.in என்ற இணையதளம் மூலம் பதிவிறக்கம் செய்யலாம். நிறைவு செய்யப்பட்ட ஒப்பபுள்ளிகள் சமர்ப்பிக்க இறுதி நாள் மற்றும் நேரம் 30.10.2023 அன்று பிற்பகல் 3.00 மணி

ஒப்பம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் 31.10.2023 அன்று பிற்பகல் 3.15 மணி

செ.ம.தொ.இ / 5570 / ஒப்பந்தப்புள்ளி / 2023 கண்காணிப்பு பொறியாளர் / மின்சாரம்


## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பா. மனோகரன்

**அக்டோபர் 13 (2020)**



1986ஆம் ஆண்டு கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு கழகப் பணியாற்றியவர்.

மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், பொதுக்குழு உறுப்பினர் என கழகத்தில் பொறுப்புகளை வகித்தவர்.

1989ல் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் சிவகங்கை தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, அத்தொகுதிக்கு பணியாற்றி, அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### திருக்குவளையில் கலைஞர் நூற்றாண்டு விழா!

# பொறியாளர் அணி சார்பில் பொறியியல் மாணவர்களுக்கான பேச்சுப் போட்டி!

## மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் தொடங்கி வைத்தார்!

நாகை, அக்.13 - நாகை மாவட்ட தி.மு.க. பொறியாளர் அணி சார் பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற் றாண்டு விழாவை முன் னிட்டு பொறியியல் மாண வர்களுக்கான பேச்சுப் போட்டி திருக்குவளை அண்ணா பொறியியல் கல் லூரியில் நடைபெற்றது. பேச்சுப் போட்டி தொடக்க விழாவிற்கு நாகை மாவட்ட பொறியா ளர் அணி அமைப்பாளர் கேஸ் வி.செந்தில் தலைமை தாங்கினார். மாவட்ட பொறியாளர் அணி தலை வர் ஏ.இராஜேதிரபிரசாத், துணை அமைப்பாளர்கள் ஆர்.ராஜ்குமார், துரை. பாலகுரு, என்.செந்தில்கு மார், கே.திலீபன் ஆகி யோர் முன்னிலை வகித் தன்h. மாவட்ட பொறி யாளர் அணி துணைத் தலைவர் எஸ்.சண்முகரா ஜேஸ்வரன் வரவேற்றார். பேச்சு போட்டியை நாகை மாவட்டக் கழகச் செயலா ளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவர் என்.கௌதமன் தொடங்கி வைத்து சிறப்புரையாற்றி னார். தொழில்நுட்பக் கல் விகுத் தோள் கொடுத்த கலைஞர், தொழில்து றையை உயர்த்திய தமிழி னத் தலைவர், திராவிட மாடலும், திறன்மிக்கக் கல்வியும், தெற்குச்சூரி யன், காலைஞரும் தமிழும் என்ற தலைப்பில் பேச்சு போட்டி நடைபெற்றது. போட்டியின் நடுவர்களாக நாகை நாகராஜன், வை. மனோகர், வீ.ராஜராஜன் ஆகியோர் இருந்து போட் டிகளை நடத்தினார்கள். போட்டியில் வெற்றிப் பெற்றவர்களுக்கு தாட்கோ தலைவர் உ.மதி வாணன், மாநில பொறியா ளர் அணி துணை செயலா ளர்கி.சரவணன் ஆகியோர் போட்டியில் வெற்றிப் பெற்றவர்களுக்கு பரிசு களை வழங்கினார்கள். தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் இல.மேக நாதன், க.ராஜேந்திரன், திருக்குவளை பொறியியல் கல்லூர் முதல்வர் இளங் கோவன், மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜி.மனோகரன், மாநில சிறு பான்மை அணி அணி துணை அமைப்பாளர் காகுல்ஹமீது, மாவட்டக் கழக துணைச் செயலாளர் கோ.ரவிச்சந்திரன், ஒன்றி யக் கழகச் செயலாளர்கள் ஆ.தாமஸ்ஆல்வாஎடிசன், சோ.பா.மலர்வண்ணன், மகா.குமார், உதயம் வே.முருகையன், வேளாங் கண்ணி பேரூர் செயலாளர் மரியசார்லஸ், பொதுக் குழு உறுப்பினர்கள் இல. பழனியப்பன், கோ. சிவக் குமார், மாவட்ட மாண வர் அணி அமைப்பாளர் ப.உதயகுமார், மாவட்ட சார்பு அணி துணை அமைப்பாளர்கள் மா.மீ. அன்பரசன், டேனியல்சத் தியா, லோகு, ஜோதிபாசு திருக்குவளை கிளை நிர்வா கிகள் பி.தியாகராஜன் உள் ளிட்ட பலர் கலந்து கொண்டனர் முடிவில் மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பா ளர் கே.சுதாகர் நன்றி கூறி னார்.

# தமிழ்நாடு சட்டப்பேரவையில் திருக்குறள்



சென்னை, அக். 13 -

தமிழ்நாடு சட்டப் பேரவையில் பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் நேற்று முன்தினம் (11.10.2023) படித்த திருக்குறளும் - அதற்கான 'கலைஞர் உரை'யும் வருமாறு:-

**"வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்கும் கல்."**

**கலைஞர் உரை** : பயனற்றதாக ஒருநாள்கூடக் கழிந்து போகாமல், தொடந்து நற்செயல்களில் ஈடுபடுபவருக்கு வாழ்க்கைப் பாதையைச் சீராக்கி அமைத்துத் தரும் கல்லாக அந்த நற்செயல்களே விளங்கும்.

### தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழாவையொட்டி

# கழக சட்டத்துறை சார்பில் 3வது மண்டல பேச்சுப்போட்டி!

## சட்டத்துறை செயலாளர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. அறிவிப்பு!

சென்னை, அக். 13 -

தமிழ்நாடு முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்களின் அறிவுரைக்கிணங்க தி.மு.க. சட்டத்துறைச் சார்பில் "தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா" வினையொட்டி 3வது மண்டல பேச்சுப் போட்டி நடைபெறுகிறது என தி.மு.க. சட்டத்துறைச் செயலாளர் மூத்த வழக்கறிஞர் என். ஆர்.இளங்கோ, எம்.பி., அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

"தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா"வினையொட்டி தி.மு.க. சட்டத்துறையின் சார்பில்,சட்டக் கல்லூரி மாணவர்கள் மற்றும் மூன்று ஆண்டுகளுக்குட்பட்ட இளம் வழக்கறிஞர்களுக்கான பேச்சுப் போட்டிகளை கீழே குறிப்பிட்டுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது. போட்டிகள் தமிழில் மட்டுமே நடத்தப்படும்.

**போட்டிகளுக்கான தலைப்புகள் பின்வருமாறு**

1.கலைஞரின் பார்வையில் சமூக நீதி,

2.கலைஞரின் பார்வையில் மாநிலசுயாட்சி,

3.கலைஞரின் பார்வையில் மகளிர் முன்னேற்றம்,

4.கலைஞரின் பார்வையில் தொழில் வளம்,

5.கலைஞரின் பார்வையில் கல்வி.

மேற்சொன்ன இந்த ஐந்து தலைப்புகளில் ஏதேனும் ஒரு தலைப்பினை போட்டி துவங்குவதற்கு முப்பது நிமிடங்களுக்கு முன்பு போட்டி நடத்தும் நடுவர்கள் அறிவிப்பார்கள்.

அந்த தலைப்பினை ஒட்டியே போட்டியாளர்கள் ஐந்து நிமிடங்களுக்குமிகாமல் தமிழில் பேசிடவேண்டும். மாநிலம் முழுதும் உள்ள சட்ட கல்லூரிகளை ஆறு மண்டலங்களாகப் பிரித்து, ஒவ்வொரு மண்டலத்தில் நடைபெறும் தேதி, இடம் ஆகியவை ஏற்கனவே அறிவிக்கப்பட்டது.

அதில் முதல் மண்டல பேச்சுப் போட்டி நடைபெற்று முடிந்ததைத் தொடர்ந்து தற்போது 3வது மண்டலப் பேச்சுப் போட்டி கீழே குறிப்பி டப்பட்டுள்ள விவரத்தின்படி நடைபெறும்.

போட்டிகளுக்கான பரிசு விவரம். ஒவ்வொரு மண்டலத்திலும்

முதல் பரிசு - ரூபாய் 50,000/ தங்கப் பதக்கம், சான்றிதழ்,

இரண்டாம் பரிசு - ரூபாய் 25,000/ வெள்ளிப் பதக்கம், சான்றிதழ்,

மூன்றாம் பரிசு - ரூபாய் 15,000/தாமிரப் பதக்கம், சான்றிதழ்,

இரண்டு ஆறுதல் பரிசு - ரூபாய் 5,000/ வெண்கலப்பதக்கம், சான்றிதழ். வழங்கப்படும்.

இவ்வாறு ஒவ்வொரு மண்டலத்திலும் நடைபெறும் பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்ற முதல் மூன்று பரிசு பெற்றவர்களுக்கான (சட்டக் கல்லூரி மாணவர்கள் மற்றும் இளம் வழக்கறிஞர்கள்) "மாநில அளவிலான இறுதிப் போட்டி" வருகிற 6.12.2023 (புதன்கிழமை) அன்று நீலாங்கரை, "ஆர். கே.கன்வென்ஷன் சென்டரில்" நடைபெறும்.

மாநிலத்தில் உள்ள சட்டக் கல்லூரி முதல்வர்கள் தங்கள் கல்லூரியிலிருந்து பங்கு பெற விரும்பும் மாணவர்களின் பட்டியலினை, தங்கள் மண்டலத்தின் போட்டி நடைபெறும் நாளுக்குமுன்புகீழே குறிப்பிடப்பட்டுள்ள "பேச்சுப் போட்டி ஒருங்கிணைப்பாளர்களிடம்" ஒப்படைக்க வேண்டுகிறோம். தவிர்க்க முடியாத காரணங்களால் பெயர் அளிக்க முடியாத மாணவர்கள் போட்டி நடக்கும் இடத்தில் நேரடியாக உரிய அடையாள அட்டை அல்லது கல்லூரி முதல்வரின் அனுமதி கடிதத்துடன் கலந்து கொள்ளலாம்.

இறுதிப் போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெறும் சட்டக் கல்லூரி மாணவர்கள் மற்றும் வழக்கறிஞர்களுக்கு

முதல் பரிசு - ரூபாய் 1,00,000/ தங்கப் பதக்கம், சான்றிதழ்,

இரண்டாம் பரிசு - ரூபாய் 50,000/ வெள்ளிப் பதக்கம், சான்றிதழ்,

மூன்றாம் பரிசு - ரூபாய் 30,000/ தாமிரப்பதக்கம், சான்றிதழ்,

இரண்டு ஆறுதல் பரிசு - ரூபாய் 10,000/= வெண்கலப்பதக்கம், சான்றிதழ்.

**பேச்சுப்போட்டி ஒருங்கிணைப்பாளர்கள்**

கே.எஸ்.இரவிச்சந்திரன் - சட்டத்துறை இணைச் செயலாளர் -9840022250

ஜெ.பச்சையப்பன் - சட்டத்துறை துணைச் செயலாளர் -9840260178

கே.சந்துரு - சட்டத் துறை துணைச் செயலாளர் - 9444006999

கே.ஜே.சரவணன் - தலைமைக் கழக வழக்கறிஞர் -9841057345

3வது மண்டலபேச்சுப் போட்டி

போட்டி நடைபெறும் தேதி, இடம் ஆகிய விவரங்கள்

14.10.2023 - (மாணவர்கள்) 1. அரசு சட்டக் கல்லூரி, சேலம் (இடம்)

2. அரசு சட்டக் கல்லூரி, வேலூர்

3. அரசு சட்டக் கல்லூரி, தருமபுரி

4. அரசு சட்டக் கல்லூரி, கோயமுத்தூர்

5. மத்திய சட்டக் கல்லூரி, சேலம் (தனியார்)

6. அரசுசட்டக்கல்லூரி, நாமக்கல்

7. கே.எம்.சி. சட்டக்கல்லூரி, திருப்பூர் (தனியார்)

8. ஈரோடுசட்டக்கல்லூரி, ஈரோடு (தனியார்)

9. காருண்யாபல்கலைக் கழகம், கோயமுத்தூர்

15.10.2023 - (வழக்கறிஞர்கள்) - தகுதி -வேலூர், திருப்பத்தூர், இராணிப் பேட்டை, கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், கோவை, நாமக்கல், திருப்பூர், ஈரோடுஆகியமாவட்டங்களைச் சேர்ந்த பதிவு செய்து மூன்று ஆண்டுகளுக்கு மிகாமல் உள்ள இளம் வழக்கறிஞர்கள் இடம் - கலைஞர் அறிவாலயம், சேலம் மாவட்டக் கழக அலுவலகம், சேலம்.



# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

### ஒன்றிய – நகர – பகுதி – பேரூர் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் பொறுப்புகளுக்கான நேர்காணல்

### இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

ஒன்றிய – நகர – பகுதி – பேரூர் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் பொறுப்புகளுக்கு அனைத்துக் கழக மாவட்டங்களில் இருந்தும் விண்ணப்பங்கள் வந்துள்ளன. அவற்றில் மண்டலம்–5, மண்டலம்–6 மற்றும் மண்டலம்–7–ல் உள்ள மாவட்டக் கழகங்களில் மேற்கண்ட பொறுப்புகளுக்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்காணல் கீழ்க்கண்டவாறு நடைபெறுகின்றது.

திருப்பூர் தெற்கு, திருப்பூர் வடக்கு மாவட்டக் கழகங்களுக்கு வருகிற 16.10.2023 திங்கள்கிழமையும், கரூர், பெரம்பலூர், அரியலூர் மாவட்டக் கழகங்களுக்கு வருகிற 17.10.2023 செவ்வாய்க்கிழமையும், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர், மாவட்டக் கழகங்களுக்கும், காரைக்கால் மாநிலத்துக்கும் வருகிற 18.10.2023 புதன்கிழமையும், தஞ்சாவூர் மத்திய, தஞ்சாவூர் வடக்கு, தஞ்சாவூர் தெற்கு மாவட்டக் கழகங்களுக்கு 19.10.2023 வியாழக்கிழமையும், புதுக்கோட்டை வடக்கு, புதுக்கோட்டை தெற்கு மாவட்டக் கழகங்களுக்கு 20.10.2023 வெள்ளிக்கிழமையும், நேர்காணல் நடைபெறும். விண்ணப்பித்தவர்கள் அனைவரும் நேர்காணலில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

| வ. எண் | கழக மாவட்டம் | நாள் | நேரம் | இடம் |
|---|---|---|---|---|
| 1 | திருப்பூர் தெற்கு | 16/10/2023 | காலை 9.00 மணி | கலைஞர் அறிவாலயம், தாராபுரம் சாலை, பழவஞ்சிப்பாளையம், திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக அலுவலகம். |
| 2 | திருப்பூர் வடக்கு | 16/10/2023 | மதியம் 2.00 மணி | ஜெகா கார்டன் முத்துகிருஷ்ணன் திருமண மண்டபம், அங்கேரிப்பாளையம், வெங்கமேடு, வி.கே.அரசு மேல்நிலைப்பள்ளி எதிரில், திருப்பூர். |
| 3 | கரூர் | 17/10/2023 | காலை 9.00 மணி | ஆர்த்தி அழகம்மை மால், திண்ணப்பா தியேட்டர் அருகில், கரூர். |
| 4 | பெரம்பலூர் | 17/10/2023 | மதியம் 2.00 மணி | மாவட்டக் கழக அலுவலகம், பெரம்பலூர். |
| 5 | அரியலூர் | 17/10/2023 | மாலை 4.00 மணி | |
| 6 | மயிலாடுதுறை | 18/10/2023 | காலை 9.00 மணி | சிக்நேச்சர் மினி ஹால், சீர்காழி சாலை, நாங்குடி, மயிலாடுதுறை. |
| 7 | நாகப்பட்டினம் | 18/10/2023 | மதியம் 12.00 மணி | |
| 8 | காரைக்கால் மாநிலம் | 18/10/2023 | மதியம் 2.00 மணி | |
| 9 | திருவாரூர் | 18/10/2023 | மதியம் 3.00 மணி | |
| 10 | தஞ்சாவூர் மத்திய | 19/10/2023 | காலை 9.00 மணி | கலைஞர் அறிவாலயம், தஞ்சாவூர். |
| 11 | தஞ்சாவூர் வடக்கு | 19/10/2023 | மதியம் 12.00 மணி | |
| 12 | தஞ்சாவூர் தெற்கு | 19/10/2023 | மதியம் 2.00 மணி | |
| 13 | புதுக்கோட்டை வடக்கு | 20/10/2023 | காலை 9.00 மணி | சாரதா கிராண்ட், எமரால்டு ஹால், முதல் தளம், கீழராஜ வீதி, ஸ்டேட் பாங்க் அருகில் புதுக்கோட்டை. |
| 14 | புதுக்கோட்டை தெற்கு | 20/10/2023 | மதியம் 2.00 மணி | |

நேர்காணலில் கலந்துகொள்ள வரும் விண்ணப்பதாரர்கள் ஒவ்வொருவரும் தங்களுடைய வயதை நிரூபிப்பதற்கான கல்விச் சான்றிதழ், ஆதார் அட்டை, கழக உறுப்பினர் அட்டை, இளைஞர் அணி போன்ற கழக அமைப்புகளில் ஏற்கெனவே பணியாற்றியிருந்தால், அதுதொடர்பான புகைப்படத் தொகுப்பு மற்றும் ஆவணங்களைக் கொண்டு வருமாறு கேட்டுக் கொள்கிறோம்.

"அன்பகம்"
சென்னை – 18.
நாள் : 11–10–2023.

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர், தி.மு.க. இளைஞர் அணி

### தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மூலம் மாநிலத்தில் 16 இடங்களில் புகார் பெட்டிகள்!

# 6000 புகார் மனுக்கள் மீது நடவடிக்கைக்கு-தனியாக குழு அமைப்பு!

## பேரவையில் - க. கணபதி கேள்விக்கு-வீட்டுவசதித்துறை அமைச்சர் சு.முத்துசாமி பதில்!

சென்னை, அக்.13-

சட்டப் பேரவையில், அக்.10 அன்று கேள்வி நேரத்தின்போது மதுரவாயல் தொகுதி கழக உறுப்பினர் க.கணபதி தொடுத்த வினாவுக்குப் பதிலளித்த வீட்டுவசதித் துறை அமைச்சர் சு.முத்துசாமி, "தமிழ்நாடு முழுவதும் வீட்டுவசதி வாரியம் சார்பில் 16 இடங்களில் வைக்கப்பெற்ற புகார் பெட்டிகளின் மூலம் வரப்பெற்ற 6 ஆயிரம் புகார் மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்க தனியே ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது" என அறிவித்தார்.

சட்டப்பேரவையில் இது குறித்து நடைபெற்ற விவாதம் வருமாறு:-



**க. கணபதி**: மதுரவாயல் சட்டமன்றத் தொகுதியில், தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய இடத்தில் பல தரப்பட்ட மக்கள் பல ஆண்டுகளாகக் குடியிருந்து வருகிறார்கள். அதற்கு NOC வேண்டுமென்று பல முறை நாங்கள் முறையிட்டிருக்கிறோம். கடந்த கூட்டத்தொடரில், அமைச்சர் அவர்கள் அதற்காக ஒரு குழு அமைத்து, அதற்கான பணிகளைத் துவங்க உள்ளோம் என்று உறுதி அளித்திருந்தார்கள். அதேபோல, சென்னையில் 16 இடங்களில், ஆங்காங்கே புகார் மனுக்கள் பெறும் பெட்டிகள் வைக்கப்பட்டு, அவற்றின்மூலம் பொதுமக்களிடமிருந்து பல ஆயிரம் மனுக்கள் பெறப்பட்டுள்ளன. ஆகவே, அது எந்த நிலையில் இருக்கிறது. சோழிங்கநல்லூர் உள்ளிட்ட சென்னை மாநகராட்சியில் உள்ள அனைத்து இடங்களிலும் இதுபோன்ற நிலை உள்ளது. பல ஆயிரம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். பல ஆண்டுகளாக இந்த இடத்திலே குடியிருந்தும்கூட பட்டா பெற முடியவில்லை. வீடுகட்ட முடியாத நிலை உள்ளது. அந்த வீடு document செய்யப்பட்டிருந்தாலும்கூட, அதனை இடித்துவிட்டுக் கட்டும் நிலைகூட இல்லை...

ஏனெனில் NOC இல்லாமல் approval கிடைப்பதில்லை. ஆகவே அமைச்சர் அவர்கள் அதற்கு உரிய நடவடிக்கை எடுப்பாரா?

**அமைச்சர் சு. முத்துசாமி**: நிறைய பிரச்சினைகள் இதுபோல வந்தன. 30 ஆண்டுகளுக்கு முன்னால், வீட்டுவசதி வாரியத்தால் ஒரு notice வழங்கப்பட்டுள்ளது. அதற்குப்பின், வீட்டு வசதி வாரியத்தால் மேல் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. ஆனால், அந்த இடத்தை விற்பதற்கு அவர்கள் உரிமை இழக்கிறார்கள். ஆனால், வீடுகள் அவர்களின் கைகளில் தான் உள்ளன. நீதி மன்றத்தில் சில பிரச்சினைகள் நிலுவையில் உள்ளன. எனவே, அந்த நிலச் சொந்தக்காரர்களுக்கு பலவித மான பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. வீட்டு வசதி வாரியத்திற்கும் பல பிரச்சினைகள் ஏற்பட்டன. இவற்றையெல்லாம் ஒருங்கிணைத்து, ஒரே நடவடிக்கையாக எடுப்பதற்கு எந்த முயற்சியும் இல்லாமல் இருந்தது. முதலமைச்சர் அவர்களுக்கு இதுபோன்ற ஒரு மனு வந்த போது, 'இப்பிரச்சினைக்கு ஒரு முற்றுப் புள்ளி வைக்க வேண்டும், அவை எல்லாவற்றையும் ஒன்றாக இணைத்து, ஒரு நியாயமான நடவடிக்கையை எடுங்கள்' என்று எங்களுக்குச் சொன்னார்கள். அதற்குப் பிறகு, மாநிலம் முழுவதும், 16 இடங்களில் புகார் பெட்டிகள் வைக்கப்பட்டன. அந்தப் புகார் பெட்டிகளின் வாயிலாக, 6,000 மனுக்கள் பெறப்பட்டு, பிரித்து வைக்கப்பட்டுள்ளன. அதற்காக தனியே ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அக்குழு, அந்த மனுக்களை எடுத்து ஆய்வு செய்து, அவற்றின்மீது உரிய நியாயமான நடவடிக்கை, அதாவது வீட்டுவசதி வாரியத்திற்கும் பிரச்சினை ஏற்படாமல், நிலச்சொந்தக் காரர்களுக்கும் உரிமை விட்டுப்போகாமல் பார்த்துக்கொள்ளும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எனவே, மிக விரைவில், அது குறித்து முழுமையான தீர்வு காணப்படும்....

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.

### சென்னையில் மகளிர் மாநாடு:

# விழுப்புரம் வடக்கு மாவட்டக் கழகத்தினர் திரளாக பங்கேற்பு!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் கே.எஸ்.மஸ்தான் அறிவிப்பு!

செஞ்சி அக் 13-

விழுப்புரம் வடக்கு மாவட்டச் செயலாளரும், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சருமான செஞ்சி மஸ்தான் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

கலைஞரின் நூற்றாண்டு பிறந்தநாள் விழாவை முன்னிட்டு திமுக மகளிர் அணி சார்பில் மகளிர் உரிமை மாநாடு நாளை (அக்டோபர் 14ஆம் தேதி சனிக்கிழமை) மாலை 3 மணி அளவில் சென்னை நந்தனம் ஒய். எம் .சி. ஏ. திடலில் நடைபெறுகிறது.

இதில் தி.மு.க. கழக தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்று உரையாற்றுகிறார்.

மாநாட்டில் முன்னாள் தேசிய காங்கிரஸ் கட்சி தலைவர் சோனியா காந்தி, காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் பிரியங்கா காந்தி, ஜம்மு -காஷ்மீர் முன்னாள் முதல்வர் மெகபூபா, தேசியவாத காங்கிரஸ் கட்சியின் செயல் தலைவர் சுப்ரியா சுலே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் அரசியல் தலைமை குழு உறுப்பினர் சுபாஷினி அலி, இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் ஆனிராஜா உள்ளிட்ட இந்தியா கூட்டணி கட்சிகளின் மகளிர் தலைவர்கள் சிறப்புரை ஆற்றுகின்றனர். பெண் உரிமை போற்றும் இந்த மாநாட்டில் விழுப்புரம் வடக்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாவட்ட மகளிர் அணி, மகளிர் தொண்டரணி நிர்வாகிகள், மாநில, மாவட்ட, தி.மு.க. மகளிர் அணி நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கிளைக் கழக திமுக மகளிர் அணி நிர்வாகிகள், உட்பட அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ள வேண்டும் என இவ்வாறு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



திருச்சியில் மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி தலைமையில், மாநகரச் செயலாளர் அன்பழகன், கிழக்கு மாநகரச் செயலாளர் மதி வாணன், மாவட்ட ஊராட்சி தலைவர் தர்மன் ராஜேந்திரன், மாவட்டத் துணைச் செயலாளர்கள் விஜயா ஜெயராஜ், கருணாநிதி, லீலா, வேலு, செங்குட்டுவன் மற்றும் கழக நிர்வாகிகள் செவந்த லிங்கம், கிராப்பட்டி செல்வம், கலைச்செல்வி, கண்ணன், புத்தூர் தர்மராஜ், ராம்குமார், மோகன் தாஸ், போட்டோ கமால், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் கவிதா, மகளிர் தொண்டரணி அமைப்பாளர் மதனா வரதன், டோல்கேட் சுப்பிரமணி, அண்ணாதுரை வீரப்பன், சந்திரமோகன், தர்மராஜ், ராஜ்முகமது, ரமேஸ், சின்ன அடைக்கன் உட்பட கூட்டணிக் கட்சி நிர்வாகிகளோடு காவிரி விவகாரம் தொடர்பாக ஒன்றிய பா.ஜ.க. அரசை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

எதிர்க்கட்சித் தலைவர் உட்பட எதிர்க்கட்சி உறுப்பினர்கள் திட்டமிட்டு கலகம் செய்திருக்கிறார்கள்!

# உட்கட்சிப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள்!

## அவைக்கு குந்தகம் ஏற்படுத்திய எதிர்க்கட்சி உறுப்பினர்களை வெளியேற்றிய பின் - பேரவைத் தலைவர் மு.அப்பாவு விளக்கவுரை!

சென்னை, அக் 13-

சட்டப்பேரவையில் நேற்று முன்தினம் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி, எதிர்க்கட்சி துணைத் தலைவர் இருக்கை சம்பந்தமான பிரச்சினையை எழுப்பி பேசிய போது அ.தி.மு.க. உறுப்பினர்கள் ஒட்டு மொத்தமாக எழுந்து கூச்சலிட்டும், பேரவைத் தலைவர் இருக்கையை சூழ்ந்து கொண்டும் தரையில் அமர்ந்தும் அவை நடவடிக்கைக்கு குந்தகம் ஏற்படுத்தும் விதமாக நடந்து கொண்டதையடுத்து எதிர்க்கட்சி அ.தி.மு.க. உறுப்பினர்கள் அனைவரையும் அவைக் காவலர்களைக் கொண்டு வெளியேற்றினார் பேரவைத் தலைவர்.

இதனையடுத்து பேரவையில் பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் விளக்கமளித்து பேசியதாவது:

3 நாட்கள் நடைபெறும் சட்டமன்றக் கூட்டத்தொடரிலும், எதிர்க்கட்சித் தலைவர் உட்பட எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனைவருமே கலகம் செய்ய வேண்டும், விவகாரம் செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு வந்திருக்கின்றார்கள். அதோடு மட்டுமல்ல, அவர்களுடைய கட்சிப் பிரச்சினைகளை இந்தச் சட்டமன்றத்தில் தீர்த்து வைக்க வேண்டுமென்று அவர்கள் விரும்புகின்றார்கள். ஒருபோதும் இந்தச் சட்டமன்றம், அவர்களுடைய உட்கட்சி விவகாரங்களிலே, தலையிட்டதும் இல்லை. இனியும் தலையிடப்போவதும் இல்லை.

ப.தனபால் தெளிவாக குறிப்புரை கொடுத்து இருக்கிறார்.

இந்தப் பேரவையில் அப்படிப்பட்ட நிலை ஒருபோதும் வரவேண்டிய அவசியமும் இல்லை. அவர்கள் பல முறை சொல்லிக்கொண்டே இருக்கின்றார்கள். இருக்கைகள் ஒதுக்குவதைப் பற்றி நான் ஏற்கெனவே சொன்ன மாதிரி, உறுப்பினர் ப.தனபால் அவர்கள் ஏற்கெனவே தெளிவாக குறிப்புரை கொடுத்திருக்கின்றார்கள். அதைப் பற்றி அவையில் பேச வேண்டிய அவசியம் யாருக்கும் இல்லை. யார், யார் எங்கு உட்கார வேண்டும் என்பது குறித்து முன்னாள் முதலமைச்சர் உட்பட இங்கு இருக்கின்ற அனைத்து கட்சி உறுப்பினர்களுக்கும் ஏற்கெனவே இடம் ஒதுக்கப்பட்டிருக்கின்றது. அதைத், திரும்ப மாற்ற வேண்டும் என்ற அவசியம் எனக்கு ஏற்பட்டால் நான் மாற்றுவேன்.

என்னுடைய அறையில் வந்து இருக்கைகள் குறித்து பேசினார்கள். தகுந்த பதில் சொல்லியிருக்கின்றேன். விதியும் அதற்கு இடம் கொடுக்கவில்லை. இந்த அவை இது வரை விதிப்படி நடைபெறுகின்றது. சட்டப்படி நடைபெறுகின்றது. ஏற்கெனவே நாம் பதிவு செய்ததைத்தான் மீண்டும் சொல்கின்றேன். நம்முடைய உறுப்பினர் ஓ. பன்னீர்செல்வம் உட்பட 11 பேர் இந்த அவையில் இரட்டை இலைச் சின்னத்தில் வெற்றி பெற்று வந்து, இரட்டை இலைக்கு எதிராக Floor testல் ஓட்டுப் போட்டதற்குப் பிறகு, Tenth Schedule of the Indian Constitutionபடி அவர்களை பதவி நீக்கம் செய்திருக்க வேண்டும். அவர்கள் தேவையென்றால் வைத்துக்கொள்கின்றார்கள். தேவையில்லையென்று சொன்னால் அவர்கள் இஷ்டத்திற்கு முடிவெடுத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

ஒரு petitionஐக் கொடுத்து 18 எம்.எல்.ஏ.க்களை பதவி நீக்கம் செய்திருக்கின்றார்கள். ஆனால், எதிர்த்து ஓட்டு போட்டவர்கள்மீது எந்த நடவடிக்கையும் அவர்கள் எடுக்கவில்லை.



இப்போது நான் நினைப்பதெல்லாம்,, இவர்கள்நாங்கள் இப்போது சண்டையில் இருக்கிறோம் என்று சொன்னார்கள். அது உட்கட்சிப் பிரச்சினை. சண்டை, சமாதானம் இல்லை. இன்னொன்று, ஆளுநர் வந்து இரண்டு பேரையும் அழைத்துச் சேர்த்து வைத்தால், இந்த அவை அன்றைக்கு யாரை எங்கு கொண்டு வைக்கும் என்று நான் என்ன முடிவு செய்ய முடியும்?

### நான்கு பிரிவுகளாக இருக்கிறார்கள்!

விதியில் இருப்பதைத் தான் நான் சொல்ல முடியுமே தவிர, அது அவர்களுடைய உட்கட்சி விவகாரம், அதில் நான் தலையிடவில்லை. அதற்காக நான் அந்தக் கருத்துகளை சொல்லவில்லை. மூன்று நாட்களாக இதே ஏற்கெனவே எதிர்க்கட்சியில் பல பிரச்சினைகள் இருக்கின்றன. 3, 4 பிரிவுகளாக இருக்கின்றன. டி.டி.வி. தினகரன் அவர்கள் தலைமையில் ஒன்று, ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் தலைமையில் ஒன்று, திருமதி சசிகலா அம்மா தலைமையில் ஒன்று, எடப்பாடி அவர்கள் தலைமையில் ஒன்று என இப்படி நான்கு பிரிவுகளாக இருக்கின்றார்கள்.

நான்கு பேருமே ஒரு புள்ளியில் ஒத்தக் கருத்தாகத்தான் பேசிக் கொண்டிருக்கிறார்கள். ஒன்றிய அரசு பிரச்சினையை எடுத்துப் பேசும்போது அதற்கு ஒரு எதிர்க்கருத்து யாரிடமும் இல்லை. எல்லோருமே அதில் ஒத்தக் கருத்தாகத்தான் இருக்கிறார்கள். நாளைக்கு சேர மாட்டார்கள் என்பது எந்த நிலையிலும் நாம் ஏற்றுக் கொள்ள முடியாது. அவர்கள் சேரவே மாட்டார்கள் என்று யாரும் உத்தரவாதம் கொடுக்க முடியாது. முதலாளி கூப்பிட்டு உட்காருங்கள் என்று சொல்லி, நான்கு பேரையும் சேர்த்துவைத்து விட்டால் நாம் என்ன செய்ய முடியும்? சேர்ந்து இருக்கட்டும், சந்தோஷம் என்றுதான் நாம் சொல்வோமே தவிர, நாம் வேறு ஒன்றும் சொல்லப் போவதில்லை.

ஆகவே, இவ்வாறு தொடர்ந்து கலகம் செய்து, கலவரம் செய்து இந்தப் பேரவையை நடத்தவிடாமல் இடையூறு செய்த காரணத்தினால் நம்முடைய அவைக் காவலர்களை அழைத்து அவர்களை வெளியேற்றம் செய்திருக்கின்றோம். ஆகவே, இதுபோன்ற நிகழ்வுகள் வருங்காலங்களில் நடைபெற்றால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும். இது ஜனநாயகத்திற்கும் ஏற்புடையதல்ல.

இந்தப் பேரவையில், இந்த அரசு கொண்டு வருகின்ற மிக அருமையான நலத்திட்டங்களையெல்லாம் மக்கள் நம்பியிருக்கின்றார்கள். ஆகவே, எந்தக் குறையும் சொல்ல முடியாத அளவிற்கு இருக்கின்ற காரணத்தினால், இடப் பிரச்சினையையும், அவர்களுடைய உட்கட்சி பிரச்சினையையும் இந்த அவையிலே வந்து முன்னெடுத்து, அதற்காக இந்த அவையைப் பயன்படுத்துவது நியாயம் இல்லை.

இவ்வாறு பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் விளக்கமளித்து பேசினார்.

# கும்பகோணம் தொகுதியில் பட்டா வழங்கிட - விரைவில் தகுந்த நடவடிக்கை!

## சட்டப் பேரவையில் - க.அன்பழகன் கேள்விக்கு - அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் பதில்!

சென்னை, அக். 13 -

சட்டப் பேரவையில், 10.10. 2023 அன்று கேள்வி நேரத்தின்போது, கும்பகோணம் தொகுதி கழக உறுப்பினர் சாக்கோட்டை க.அன்பழகன், தமது தொகுதியில் பட்டா வழங்கிட வேண்டியது குறித்து வருவாய்த்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வந்து, வினாத் தொடுத்தார்.

அது தொடர்பான விவாதம் வருமாறு:-

**க.அன்பழகன்:** தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் சட்டமன்றத் தொகுதி, திருநாகேஸ்வரம் பேரூராட்சிக் குட்பட்ட சன்னபுரம் மற்றும் அணக்குடி ஆகிய கிராமங்களில் 3 தலைமுறைகளுக்கும் மேலாக சுமார் 2,000 பொது மக்கள் வாழ்ந்து வருகின்றனர். வருவாய் ஆவணங்கள் ESR, UDR ஆகியவற்றில் உள்ள குடியிருப்புகளின் நிலைப்பாடு குறித்து ஏற்பட்ட தவறுகளை நீக்கி, OSR பதிவேட்டின்படி, மேற்கண்ட இடங்கள் குறித்து ஒட்டுமொத்த கிராமத்தையும் மறுஅளவீடு செய்திட வேண்டும். குடியிருப்புப் பகுதியாக இருந்ததை எவ்வித ஆதாரமுமின்றி கோயில் நிலமாக வகைப்பாடு செய்து பதிவேட்டில் தவறுதலாகப் பதிவேற்றம் செய்ததால், அறநிலையத் துறையால் அந்தப் பகுதி மக்கள் பெரும் பாதிப் படைகிறார்கள். இதுகுறித்து பொதுமக்களுடைய 60 வருடக் கோரிக்கையினை அரசு ஏற்று முதலமைச்சர் அவர்கள் சமீபத்தில் நடந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட்டத்திலும்கூட பட்டா வழங்குவதில் விரைவாக கவனம் செலுத்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அந்த வகையில் அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதி மக்களுடைய நிலங்களுக்குப் பட்டா வழங்குவார்களா?



**அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன்:** சட்டமன்ற உறுப்பினர் இதுகுறித்து என்னிடம் பேசியிருக்கிறார். இதுபோன்று நிறைய சட்டமன்ற உறுப்பினர்கள் அவர்களுடைய பகுதியிலே பட்டா வழங்க வேண்டுமென்று என் மத்தியிலே கோரிக்கை வைத்திருக்கிறார்கள். இதையெல்லாம் பரிசீலனை செய்து தகுந்த நடவடிக்கையை நிச்சயமாக நம்முடைய அரசாங்கம் எடுக்கும்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.

வாக்குறுதியை தேர்தல் முழக்கத்தோடு நிறுத்தி விடாமல்

# சொன்னதையும் - சொல்லாத திட்டங்களையும் நிறைவேற்றி வருகிறார் முதல்வர்!

## ஈரோட்டில் 4000 பேருக்கு பட்டா வழங்கியதையொட்டி -சட்டப்பேரவையில் காங்கிரஸ் உறுப்பினர் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் பெருமிதம்!

சென்னை, அக். 13 -

சட்டப்பேரவையில் காங்கிரஸ் உறுப்பினரும், காங்கிரஸ் கட்சியின் முன்னணித் தலைவர்களில் ஒருவருமான ஈ.வெ.கி.எஸ். இளங்கோவன் அவர்கள், முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவித்து பேசினார். அப்போது அவர் ஈரோட்டில் என் வீடு உட்பட 4000 வீடுகளுக்கு இதுவரை பட்டா இல்லாமல் இருந்தோம், எங்களுக்கு பட்டா வழங்கியதற்கு நெஞ்சார்ந்த நன்றி என்று கூறியதுடன், வாக்குறுதிகளை தேர்தல் முழக்கத்தோடு நிறுத்தி விடாமல் சொன்னதையும், சொல்லாத திட்டங்களையும் முதல்வர் அவர்கள் நிறைவேற்றி வருகிறார் என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.

இதுகுறித்து ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் பேசியதாவது:-

கிட்டத்தட்ட 75 ஆண்டுக்காலமாக ஈரோடு நகரைச் சார்ந்த மக்கள் போராடி, கோரிக்கைகளாக வைத்து, அந்தக் கோரிக்கை என்பது இன்றைக்கு நம்முடைய முதல்வர் ஸ்டாலின் அவர்களுடைய காலத்திலே (மேசையைத் தட்டும் ஒலி) நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்பதைச் சொல்வதில் நான் பெருமையாகக் கருதுகின்றேன். பட்டாக்கள் என்பது ஈரோட்டிலே இருக்கின்ற கிட்டத்தட்ட 4,000 பேருக்கு



இதுவரை கிடையாது. ஆனால், இவ்வளவு ஆண்டுக் காலம் போராட்டத்திற்குப் பிறகு முதலமைச்சர் அவர்கள் அவற்றை வழங்கியிருக்கின்றார்கள் என்று சொன்னால், உண்மையாகவே நான் அவருக்கு ஈரோடு மக்களின் சார்பாக நன்றியைச் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

பேரவைத் தலைவர்: நீங்கள் வாழ்ந்து வருகின்ற 4,000 வீடுகளுக்கு இதுவரை பட்டா இல்லாமல் இருந்தது. இப்போது முதல்வர் அவர்கள் தந்திருக்கிறார்கள். அதற்கு நன்றி சொல்கிறீர்களல்லவா!

ஈ.வெ.கி.ச. இளங்கோவன்: அதுமட்டுமல்ல, இதில் என்னவொரு பெரிய விஷயமென்றால், அமைச்சர் கே.கே. எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் அவர்கள் கடந்த கூட்டத்திலே சொல்லியதைப்போல தந்தை பெரியார் அவர்களோ, பேரறிஞர் அண்ணா அவர்களோ, முத்தமிழ் காவலர் கலைஞர் அவர்களோ பணியாற்றிய அந்த வீட்டிற்கு அந்த வீட்டில்தான் இன்றைக்கு நான் இருக்கின்றேன். இதுவரை பயத்தோடுதான் இருந்தேன்; காரணம் பட்டா கிடையாது.

ஆனால், இன்றைக்குத் தான் ஈரோட்டிற்கு திரும்பிப் போகும்போது கொஞ்சம் தைரியமாக நான் செல்ல முடியும் என்பதையும் சொல்லிக்கொண்டு, நம்முடைய முதல்வர் அவர்களைப் பொறுத்தவரையில், வாக்களித்தவர்களுக்கும், வாக்களிக்காதவர்களுக்கும் கண்டிப்பாக வேறுபாடு இல்லாமல் எல்லாக் காரியங்களையும் செய்து வருகிறார்.

அமைச்சர் துரைமுருகன்: ஒரு விளக்கம் வேண்டும். அப்படியென்றால் ஐயா அவர்கள் பட்டா இல்லாத வீட்டில்தான் இருந்தார்களா? (சிரிப்பு)

ஈ.வெ.கி.ச. இளங்கோவன்: அது என்னைப் பாதிப்பதைவிட உங்களைத்தான் அதிகம் பாதிக்கும்.(சிரிப்பு) அதேபோல், கிட்டத்தட்ட 4 ஆயிரம் பேருக்கு இன்றைக்கு அறிவித்திருக்கின்றார்கள். சொன்னதையும் செய்வோம், சொல்லாததையும் செய்வோம் என்று சொன்னவர் நம்முடைய முதலமைச்சர் அவர்கள். வாக்களித்தவர்களுக்கும், வாக்களிக்காதவர்களுக்கும் நாங்கள் எல்லாவற்றையும் செய்வோம் என்பதை தேர்தல் முழுக்கத்தோடு நிறுத்திவிடவில்லை. இந்த இரண்டரை ஆண்டுகாலமாக நன்றாக செய்துகொண்டிருக்கின்றார்.

ஆகவே, நான் அதிகம் பேசவேண்டுமென்று சொன்னால், நீங்கள் அடுத்தமுறை எனக்கு வாய்ப்புத் தரமாட்டீர்கள். ஆகவே, நான் சொல்லிக்கொள்ள விரும்புவதெல்லாம், முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்கின்ற அதே நேரத்தில், பாசத்திற்குரிய அமைச்சர் K.K.S.S.R. இராமச்சந்திரன் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றிகளை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். அதோடு எங்களுடைய அமைச்சர், எங்களுடைய மாவட்டத்தினுடைய அமைச்சர் இன்னும் சொல்ல வேண்டுமென்று சொன்னால், ஈரோடு மாநகர என்னுடைய தொகுதிக்கும் சேர்த்து அவர்தான் எம்.எல்.ஏ. சு. முத்துசாமி அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அமைச்சர் K.K.S.S.R. இராமச்சந்திரன் அவர்களுக்கும் என்னுடைய நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டு, அதேநேரத்தில், எ.வ.வேலு அவர்களிடத்தில் சில கோரிக்கைகளை காலையில் வைத்தேன். அதை செய்து கொடுப்பார் என்ற நம்பிக்கையோடு விடை பெறுகின்றேன்.

இவ்வாறு ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் பேசினார்.

# அத்திக்கடவு - அவினாசி திட்டப்பணிகள் முடிந்து விட்டன!

## பேரவையில் அமைச்சர் துரைமுருகன் தகவல்!

சென்னை, அக்.13 -

அத்திக்கடவு - அவினாசி திட்டப் பணிகள் எல்லாம் முடிந்துவிட்டன என்று சட்டப்பேரவையில் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

அத்திக்கடவு - அவினாசி திட்டம் குறித்து எஸ்.பி.வேலுமணி எழுப்பிய கேள்விக்கு நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் அளித்த பதில் வருமாறு:-

உறுப்பினர் எஸ்.பி. வேலுமணி அவர்கள் நான் அன்றைக்கு பதில் சொல்லும்போது, அவர் இல்லையென்று கருதுகிறேன். அத்திகடவுஅவினாசி திட்டத்தைப் பொறுத்தவரையில் அந்தத் திட்டத்தை நீங்கள் கொண்டு வந்தீர்கள் என்பதை யாரும் இல்லையென்று சொல்லவில்லை. எல்லா வேலைகளும் முடிந்துவிட்டது, ஆனால் பணம்



கொடுக்காமல் போய்விட்டீர்கள். ஒன்று pipe கொண்டு போவதற்கு ஆட்சேபணை எழுந்தது. இரண்டாவது, நீங்கள் pipeஐ கொண்டு போய் விடுங்கள் நாங்கள் பயிர் செய்து கொள்கிறோம் என்று சொன்னது. இதுபோன்று இரண்டு, மூன்று கோரிக்கைகள் எல்லாம் நிறைவேற்றப்பட்டு, இப்போது ready ஆக இருக்கிறது. நாளைக்குகூட start செய்யலாம். இதோ சொல்கிறேன். காலிங்கராயன் channelக்கு 1.5. டி.எம்.சி. தண்ணீர் எடுக்க வேண்டும். Pump செய்தால்தான் தண்ணீர் போகும். நமக்கு காவிரியிலிருந்து தண்ணீர் இன்னும் வரவில்லை. காவிரியிலிருந்து தண்ணீர் திறந்து விட்ட மறுநாள் காலிங்கராயன் channelக்கு அடுத்த நாளே open செய்கிறோம்.

அடுத்து, நீங்கள் கேட்ட இரண்டாவது திட்டத்தைப் பொறுத்தவரையில், இந்தத் திட்டம் முடிந்த பிறகு, அந்தத் திட்டம் எடுத்துக்கொள்ளப்படும். அதற்கான ஆய்வுகள் எல்லாம் மேற்கொண்டு இப்போது ready ஆக வைத்திருக்கிறோம்.

இவ்வாறு அமைச்சர் துரைமுருகன் அவர்கள் பதிலளித்தார்.

மணப்பாறை நகரத்தில் குடிநீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு!

# ரூ.178 கோடி மதிப்பீட்டில் குடிநீர்க் குழாய்கள் மாற்றப்படுகின்றன!

## சட்டப்பேரவையில் அமைச்சர் கே.என்.நேரு பதில்!

சென்னை, அக்.13-

சட்டப்பேரவையில் மணப்பாறை தொகுதியில் குடிநீர் பிரச்சினைக்கு தீர்வு காண உறுப்பினர் அப்துல் சமது வலியுறுத்தினார். இதற்கு அமைச்சர் கே.என்.நேரு பதிலளிக்கையில் ரூ.178 கோடி மதிப்பில் குடிநீர் குழாய்கள் மாற்றப்பட்டு குடிநீர் பிரச்சினைக்கு தீர்வு காணப்படுகின்றன என்று பதிலளித்தார்.

இதுகுறித்து விவாதம் வருமாறு : -

**ப.அப்துல் சமது:** உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின்கீழ் என்னுடைய மணப்பாறை தொகுதிக்கு எனது கோரிக்கையை ஏற்று, சாலைகள், மருத்துவமனை கட்டடம், மழைநீர் வடிகால் உள்ளிட்ட பணிகளுக்காக 50 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியதற்காக முதலமைச்சர் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய மணப்பாறை தொகுதி காவிரி பாயக்கூடிய திருச்சி மாவட்டத்தில் இருந்தாலும் வெள்ளப்பெருக்கு காலத்தில்கூட அந்தக் காவிரி நீர் வராத ஒரு மேட்டுப் பகுதியாக மணப்பாறை தொகுதி இருக்கிறது. அந்தப் பகுதிக்குக் குடிநீர் இல்லாமல் மக்கள் அவதிப்பட்ட காலத்தில் 1996ல் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான் அந்த மக்களுக்குக் குடிநீரை வழங்கினார்கள்.



அதை இந்த நேரத்தில் நான் நன்றியோடு தெரிவித்துக்கொள்கின்றேன். இப்போது அவர் போட்டுக் கொடுத்த அந்தக் குழாய் 27 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில் உடைப்பெடுத்து இன்றைக்குக் குடிநீர் கிடைக்காமல் அந்த மக்கள் அவதிப்படக்கூடிய நிலை வந்திருக்கிறது. மணப்பாறை நகரத்திற்கு மட்டும் 17 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புனரமைப்புப் பணிகள் மறுசீரமைப்புப் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. மருங்காபுரி, வையம்பட்டி, மணப்பாறை ஒன்றியம், பொன்னம்பட்டி பேரூராட்சிப் பகுதிகளுக்குக் குடிநீர்த் தட்டுப்பாடு இருக்கிற காரணத்தால் மிகப்பெரிய பிரச்சினை இருக்கிறது. எனவே, என்னைவிட எனது தொகுதியைப்பற்றி நன்கறிந்த நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க இதைச் சீர்செய்து தருவார்களா?

**அமைச்சர் கே.என்.நேரு:** உறுப்பினர் அப்துல் சமது சொன்னது ஏற்கெனவே தலைவர் கலைஞர் அவர்கள் 1996 ஆம் ஆண்டு இருந்தபோது 100 ரூபாய் செலவிலே மணப்பாறை நகரம் மணப்பாறை பகுதி முழுவதும் அன்றைக்கு மருங்காபுரி தொகுதி என்று பெயர். மற்ற தொகுதிகளைக் காட்டிலும் 900 hamlets இருக்கின்ற பகுதி. 900 குக்கிராமங்கள் அடங்கிய பகுதி. அனைத்துப் பகுதிகளுக்குமே இந்தக் குடிநீரைக் கொண்டுவந்து நம்முடைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அன்றைக்குத் தந்தார்கள்.

அது 27 ஆண்டுகாலம் ஆகிவிட்ட காரணத்தால் ஆங்காங்கே பழுதுகள் road extension, பல இடங்களிலே pipeline உடைக்கப்பட்டிருக்கிறது.

எனவே, அதனை மாற்றியமைக்கப்பட வேண்டுமென்பதற்காகத்தான் நம்முடைய முதலமைச்சர் இன்றைக்கு 178 கோடி ரூபாய் அதற்காக நிதியொதுக்கி பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எனவே, retrofitting மூலமாக அனைத்துக் குழாய்களும் மாற்றப்படுவதற்குநீங்கள் ரோடுக்குப் போனீர்களென்றாலே, குழாய்களெல்லாம் அங்கே கிடக்கின்றன என்பதைப் பார்த்தீர்களென்றால் தெரியும்; வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன.

விரைவிலே அந்தப் பணிகளை முடித்து குடிநீர் தருகிற பணியை நாங்கள் செய்கிறோம். இதனுடைய வரலாறு என்னவென்று சொன்னால், முதலில் எம்.ஜி.ஆர். முதலமைச்சராக இருந்தபோது ஒரு திட்டம் கொண்டு வந்தார்கள். அந்தத் திட்டம் கொண்டுவந்த போது மணப்பாறைக்குக் குழாய்கள் போடப்பட்டன. ஆனால், அந்தக் குழாய்கள் முழுவதும் உடைந்துவிட்டன. மீண்டும் கலைஞர் அவர்கள் வந்துதான் மணப்பாறை நகரத்திற்கே புதிய குழாய்கள் போட்டுக் கொடுத்தார்கள். எனவே, அன்றைக்குக் கலைஞர் தந்தார். இன்றைக்கு நமது முதலமைச்சர் அவர்கள் 178 கோடி ரூபாயிலே குழாய்கள் மாற்றப்பட்டிருக்கின்றன. விரைவிலே சீர் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.





நவீன தமிழ்நாட்டின் சிற்பி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் சென்னையில் எழுப்பப்பட்ட பண்பாட்டு அடையாளங்களுக்கும், அறிவு சார்ந்த கட்டிடங்களுக்கும் அரசுப் பள்ளி மாணவச் செல்வங்களை அழைத்துச் செல்லும் “கலைஞர் வழித்தடத்தில் ஒரு பயணம்” எனும் மாணவச் செல்வங்களுக்கான ஒருநாள் கல்விச் சுற்றுலாவை சென்னை, வள்ளுவர் கோட்டத்தில் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தொடங்கி வைத்தார். பள்ளிக் கல்வித்துறை இயக்குனர் முனைவர் க.அறிவொளி, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் மார்ஸ் ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டார்கள்.

முரசொலி பாசறை

கோவை 13.10.2023

# திராவிட சினிமா

**27**

**திராவிடக் கொள்கைகளை, சமதர்ம நோக்கங்களை, சமூகநீதிச் சிந்தனைகளைத் திரைத்துறை மூலம் மக்களிடம் கொண்டு சேர்த்தனர் நமது முன்னோடிகள். அந்த வகையில் திரைப்படம் என்கிற நவீன ஊடகத்தின் மூலம் அரசியல் மாற்றத்துக்கான திருப்புமுனைகளை உருவாக்கின, திராவிடம் பேசிய திரைப்படங்கள். அந்த வரலாற்றை மீண்டும் வாசிக்கத் தருகிறது திராவிட சினிமா.**

■ **வீ.மா.ச.சுபகுணராஜன்**



## ‘முன்னத்தி ஏர்’ ஆசைத்தம்பி!



படம் - உதவி : ஞானம்

திராவிட சினிமா குறித்த ஆய்வில், இதுவரை அதன் முதன்மைப் பங்களிப்பாளர்களும் திசை வழிகாட்டிகளுமான பேரறிஞர் அண்ணா அவர்கள் தீட்டிய திரைக்காவியங்கள் தொடங்கி, அவர் வழி தொடர்ந்து திராவிடச் சினிமாவை அதன் சாத்தியங்களின் எல்லைவரை வளர்த்தெடுத்த கலைஞர் அவர்களின் திரை ஓவியங்களைத் தொடர்ந்தோம்.

கலைஞர் திரைப்படங்களைத் தொடர்ந்த நம் பயணம், 1967-ஆம் ஆண்டை எட்டிவிட்டது. இடைப்பட்ட காலத்தில் கலைஞர் திரைக்கதை வசனம் எழுதிய ‘நாம்’ (1953), ‘தாயில்லாப் பிள்ளை’ (1961), ‘மறக்க முடியுமா?’ (1966) ஆகிய திரைப்படங்களை இணையதளங்களில் கண்டடைய இயலவில்லை. இளவயது முதல் என் நினைவில் நிலைத்து நின்ற கலைஞரின் ‘காகித ஓடம் கடலலை மீது போவது போலே மூவரும் போவோம்’ எனும் காவிய சோகத்தை உருவாக்கிய பாடலைக் கொண்ட திரைப்படம் ‘மறக்க முடியுமா’ இழப்பும் காவிய சோகம்தான்.



நிற்க, திராவிட சினிமாவில் பங்களிப்பு செய்த ஆளுமைகளில் சிலரையேனும் நினைவில் இருத்துவது ஒரு ஆய்வுமுறைமையின் நேர்மையெனக் கருதுகிறேன். அந்த வகையில், முதலாவதாக, இந்த ஆண்டு நூற்றாண்டு காணும் ஏ.வி.பி.ஆசைத்தம்பி அவர்களின் பங்களிப்புக் குறித்துப் பார்க்கலாம்.

### முன்னத்தி ஏரின் இதழ்ப் பணி

ஆசைத்தம்பி அவர்கள் திராவிடர் கழகத்தில் தொடங்கி, திராவிட முன்னேற்றக் கழகம் வரை தொடர்ந்தவர். கலைஞர், கண்ணதாசன் ஆகியோருடன் அதே காலவெளியில் (1948-1952) மாடர்ன் தியேட்டர்ஸ் நிறுவனத்தின் கதை இலாகாவில் பணியாற்றியவர். அவரது திரையுலகப் பங்களிப்பு இரண்டு வகையானது. ஒன்று, திரைத்துறையில் நேரடியாகப் பணி செய்தது. இரண்டாவது, **‘திராவிடச் சினிமா’** என்ற பெயரிலேயே 1955-ஆம் ஆண்டு முதல் 1963-ஆம் ஆண்டு வரை திரைப் பத்திரிக்கை நடத்தியவர் என்பது. இந்த இரண்டாவது பங்களிப்புக்கு நான் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன்.

மறைந்த அன்புத் தம்பி முனைவர் பாவேந்தனுடன் இணைந்து, **‘திராவிட சினிமா’** நூல் தொகுப்பினை உருவாக்கிய போது அந்த ‘திராவிட சினிமா’ எனும் பெயரை ஆசைத்தம்பி அவர்கள் அதே பெயரில் நடத்திய இதழிலிருந்தே நன்றியுடன் இரவல் பெற்றோம்.

இந்த முன்னத்தி ஏர் செய்த இதழ்ப் பணி மகத்தானது. இன்று ‘திராவிட சினிமா‘ என்று திராவிட இயக்கத்தவர் உருவாக்கிய திரைப்படங்களை அடையாளம் காண்பதும், ஆய்வுப் பொருண்மையாக்குவதும் பெரிதல்ல. ஆனால், அந்தத் திரைப்படங்கள் உருப்பெற்றுக் கொண்டிருந்த காலத்திலேயே அவற்றைத் ‘திராவிட சினிமா’ என வகைமைப் படுத்தியது பெருமிதத்துக்குரியதும், அரிதானதுமாகும். அன்றைய நாளில் **தேசிய சினிமா, தெய்வீக சினிமா** எனும் வகைமைகள் அடையாளம் காணப்படவோ பேசப்படவோ இல்லை.

### திசை வழிகாட்டிய தலையங்கம்

ஆசைத்தம்பியின் திராவிட சினிமா குறித்த அரசியல் புரிதலுக்கு அவரது 05.09.1956 தேதி இதழின் தலையங்கமே சாட்சி. அந்தத் தலையங்கம் இப்படிச் சொல்கிறது:

“ஒரு நாளில் திரைத்துறையின் அத்தனை துறைகளையும் பார்ப்பனர்களே ஆக்கிரமித்திருந்தனர். ஆனால், இப்போதோ ‘சுயமரியாதைக் கட்சியின் இடைவிடாத முயற்சியால் காலம் மாறியது. திரைப்பட உலகத்தில் மறுமலர்ச்சி ஏற்பட்டது. புராணப் படங்கள் பார்ப்பாரற்று இருக்கும் பரிதாபநிலை ஏற்பட்டது.

கதை எழுதவா? வசனம் அமைக்கவா? பாடல் எழுதவா? பாட்டுப் பாடவா? ஆடல் அமைக்கவா? ஆடவா? நடிக்கவா? ஆகிய அத்தனையிலும் பிராமணரல்லாத திராவிடர்கள் திறமையால் மேலோங்கி வந்துவிட்டனர்!.

பத்திரிக்கைத் துறையில்கூட ஆரிய ஆனந்த விகடனுக்கு நிகர் வேறு கிடையாது என்று இருந்த இறுமாப்பான நிலையைத் திராவிட ‘குமுதம்’ சுக்குநூறாக நொறுக்கி விட்டது. இதன் பேரில் மனம் புழுங்கி அடிவயிறு எரிய, பொறாமை நெஞ்சை அறுக்க ஆனந்த விகடன், திராவிட நடிகர்களான எம்.ஜி.ராமச்சந்திரன் - சிவாஜி கணேசன் இடையே ‘இவர்கள் சந்தித்தால்’ எனும் பெயரில் ‘கற்பனைக் கதை’ எழுதி, அதில் ‘பார்ப்பனச் சிண்டு முடியும்’ வேலையைச் செய்திருக்கிறது. இப்படிக் கழிசடைத்தனமாக எழுதுவதன் மூலம் முன்போல விலைபோகாத தன் சரக்கின் விற்பனையையும் உயர்த்திட முயற்சிக்கிறது....

விகடரே வேண்டாம் இந்தக் குரங்குப் புத்தி. இரட்டைக் குழந்தை படக் கம்பெனி உம்மிடம் இருக்கிறதே! உம்மால் ஒரு சிவாஜியையோ, எம்.ஜி.ஆரையோ உருவாக்க முடிந்திருக்கிறதா? இல்லை ஒரு இளங்கோவனைப் போல, ஒரு கலைஞர் கருணாநிதியைப் போல ஒரே ஒரு வசன கர்த்தாவை உற்பத்தி செய்ய முடிந்ததா?”.

இந்தத் தலையங்கம் நமக்கு விளக்கும் செய்தி, ‘திராவிட சினிமா’ அது உருப்பெறும் காலத்திலேயே, பல்வேறு திரைத்துறை சார்ந்த சேவைகளில் ஈடுபட்டிருந்தோர், ஒரே வேளையில் அவற்றைத் தமது சொந்த ஆக்க முயற்சியாகவும், பொதுவான திராவிடத் திசைவழிப் பயணத்தின் பகுதியாகவும் கவனத்தில் கொண்டே செயல்படுத்தினர் என்பதே.

**இறுதியில் அமைச்சரை வீழ்த்தி, நாட்டை ‘திராவிட சினிமா’ வகுத்த வழியில் முடியரசை கலைத்துக் குடியர சாக்குகிறார்கள்.**

### ஒரே குலம் ஒன்றே நீதி

திரைத்துறை ஆக்கப் பணியில் நேரடிப் பங்களிப்பு என்ற வகையில் ஆசைத்தம்பி அவர்களது பெயர் சொல்லும் படைப்புச் சொற்பமானதே. 1951 ஆம் ஆண்டில் மாடர்ன் தியேட்டர்ஸ் தயாரிப்பில், டி.ஆர்.சுந்தரம் இயக்கத்தில் எம்.ஜி.ஆர், அஞ்சலிதேவி, நம்பியார், நாகையா, டி.பி.முத்துலட்சுமி நடிப்பில் உருவான வெற்றிப் படமான **‘சர்வாதிகாரி’** படத்தின் வசனகர்த்தா அவர்தான்.

போரால் நாட்டின் பொருளாதாரம் அழிந்து அல்லலுறும் மக்களின் துயர் போக்க ராணுவத்தைக் கலைக்கத் திட்டமிடும் படைத் தளபதிக்கும், பொம்மை அரசனை முற்றாக வீழ்த்தி சர்வாதிகாரி ஆக மீண்டும் போருக்குத் தள்ளும் அமைச்சர் ஆகியோருக்குமான அரசியலே கதைக் களம்.

இறுதியில் அமைச்சரை வீழ்த்தி, நாட்டை ‘திராவிட சினிமா’ வகுத்த வழியில் முடியரசை கலைத்துக் குடியர சாக்குகிறார்கள். இறுதியான அறிவிப்பு, ‘இனி நாட்டில் சாதி இருக்காது. ஒரே நீதியிருக்கும். சர்வாதிகாரம் இருக்காது. சமத்துவம் இருக்கும். குலம் ஒன்றுதான். கடவுளும் அப்படியே. கண்மூடிப் பழக்கமெல்லாம் மண்மூடிப் போகும்‘ என்கிறது.

...படம் விரியும்

## எளிய மக்களின் குரல் உலகின் காதுகளை எட்டாது!

இஸ்ரேல் - பாலஸ்தீனப் பிரச்சினை மீண்டும் விஸ்வரூபம் எடுத்துள்ள நிலையில், இரண்டு தரப்பிலும் நிகழும் தாக்குதல்களால் மிகப்பெரிய அளவில் உயிர்ச் சேதங்கள் நிகழ்ந்து வருகின்றன. அந்த நிலப்பரப்புக்கு உரிமை கொண்டவர்கள் யார் என்பதில் பெரும் சிக்கல் நீடிக்கும் நிலையில், உலக நாடுகள் இஸ்ரேல் பக்கமும், பாலஸ்தீனம் பக்கமும் அணி சேர்வது சிக்கலின் அடுத்த கட்ட அபாயத்துக்கு வழி வகுக்கின்றன. இந்த நிலையில் இஸ்ரேல்- பாலஸ்தீனப் பிரச்சினையில் பல பக்கங்களை அலசுகிறது **‘நைல் முதல் ஃபுராத் வரை’** என்கிற இந்த நூல். **‘சமரசம்’** இதழில் வெளியானபோதே வரவேற்பைப் பெற்ற இந்தக் கட்டுரைகளைத் ‘துருவம் பதிப்பகம்’ நூலாக வெளியிட்டுள்ளது.




**புதுமடம் ஹலீம்** எழுதிய இந்த நூலுக்கு அணிந்துரை அளித்துள்ள எழுத்தாளர் முத்துகிருஷ்ணன். “பாலஸ்தீனத்தில் தங்களின் கட்டை விரலை எடுத்து வைத்த யூதர்கள் எப்படி மெல்ல மெல்ல தங்களின் கால், கை, உடல் என மொத்த நிலத்தையும் ஆக்கிரமித்து அந்த நிலத்தின் பூர்வக்குடியான பாலஸ்தீன மக்களை அதனைச் சுற்றிய நாடுகளுக்கு விரட்டி அகதிகளாக மாற்றியிருக்கிறார்கள், சொந்த நாட்டில் எஞ்சி வாழுகிறவர்களும் அகதிகளாகவே உரிமையற்றவர்களாக ஒடுக்கப்பட்டவர்களாகவே வாழ்கிறார்கள் என்பதை உணர வைக்கும் நூல்.

இந்தப் புத்தகத்தை வாசித்து முடிக்கும் நேரம் என் மனதில் அரபு நாடுகள், மத்தியத் தரைக்கடல் நாடுகள், ஆப்பிரிக்க நாடுகளின் ஒற்றுமையின்மைதான் இந்தப் பிரச்சினை இத்தனை பெரும் வரலாற்று விஸ்வரூபம் எடுப்பதற்கு வழிவகுத்துள்ளது. இஸ்லாமிய நாடுகள் முழுமையிலும் இருக்கும் குடிமைச் சமூகத்தில் ஜனநாயகம் வராத வரை பாலஸ்தீனத்திற்கு ஆதரவான எளிய மக்களின் குரல் அங்கிருந்து ஒரு போதும் வெளி உலகின் காதுகளை எட்டாது” எனக் குறிப்பிடுகிறார்.

## ஃப்ளாஷ்பேக்



### சலவை நோட்டு சால்வை!

நெருக்கடி நிலை அமலிலிருந்த காலத்தில், வெட்ட வெளியில் பொதுக்கூட்டங்கள் நடத்தத் தடை விதிக்கப்பட்டிருந்தது. கழக மூத்த தலைவர்கள் பெரும்பாலானோர் கைது செய்யப்பட்டு மிசா கைதிகளாகச் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்கள். இப்படியான காலகட்டத்தில் தலைவர் கலைஞர் அவர்களை 1977-ஆம் ஆண்டு வேலூர் மாவட்டத்துக்கு அழைத்து கிருஷ்ணா திரையரங்கத்தில் ஒரு கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தோம். நெருக்கடி நிறைந்த சூழலிலும் தொண்டர்களை உற்சாகமூட்டும் வகையில் அவரது பேச்சு அமைந்திருந்தது. அந்தச் சமயத்தில் மாவட்டப் பிரதிநிதியாக இருந்த நான் தலைவர் அவர்களுக்குப் பண நோட்டுக்கள் கொண்ட சால்வையை அணிவித்து மகிழ்ந்தேன்.



முகமது சகி

**-தி.அ. முகமது சகி,**
**மாநிலங்களவை முன்னாள் உறுப்பினர்,**
**அவைத் தலைவர், வேலூர் மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண்: 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in


## கருவூலம்

### தம்பிக்குக் கடிதம்!

**1955-ஆம் ஆண்டு, மே மாதம் 8-ஆம் தேதியில் இருந்து ‘திராவிட நாடு’ இதழில் ‘தம்பிக்குக் கடிதம்’ எழுதத் தொடங்கினார் பேரறிஞர் அண்ணா. தம் தோழர்களை தம்பிகளாகக் கருதி, அவர்களுக்குப் பல துறைகளில் பயிற்சி அளிக்கவும், கட்சியை வளர்க்கவும் அண்ணா ‘கடித இலக்கியம்’ படைத்தார். 15 ஆண்டுகளில் எழுதப்பட்ட 290 கடிதங்களில் அண்ணா மிகப்பெரிய அரசியல் எழுச்சியை ஏற்படுத்தினார். இடையில் சில ஆண்டுகள் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட கடிதங்கள் ‘ஹோம்லேண்ட்’, ‘ஹோம் ரூல்’ இதழ்களிலும் வெளிவந்தன.**

## திராவிடத்தால் வாழ்கிறோம்

**268**




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131